ILAKKANA PRAYOGA VILAKKAM

OR

A COMPANION

TO

ANGLO-VERNACULAR STUDENTS.

இலக்கணப் பிரயோக விளக்கம்:

BY

Pundit P. S. D. MUTTUSAWMY PILLAI,

Author of "Ellakana Manimalai"

new method for teaching Tamil, English and Geography to children, 4 to 10 years of age";
"A guide to Europeans, learning to speak Tamil," &c., &c.

PUBLISHED BY

K. T. PAUL, B.A., L.T.,

English Tutor, Madras Christian College.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

FIRST EDITION.

Madras:

PRINTED BY THOMPSON AND CO., AT THE "MINERVA" STEAM PRINTING WORKS,
33, BROADWAY, MADRAS.

1905.

[Price : 6 As.] *(All Rights Reserved.)* [விலை : 6 அணா.

இலக்கணப் பிரயோக விளக்கம்.

இதனுள்

வாக்கியாங்கச் சேதன விலக்கணம்,

சொல்லிலக்கணம்,

சொன்முடி பிலக்கணம்,

பதப்புணர்ச்சி யிலக்கணம்,

பொருட்புணர்ச்சி யிலக்கணம்,

பகுபதமுடி பிலக்கணம்,

வினைவிகற்ப விலக்கணம்,

எழுத்திலக்கணம்

முதலிய எண்வகை இலக்கணங்கள்

அடங்கி யிருக்கின்றன.

Greetings to my countrymen, *Tamil Students*, for the Twentieth Century (1905 A.D.)

MY DEAR FRIENDS.

I HAVE heard it said by Europeans, that our Vernacular is, next to the Chinese, the most difficult language in the world. Even our own young men preparing for University Examinations complain that Tamil gives them more trouble than any of their other subjects of study. As Munshy to several Missionaries and Civil and Military Officers, I have had opportunities of showing to the former class the error of their opinion. But what is the cause of the difficulty with the latter? I have no doubt that all parents are aware of it. When examinations were instituted and every encouragement was given for education, Indian parents naturally made their children study the English language to the neglect of their Vernaculars. The consequence was that when the students went up to the higher classes, they found the Vernacular extremely difficult in their advanced curricula of studies. To make the matter worse, the College Munshies in a majority of cases, unlike the European Professors, prove unequal to the task of creating an interest in the subject in the minds of the students. Thus it has come to happen that the difficulty of the Vernacular with Indian students, is mostly of their own making. I trust that with the *Twentieth Century* a better order of things will begin. I hope that all of you will set yourselves to study the Vernacular equally well with your other examination subjects, even in the lower classes. For as Tamil literature, unlike that of English is based on the grammar of the language, it will be difficult for you to cope with advanced studies, unless you have thoroughly mastered the latter in the Lower Secondary and High School classes. The most important parts of Grammar in the earlier stages, are the analysis of sentences, parsing, &c., given in this book in eight sections. I have worked these out for your benefit. If you learn this method of treatment, you will find it helpful in the study of Tamil literature in the higher classes.

I pray that God may lead you, dear friends, into all knowledge and wisdom, and bless your young lives with prosperity and success.

I am, My dear friends,
Yours sincerely,

ST. THOMAS' MOUNT,
24th August, 1904.

The Author

INTRODUCTION

Grammar is the study of the structure of a language and the functions of its parts. A pursuit of this study may be extended to the minutest anatomy and a correspondingly extensive morphology. The mental training afforded by such an application will undoubtedly be great. However, there is another, a more practical value of Grammar. The greatest anatomist cannot create a living organism: but a study of Grammar, not necessarily academic, but followed on suitable lines, enables one to make language.

There is no lack of grammars of the academic sort in the Tamil language. The great need is an **applied-grammar.** Grammatical phenomena are studied in the class-room with just the remote interest that is bestowed on the laws of natural philosophy. The rules of Grammar are not viewed with the eye of the artist who needs their use constantly in the practice of his art. Herein is the vital difference between "English" and "Tamil" as taught in Indian schools. The teacher is at great pains to make his pupils assimilate every rule of English grammar not merely in memory but also in usage, by making them to construct correct expressions and to detect errors. For similar rules in the mother tongue, an effort of memory is all that is extended. Therefore, far from any interest being created, in the majority of cases a positive distaste is engendered; and what little is got up by compulsion is completely forgotten when the freedom of college life is reached.

To remedy this defect is the object of this work. Here, Grammar is treated from the point of view of "composition." Appropriately, therefore, the first section is devoted to the analysis of sentences—an adaptation of the English method. Then the relation of word in the sentence is to be taught by means of parsing, both etymological and syntactical. Sometimes in unison with Grammatical form and sometimes at variance, stands the relation of ideas; a consideration of this subject really belongs to the realm of logic, but is sanctioned by the usage of the strict grammarians. Tamil being an agglutinative language, one who would compose in it must needs learn also the rules of the combination of letters and the analysis of words. In all languages the most valuable and yet the most intricate subject is probably the

Verb ; a masterly analysis of it is also provided. The final chapter is on the value of letters, for, a defective alphabet and the rule of quantity, instead of accent, render pronunciation, reading and writing very liable to errors.

The rules of composition and rhetoric require these sections. To construe aright and to compose clearly, a knowledge of analysis is needed; to put the right word in the right place, parsing should be known; a study of the relation of ideas is obviously indispensable; words have to be studied for a proper command of emphasis, stress, elision and extension; a scientific knowledge of letters would prevent certain very common but none the less disgraceful errors in speaking and writing; and no style worth the name can be acquired without a thorough knowledge of the Verb. Not the least credit is due to the appendix wherein the author provides certain glossaries to help students out of the errors of spelling and reading which they most often commit.

The matter in the book is intended for the Upper Primary and the Lower and even the Upper Secondary classes. While any one section can be taught to any of these classes, the more difficult and minute portions of each section should be reserved for the highest forms. Unless used properly, this work of a teacher of forty-six years' experience can be of little benefit. To make the pupils get by rote the rules and the long lists would be to defeat entirely the object of the work. In a subject of this sort, quantity is of the least importance. The teacher should make a judicious selection of material and presenting it to the class, encourage the pupils to compose and construct and correct and analyse with perfect freedom. He should rise above the feeling that he is teaching 'only Tamil' and deal with the subject with the attention that an English professor devotes to his language.

The 'neglect of Tamil' has been the lament of two generations, but there have undoubtedly arisen in recent years signs which indicate a turn of the tide. If but the heads of institutions would rise to the occasion and bestow a personal interest and attention on the way in which the Vernacular part of the daily routine is carried out in their schools, the undoubted 'renaissance' will be hastened and its substantial excellence ensured.

K. T. PAUL.

OPINIONS.

From the Rev. N. Devasahayam, B.A., Pastor, E. L. Mission Church, Pursawakam, Madras—

I have examined Pundit Muttusawmy Pillai's Ilakkana Prayoga Vilakkam. It is a field quite new and untouched as yet by any Tamil Grammarian. The virgin soil is for the first time, so far as I know, ploughed and improved by a person who in my opinion is every way competent for the work. An experience of nearly half a century of teaching the Tamil language has suggested to the Author new and original methods of imparting knowledge with ease and clearness on several of the abstruse portions of Tamil Grammar. This manual is in close touch with the systems developed in the best works on the English language. Therefore, its introduction in schools, is calculated to give an impetus to the scientific teaching of translation in the two languages. Besides, students who carry a blameable ignorance in the fundamentals of the Tamil language even up to the *Senior B.A. Class* will become scarce, if this book were well-handled from the *first* up till the *sixth* form.

From M.R.Ry. S. Anavaratha Vinayagam Pillai Avl., M.A., L.T., Tutor, Madras Christian College; and a Chief Examiner in Tamil for the Madras University—

Thank you very much for your copy of the "*Ilakkana Prayoga Vilakkam.*" Although I cannot altogether conclude from a perusal of the work, that it deals with a subject quite new to the Tamil Grammarians, I cannot but admit that the treatment you have given the subject is quite new and much more scientific than what it has yet received at the hands of even such eminent scholars as Armuka Navalar. One peculiar feature about your plan is that it is at once clear and simple. I think you have with advantage applied the English method to the Tamil language and I trust your book will prove very serviceable to grown up boys who may have picked up some knowledge of English but at the same time may not be well grounded in Tamil. In fine, I have only to say that your book, if taught in the Lower Secondary and Upper Secondary forms, would produce a better generation of scholars who will take to the study of Tamil Literature.

From Vithvau A. S. Jagarow Mudaliar, Head Tamil Pundit, St. Mary's College, Madras; author of *தேம்பாவணி விருத்தியுரை*, *இலக்கண சிந்தாமணி* &c., &c.

நிலைமண்டில ஆசிரியப்பா

சந்தனப் பொதிகைச் செந்தமிழ் முனிபால்
பைந்தமி ழியலோ ரைந்தையு மோர்ந்த
ஆறிரு புலவருள் வீறுறு புலமை
யல்காப் புகழ்மைசால் தொல்காப் பியமுனி
தன்பெய ரானிறீஇத் தந்தரு ளிலக்கண
வழிவழி யடைவே வந்தன பலவுஞ்
சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைத்
திண்ணிதி னுணர நுண்ணிதிற் றெரித்து
வகுத்துந் தொகுத்தும் வகைபட விரித்துஞ்
சூத்திர முறையா யாத்தன வதனு
னுச்சிமேற் புலவர்கொ ளச்சினார்க் கினியமு
முளம்பூ ரணம்பெறு மிளம்பூ ரணமு
மானு வரைநிகர் சேனு வரையமு
முதலிய வுரையா னுதலிய பொருடெரீஇ
மொழித் திறத்தாய முட்டறுப் பதுவே
யறிவார்க் கலது சிறியார்க் கரிது
வென்னு நோக்கமே தன்னு ளுந்தலான்
கத்திய வடிவுல கத்திய ரேன்றித்
திசையெலாம் பரவத் திசையெனுந் தொகையிற்
பகுத்துய ராங்கிலோ பதப்பெயர்ப் புடனே
பன்னுண் முயன்று பன்னுட் பயனுக்
கற்றூர் விருப்புற மற்றூர் வியப்புற
இலக்க ணப்பிர யோக விளக்கமென்
றெருநூ லெழுதா வெழுத்திற் பொறித்தனன்
சுரிமுகச் சங்கஞ் சொரிதரு நித்திலம்
பொருதிரைக் கரத்தா விருகரை கொழிக்கும்
பூவிரி வளம்புனற் காவிரி யாறு
மதுப்புனல் விரவிப் புதுப்புனற் செவிலித்
தாயெனப் பைங்கூழ்ச் சேயினை வளர்க்கு
முளமகிழ் சோழ வளநாட் டணியா
மாண்புயூர் தொண்ட மான்புதுக் கோட்டை
யென்னு நல்லூரன் மன்னு நல்லூர
னையர் திரிபற வருங்கலை யுணர்ந்த
தலைப்புகழ் முத்துச்சாமி நாவலனே.

CONTENTS—சூசிப்பத்திரம்.

		பக்கம்.
1.	வாக்கியாங்கச் சேதன விலக்கணம்	1-11
2.	சொல்லிலக்கணம்	12-37
3.	சொன்முடிபிலக்கம்	
4.	பதப்புணர்ச்சி யிலக்கணம்	37-42
5.	பொருட்புணர்ச்சி யிலக்கணம்	
6.	பகுபதமுடி பிலக்கணம்	42-57
7.	வினைவிகற்ப விலக்கணம்	58-68
8.	எழுத்திலக்கணம்	68-77

APPENDIX A.—E.

9.	வாக்கியாங்கச்சேதன விலக்கணத்திற்குஇங்கிலீஷ்மொழி பெயர்ப்பு (For the guidance of Europeans)	78-82
10.	எழுத்திலக்கணத்திற்கு இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு (For the guidance of Europeans)	83-88
11.	வல்லினமிகும்' இடங்கள், மிகாவிடங்கள்	89-95
12.	மொழிகளில் ர, ற என்னும் எழுத்துகள் மாறிவருவதினால் உண்டாகும் பொருட்பேதங்கள்	96-99
13.	மொழிகளில் ல, ழ, ள என்னும் எழுத்துகள் மாறிவருவதினால் உண்டாகும் பொருட்பேதங்கள்	99-102
14.	மொழிகளில் ன, ண என்னும் எழுத்துகள் மாறி வருவதினால் உண்டாகும் பொருட்பேதங்கள்	102
15.	தமிழ் மொழியின் வரலாறு	103-107

ANALYSIS.

வாக்கியாங்கச் சேதன விலக்கணக் குறிப்பு.

1. ஒருவன் தன் மனதிலுள்ள கருத்தை, வார்த்தைகளினால், பூரணமாக வெளிப்படுத்திச் சொல்வது அல்லது எழுதுவது ஒரு வாக்கியமாம்.

2. ஒரே சொல் ஒரு கருத்தைக் கொடுக்குமாயின், ஒரு வாக்கியமாம். உதாரணம்: வருகிறான்.

3. பலபதங்கள் ஒன்றாய்ச் சேர்ந்து ஒரு கருத்தைக்கொடுக்குமாயின், ஒரு வாக்கியமாம். (உ-ம்) அவன் கடவுளைத்தொழுகிறான்

N.B.—(a) ஒரு வாக்கியத்தில் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பிரதான சொற்களாம்.

(b) வினைச்சொல் இல்லாமல் வாக்கியம் ஆகாது.

வாக்கிய வகை:

4. * பிரதான வாக்கியம் அல்லது முற்றுவாக்கியம், இடைவாக்கியம், தொடர்மொழிவாக்கியம், வினையெச்சவாக்கியம், பெயரெச்சவாக்கியம் என வாக்கியம் ஐந்துவகைப்படும்.

பிரதான வாக்கியம்:

5. எழுவாயும், பயனிலையும், செயப்படுபொருள் முதலியவைகளோடு கூடியேனும் கூடாதேனும் முடிவுபெற்று நிற்பது பிரதான வாக்கியமாம்.

உதாரணம்:

இராமன் தன் புஸ்தகத்தைக் கொண்டுவந்து, சிங்காரத்துக்குக்கொடுத்தான். கோபாலன் பள்ளிக்கூடத்துக்கு வந்தான்.

* இடைவாக்கியம், பெயரெச்சவாக்கிய முதலிய பல வாக்கியங்கள் கலந்துள்ள வாக்கியம் கலப்பு வாக்கியமாம்; அதிலுள்ள முற்று வாக்கியம் பிரதான வாக்கிய மெனப்படும்.

இடைவாக்கியம் :

6. எழுவாய், பயனிலை முதலிய பல பதங்கள் ஒன்றுய்க்கூடி, பிரதான வாக்கியத்தின் பயனிலைக்கு (பெயர்ச் சொல்லைப்போல்) எழுவாயாகவாவது செயப்படுபொருளாகவாவது வரும் வாக்கியம் இடைவாக்கியம் என்னப்படும்.

உதாரணம் :

(*a*) அவன் எப்படிப் பணத்தைப் போக்கடித்துக்கொண்டானென்று தெரியவில்லை. (தெரியவில்லை என்னும் பயனிலைக்கு "அவன் எப்படிப் பணத்தைப் போக்கடித்துக் கொண்டானென்று" என்னும் இடைவாக்கியம் "எழுவாயாக" வந்தது; காண்க.)

(*b*) நான் வீட்டுக்குப் போகவேண்டுமென்று விரும்புகிறேன். (விரும்புகிறேன் என்னும் பயனிலைக்கு "நான் வீட்டுக்குப் போகவேண்டுமென்று" என்னும் இடைவாக்கியம் "செயப்படுபொருளாக" வந்தது; காண்க.)

தொடர்மொழி வாக்கியம் :

7. பல பதங்கள் ஒன்றுய்க்கூடி தொழிற்பெயரையாவது, முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சத்தையாவது ஈற்றிலுடையதாய் வரும் வாக்கியம் தொடர்மொழி வாக்கியம் என்னப்படும். அது பிரதான வாக்கியத்திற் குள்ளடங்கி, அதின் பயனிலைக்கு எழுவாயாகவாவது, செயப்படுபொருளாகவாவது நிற்கும்.

உதாரணம் :

(*a*) பெங்களூர் சோலைகள் ஒன்றில் காலையில் உலாவுவது தேகத்திற்குச் சுகங் கொடுக்கும். ("பெங்களூர் சோலைகள் ஒன்றில் காலையில் உலாவுவது" என்னுந் தொழிற்பெயரை ஈற்றிலுடைய தொடர்மொழி "கொடுக்கும்" என்னும் பயனிலைக்கு எழுவாயாக வந்தது; காண்க.)

(*b*) பள்ளிக்கூடத்திற்குத் தினந்தோறும், காலையிலும் மாலையிலும் வந்து படிப்பதைக் கிருஷ்ணன் விரும்புகிறேன். ("பள்ளிக்கூடத்திற்குத் தினந்தோறுங் காலையிலும் மாலையிலும் வந்து படிப்பதை" என்னுந்தொழிற்பெயரை ஈற்றிலுடைய தொடர்மொழி "விரும்புகிறேன்" என்னும் பயனிலைக்குச் செயப்படுபொருளாக வந்தது; காண்க.)

(c) இராமனுக்குப் பள்ளிக்கூடத்தில் தினந்தோறும் எழுதப் பிரியம் ("இராமனுக்குப் பள்ளிக்கூடத்தில் தினந்தோறும் எழுத" என்னும் முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சத்தை ஈற்றிலுடைய தொடர்மொழி "பிரியம்" என்னும் பெயர்ப்பயனிலைக்கு எழுவாயாக வந்தது; காண்க.)

(d) கடவுள் குணப்பட்ட பாவியை இரட்சிக்க விரும்புகிறார் ("குணப்பட்ட பாவியை இரட்சிக்க" என்னும் முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சத்தை ஈற்றிலுடைய தொடர்மொழி "விரும்புகிறார்" என்னும் பயனிலைக்குச் செயப்படுபொருளாக வந்தது; காண்க.)

N.B.—(a) ஒரு வாக்கியத்திலுள்ள முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சத்தை, அருத்தங்கெடாமல், தொழிற்பெயராக மாற்றலாம். அவ்வாறே தொழிற்பெயரையும் முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சமாக மாற்றலாம், உதாரணம்: துரைசாமிக்குப் பள்ளிக்கூடத்திற்குப் போகப் பிரியம், (= துரைசாமிக்குப் பள்ளிக்கூடத்திற்குப் "போகிறது" அல்லது "போவது" பிரியம் என்று மாற்றுவதினால் அருத்தங் கெடவில்லை யென்றறிக.)

(b) செயப்படுபொருள் குன்றிய வினைமுற்றையுடைய வாக்கியத்திலுள்ள முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சம் (தனித்து வந்தாலும் அல்லது தொடர்மொழியாக வந்தாலும்) பிரதான வினைமுற்றுக்கு அடைமொழியாக மாத்திரம் நிற்கும். (உ-ம்.) ஐயாபிள்ளை தினந்தோறும் பள்ளிக்கூடத்தில் எழுத வருகிறான். ("தினந்தோறும் பள்ளிக்கூடத்தில் எழுத" என்னும் முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சத்தை ஈற்றிலுடைய தொடர்மொழி "வருகிறான்" என்னும் செயப்படுபொருள் குன்றிய வினைமுற்றுக்கு அடைமொழியாக வந்தது; காண்க.

வினையெச்சவாக்கியம் :

8. பலபதங்கள் ஒன்றாய்க்கூடி, இறந்தகால வினையெச்சத்தையாவது, எதிர்கால வினையெச்சத்தையாவது ஈற்றிலுடையதாய் வரும் வாக்கியம் வினையெச்சவாக்கிய மென்னப்படும். அது பிரதான வாக்கியத்திற்குள்ளடங்கி, அதன் பயனிலைக்கு அடைமொழியாக நிற்கும்.

உதாரணம் :

(a) திருகையன் நேற்று கணியம்பாடியிலிருந்து புறப்பட்டுப் பெங்களூருக்கு வந்து வீரராகவனைப் பார்த்தான். ("நேற்று கணியம்பாடியிலிருந்து புறப்பட்டு பெங்களூருக்கு வந்து" என்னும் இறந்தகால வினையெச்ச வாக்கியம் "பார்த்தான்" என்னும் பயனிலைக்கு அடைமொழியாக வந்தது; காண்க.)

(b) நல்லராஜ், பள்ளிக்கூடத்திற்குத் தினந்தோறும் வந்தால், நன்றாய் எழுதுவான். ("பள்ளிக்கூடத்திற்குத் தினந்தோறும் வந்தால்" என்னும் எதிர்கால வினையெச்ச வாக்கியம் "எழுதுவான்" என்னும் பயனிலைக்கு அடைமொழியாக வந்தது; காண்க.)

பெயரெச்சவாக்கியம்:

9. பல பதங்கள் ஒன்றாய்க்கூடிப் பெயரெச்சத்தை யீற்றிலுடையதாய்வரும் வாக்கியம் பெயரெச்சவாக்கியம் என்னப்படும். அது பிரதான வாக்கியத்திற்குள்ளடங்கி, அதன் எழுவாய்க்காவது செயப்படுபொருளுக்காவது அடைமொழியாக நிற்கும்.

உதாரணம் :

நன்றாய் எழுதப் படிக்கத் தெரிந்த பிள்ளைகளைச் சகலகலை வல்லவர்களாகிய வித்துவான்கள் ஆசீர்வதித்தார்கள். ("நன்றாய் எழுதப் படிக்கத் தெரிந்த" என்னும் பெயரெச்சவாக்கியம் "பிள்ளைகளை" என்னுஞ் செயப்படுபொருளுக்கும்; "சகலகலை வல்லவர்களாகிய" என்னும் பெயரெச்சவாக்கியம் "வித்துவான்கள்" என்னும் எழுவாய்க்கும் அடைமொழிகளாக வந்தன; காண்க.)

வாக்கியத்தின் அங்கங்கள்

10. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், எழுவாயின் அடைமொழி, செயப்படுபொருளின் அடைமொழி, பயனிலையின் அடைமொழி ஆகிய இவ்வாறும் வாக்கியத்தின் அங்கங்களாம்.

11. பெயரெச்சமும், பெயருரிச்சொல்லும், பெயரெச்சவாக்கியமும், ஆறும் வேற்றுமை யுருபேற்றுவருஞ் சொற்களும் எழுவாய்க்குஞ் செயப்படுபொருளுக்கும் அடைமொழிகளாக வருமென்றறிக.

N.B.—(a) ஒரு சொல் பகுபதமாய் நின்று, பெயர்ச்சொல்லின் குணத்தைக் காட்டுமாயின் "பெயரெச்சம்" என்னப்படும்.

(b) ஒரு சொல் பகாப்பதமாய் நின்று, பெயர்ச்சொல்லின் குணத்தைக் காட்டுமாயின் 'பெயருரிச்சொல்" என்னப்படும்.

உதாரணம் :

ஒரு பெரிய சாஸ்திரி ஒரு படித்த பெண்ணைக் கடிமணம் புரிந்தார். இந்த வாக்கியத்தில் "பெரிய" என்னுங் குறிப்புப் பெயரெச்சஞ் "சாஸ்திரி" என்னும் பெயரையும், "படித்த" என்னுந் தெரிநிலைப் பெயரெச்சம் "பெண்" என்னும் பெயரையும், "கடி" என்னும் உரிச்சொல் "மணம்" என்னும் பெயரையுந் தழுவி நின்றன; காண்க. ("பெரிய" "படித்த" இவ்விரண்டு பதங்களும் பகுபதங்களென்றும், "கடி" என்னும் பதம் பகாப்பதமென்றும் அறிக.)

12. வினையெச்சமும், வினையுரிச்சொல்லும், வினையெச்சவாக்கியமும்; மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஏழாம் வேற்றுமைகளின் உருபேற்றுவருஞ் சொற்களும் பயனிலைக்கு அடைமொழிகளாகவருமென்றறிக.

N. B.—(a) ஒரு சொல் பகுபதமாய் நின்று, வினைச்சொல்லின் குணத்தைக் காட்டுமாயின், "வினையெச்ச" மென்னப்படும்.

(b) ஒரு சொல் பகாப்பதமாய் நின்று, வினைச்சொல்லின் குணத்தைக் காட்டுமாயின், "வினையுரிச்சொல்" என்னப்படும்.

உதாரணம்:

ஒரு நரி ஒரு கோழியைப்பிடித்து, நனி ஆவலாய்த்தின்றது. இந்த வாக்கியத்தில் "பிடித்து" என்னும் வினையெச்சந் "தின்றது" என்னும் வினையையும், "நனி" என்னும் உரிச்சொல் "ஆவலாய்" என்னும் வினையையுந் தழுவி நின்றன; காண்க. ("பிடித்து" என்னும் பதம் பகுபதமென்றும், "நனி" என்னும் பதம் பகாப்பதமென்றும் அறிக.)

METHOD OF ANALYSING SENTENCES.

வாக்கியாங்கச் சேதன விலக்கணங் கூறும் விதம்.

13. ஒரு வாக்கியத்தில், முதலாவது—பயனிலையையும்; இரண்டாவது—எழுவாயையும்; மூன்றாவது—செயப்படுபொருளையும்; நான்காவது—எழுவாயின் அடைமொழியையும்; ஐந்தாவது — செயப்படுபொருளின் அடைமொழியையும்; ஆறாவது—பயனிலையின் அடைமொழியையுங் கண்டுபிடிக்கவேண்டும்.

N. B.—(*a*) பயனிலை—குறிப்புவினைப் பயனிலை, தெரிநிலை வினைப்பயனிலையென—இருவகைப்படும்.

(*b*) குறிப்புவினைப் பயனிலை—வினைமுற்றுப்பயனிலை, பெயர்ப்பயனிலை, வினாப்பயனிலையென—மூவகைப்படும்.

(*c*) தெரிநிலை வினைப்பயனிலை—வினைமுற்றுப்பயனிலை, வினையெச்சப்பயனிலை, பெயரெச்சப் பயனிலையென—மூவகைப்படும். பயனிலை (பயன் + நிலை. பயன்=சொல்லுரை. நிலை=இடம் அல்லது குணம்)=சொல்லுரையின் குணம்.

(*d*) எழுவாயுஞ் செயப்படுபொருளும் பெயர்ச்சொற்களாகவே இருக்கவேண்டும்.

(*e*) எழுவாய் முதல் வேற்றுமையாகவே இருக்கவேண்டும். எழுவாய் (எழு + வாய். எழு= எழுகின்ற, வாய்=இடம்)=கருத்து உற்பத்தியாகும் இடம்.

(*f*) செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமையாகவே இருக்க வேண்டும். (ஒரு கர்த்தா செய்யுந்தொழிலை யேற்கும்பொருளே செயப்படுபொருளாம்.)

14. * முதல வேற்றுமையிலுள்ள வினாப்பெயர்களாகிய ஏவன், எவள், எவர், எவர்கள், எது, எவை, எவைகள்; யாவன், யாவள், யாவர், யார், யாது, யாவை என்கிற சொற்களைப் பயனிலையோடு சேர்த்துக் கேள்வி கேட்டால், மறு உத்தரவாக வருஞ் சொல் அல்லது வாக்கியம் எழுவாயாம்.

உதாரணம்:

இராமன் படிக்கிறான். இந்த வாக்கியத்தில் எழுவாய் எதென்று தெரிந்து கொள்வதற்குப் 'படிக்கிறான்' என்னும் பயனிலையை 'எவன்' என்னும் வினாப்பெயரோடு சேர்த்து "எவன் படிக்கிறான்" என்று கேள்வி கேட்டால், 'இராமன்' என்று உத்தரவு பிறக்கும். ஈண்டு இராமன் என்பது எழுவாயென்றறிக.

அப்பியாசம்:

அடியில் வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய்களைக் கண்டுபிடித்தெழுதுக.

நான் உபாத்தியாயரைக் கண்டேன். கோவிந்தனுக்குக் கணக்குக் கற்பித்தேன், நாங்கள் கோயிலுக்குப் போனோம். நாளைக்கு இராமனுக்குப் புஸ்தகங் கொடுப்போம். நீ உன் வகுப்பிற்குப் போகலாம். உபாத்தியாயர் கட்டளையிட்டபடிசெய். நீர் எங்கே போனீர். என் புஸ்தகத்தைத் தாரும். நீங்கள் யாரைப் பார்த்தீர்கள். தினந்தோறும் பள்ளிக்கூடத்திற்கு வாருங்கள். இராமன் கொடுத்தான். அவன் வருவான். பாடம் படிக்கிறான். இலட்சுமி எழுதினாள். இவள் படிப்பாள். உபாத்தியாயருக்குப் புஸ்தகங் கொடுத்தாள். அவர் வருகிறார். எனக்குப் பாடஞ் சொல்லிக்கொடுப்பார். பிள்ளைகள் பரீட்சையில் தேறினார்கள். அவர்கள் பணங்கொடுப்பார்கள். பள்ளிக்கூடத்திற்குப் போவார்கள். ஆடுவந்தது. அது போகும். அவை போயின. மாடுகள் தோட்டத்தில் மேய்கின்றன.

15. இரண்டாம் வேற்றுமையிலுள்ள வினாப்பெயர்களாகிய எவனை, எவளை, எவரை, எவர்களை; எதை, என்ன, எவற்றை முதலிய சொற்களைப் பயனிலையோடு சேர்த்துக் கேள்வி கேட்டால், மறு உத்தரவாக வருஞ் சொல் அல்லது வாக்கியஞ் செயப்படுபொருளாம்.

உதாரணம்:

கோவிந்தன் இராமனை அடித்தான். இந்த வாக்கியத்தில் செயப்படுபொருள் எதென்று தெரிந்துகொள்வதற்கு 'அடித்தான்' என்னும் பயனிலையை 'எவனை' என்னும் பெயரோடு சேர்த்து "எவனை அடித்தான்" என்று கேள்வி கேட்டால், 'இராமனை' யென்று உத்தரவு பிறக்கும். ஈண்டு 'இராமனை' யென்பது செயப்படுபொருளென்றறிக.

---

* ஒரு வாக்கியத்தில் "எழுவாய்" பயனிலைக்கு முந்தியாவது பிந்தியாவது வருமென்றறிக.

அப்பியாசம்.

அடியில் வரும் வாக்கியங்களிலுள்ள செயப்படுபொருட்களைக் கண்டு பிடித்தெழுதுக.

நான் ஒரு கிளிப்பிள்ளையை வளர்த்தேன். அவருக்குக் கொடுத்தேன். நாங்கள் புலியைக் கண்டோம். நாங்கள் நேற்றுச் சாப்பிட்டோம். நீ எங்களைப் பார்க்கிறாய். நீ கொடுத்தாய். நீர் வேலைசெய்தீர். பார்த்தீர். நீங்கள் புஸ்தகங் கேட்டீர்கள். நாளைக்கு அறிவீர்கள். இராமன் தண்ணீர் குடித்தான். நாளைக்குக் கொண்டுவருவான். இலட்சுமி சமையல் செய்வாள். தேடுவாள். உபாத்தியாயர் பிள்ளைகளை ஆசீர்வதித்தார். நாளைக்குக் கேட்பார். பிள்ளைகள் பாடுகிறார்கள். பாடம் படித்தார்கள். மாடு புல்லை மேய்கிறது. புலி கொல்லும். பட்சிகள் பழந் தின்கின்றன. நரிகள் திருடும்.

16. எப்படிப்பட்ட, எப்பேர்க்கோற்ற, எத்தனை முதலிய சொற்களையும், ஆறும் வேற்றுமை யுருபேற்றுவரும் வினாப்பெயர்களையும், எழுவாயோடுஞ் செயப்படுபொருளோடுஞ் சேர்த்துக் கேள்வி கேட்டால், எழுவாய்க்குஞ் செயப்படுபொருளுக்கும் அடைமொழிக ளின்னவையென வெளியாகும்.

உதாரணம்:

(a) யுத்தத்தில் சாமர்த்தியமுள்ள மனிதன் கீர்த்தி பெறுவான். இந்த வாக்கியத்தில் எழுவாயுடைய அடைமொழி எதென்று தெரிந்துகொள்வதற்கு 'மனிதன்' என்னும் எழுவாயை 'எப்படிப்பட்ட' என்னுஞ் சொல்லோடு சேர்த்து "எப்படிப்பட்ட மனிதன்" என்று கேள்வி கேட்டால், "யுத்தத்தில் சாமர்த்தியமுள்ள" என்று உத்தரவு பிறக்கும். ஈண்டு "யுத்தத்தில் சாமர்த்தியமுள்ள" என்பது எழுவாயுடைய அடைமொழியென்றறிக.

(b) படிப்பில் நன்றாய்த் தேறின பிள்ளைகளைப் பரீட்சைக்கனுப்பலாம். இந்த வாக்கியத்தில் செயப்படுபொருளின் அடைமொழி எதென்று தெரிந்துகொள்வதற்குப் "பிள்ளைகளை" என்னுஞ் செயப்படுபொருளை "எப்பேர்க்கொற்ற" எனனுஞ் சொல்லோடு சேர்த்து "எப்பேர்க்கொற்ற பிள்ளைகளை" என்று கேள்விகேட்டால், "படிப்பில் நன்றாய்த் தேறின" என்று உத்தரவு பிறக்கும். ஈண்டு "படிப்பில் நன்றாய்த்தேறின" என்பது செயப்படுபொருளின் அடைமொழியென்றறிக.

அப்பியாசம்:

அடியில் வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாயின் அடைமொழிகள், செயப்படுபொருளின் அடைமொழிகள் எவையெனக் கண்டுபிடித்தெழுதுக.

கிருபைநிறைந்த கடவுள் பக்தியுள்ள மனிதரை இரட்சிக்கிறார். அறிவுள்ளபிள்ளைகளை யாவரும் மதிப்பார்கள். விவேகமுள்ள மந்திரி பிரஜைகளுக்கு ஆசீர்வாதமாயிருக்கிறான். அறிவுள்ள பிள்ளைகளையுடைய தகப்பன் நற்கீர்த்தி பெறுவான். கல்வியை நேசிக்கிற உத்தமபிள்ளைகள் முதியோர்கள் வாக்கைக் கவனிப்பார்கள். மலைகளில் வாசஞ்செய்யும் மனிதர்களே வல்லவர்கள். ஆடு மேய்க்கும் இடையன் அவற்றின் மதுரமான பாலைக் குடிக்கிறான். கல்வியில் தேர்ந்த பதினைந்து பிள்ளைகள் மேன்மையான கீர்த்திப்பதக்கம் பெற்றார்கள். உண்டவீட்டிற்கு துரோகஞ் செய்கிற மனிதனை அறிவிலுங் கல்வியிலுஞ் சிறந்த பெரியோர் மதியார்கள். பொய்பேசும் பிள்ளைகள் தண்டனையடைவார்கள். கையுங்காலுமில்லாத முடவன் மலையின்மேல் ஏறமுடியுமா? காலத்தை வீணாய்க் கழிக்கிற பையன் மேன்மையடையான்.

எப்படி (எவ்விதம்,) எங்கே, எப்போது (எப்பொழுது,) எவ்வளவு, எத்தனை, என் முதலிய சொற்களையும்; மூன்றும், நான்காம் ஐந்தாம், ஏழாம் வேற்றுமைகளின் உருபேற்று வரும் வினாப்பெயர்களையும், பயனிலையோடு சேர்த்துக் கேள்வி கேட்டால், பயனிலையினடைமொழி யின்னதென வெளியாகும்.

உதாரணம்:

கோவிந்தன் பள்ளிக்கூடத்திற்கு அதிக வேகமாய் ஓடிவந்தான். இந்த வாக்கியத்தில் பயனிலையின் அடைமொழி யின்னதென்று தெரிந்துகொள்வதற்கு 'வந்தான்' என்னும் பயனிலையை 'எப்படி' என்னுஞ் சொல்லோடு சேர்த்து "எப்படி வந்தான்" என்று கேள்விகேட்டால், "அதிக வேகமாய் ஓடி" என்று உத்தரவு பிறக்கும். ஈண்டு "அதிக வேகமாய் ஓடி" என்பது பயனிலையின் அடைமொழியென்றறிக.

அப்பியாசம்:

அடியில் வரும் வாக்கியங்களிலுள்ள பயனிலையின் அடைமொழிகளைக் கண்டுபிடித்தெழுதுக.

ஒரு பையன் சீக்கிரமாய் ஓடிவந்தான். வெகு ஜனங்கள் இராமன் வீட்டில் நேற்றுக் காலையில் வந்திருந்தபோது, கிருஷ்ணன் பசுமாட்டை அவிழ்த்து மெதுவாய் ஓட்டிக்கொண்டு போனான். பிள்ளைகள் தங்கள் வீட்டிலிருந்து சந்தோஷமாய்ப் புறப்பட்டுப் பள்ளிக்கூடத்திற்கு வருகிறார்கள். கோபாலன் தன் பாடங்களை வீட்டிலேயே நன்றாய்ப் படித்துக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குப் போவதினால், நாளுக்குநாள் விர்த்தியடைகிறான். சகல மாணாக்கருந் தங்கள் உபாத்தியாயர் சொல்லுகிற நீதி மொழிப்படிக் கிரமமாய் நடக்க வேண்டும். கோபாலன் கிருஷ்ணனுக்குப் பன்னிரண்டு ரூபாய் வேலூரிலிருந்து நேற்றுத் தபால் மார்க்கமாய் அனுப்பிவைத்தான். ஒருநாள் கோபாலன் என்னப்பட்ட ஒரு சிறுவன் தன்வீட்டில் ஒரு பூனையுடன் விளையாடி, நேரத்தைப் போக்கினான். காட்டில் வாசஞ்செய்யுஞ் சிங்கந் தனக்குப் பசி வந்தபோது எதற்கும் பயப்படாமல் எதிரில் அகப்படும் மிருகங்களை அடித்துத் தின்னும். கல்வியிலும் நாகரீகத்திலும் மேன்மைபெற்ற பிரிட்டிஷ்காரர் செல்வம் நிறைந்த இந்துதேசத்தை யாவரும் மகிழ்ந்து போற்றும்படி மிகச் சாமர்த்தியமாக ஆண்டு வருகிறார்கள். மரஞ்செடியடர்ந்த சோலைகளில் காலையிலும் மாலையிலும் உலாவினால் தேகத்திற்குச் சுகம் நாளுக்குநாள் உண்டாகும். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் படிக்கிறார்களென்று இன்ஸ்பெக்டர் சந்தோஷமாய் என்னிடத்தில் சொன்னார். கானகத்தில் வாசஞ் செய்யும் மான்களுக்கு அநேகஞ் சத்துருக்களிருப்பதினால், அவற்றினின்று தப்பித்துக்கொள்ளும் பொருட்டு மான்கள் அதிகவேகமாய் ஓடவேண்டும். இங்கிலாந்திலும், ஐரோப்பாக்கண்டத்து நாடுகளிலும் உழவர்கள் நிலம் உழுவதற்காக எருதுகளுக்குப் பிரதியாகக் குதிரைகளை உபயோகிக்கிறார்கள். கரடியை எவரேனும் எதிர்த்தால், அது பின்னங்கால் இரண்டாலுமெழுந்து நின்று, எதிரியைத் தன் மார்போடு இறுகத் தழுவி, அவன் எலும்புகளை முறித்து விடுகின்றது. காப்பிக்கொட்டைகள் வெயிலில் உலர்த்தப்பட்டுக் கோணிகளிற் போட்டுக் கட்டி, விற்பனைக்காகப் பிறதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யக் கடற்றுறை பட்டணங்களுக்கு அனுப்பப்படும்.

வினையெச்சம், பெயரெச்சம், தொழிற்பெயர் முதலிய சொற்களின் அடைமொழிகளைப் பயனிலைக்குக் கூறிய விதிகளைக்கொண்டே கண்டுபிடிக்க வேண்டுமென்றறிக.

வாக்கியாங்கச் சேதன விலக்கணத்திற்கு உதாரணம்:

இலங்கைக் கதிபதியாயிருந்த விராவணனை வானரச் சேனைகளைக்கொண்டு ஜயித்த விராமர், நூறுயோசனை ரமுள்ள சமுத்திரத்தையொரு முகூர்த்தத்திற் றாண்டிய வனுமாரை, சகலத்தளக்கர்த்தர்களுந் தங்கடங்கள் சாமர்த்தியங்களைச் சொல்லிக்கொண்டிருந்தபோது, அன்போடு பார்த்தார்.

Translation :—Whena ll the military chiefs were recounting their several exploits, Rama, who, with the help of monkey regiments, had conquered Ravana, the king of Ceylon, looked graciously on Annmar who within an hour and a half had jumped over the ocean 800 miles wide.

எழுவாயின் அடைமொழி. Adjunct, Subject.	எழுவாய். Subject.	செயப்படுபொருளின் அடைமொழி. Adjunct, Object.	செயப்படுபொருள். Object.	பயனிலையின அடைமொழி. Extension, Predicate.	பயனிலை. Predicate.
இலங்கைக்கதிபதியாயிருந்த விராவணனை வானரச் சேனைகளைக் கொண்டு ஜயித்த	இராமர்	நூறுயோசனை விஸ்தாரமுள்ளசமுத்திரத்தையொரு முகூர்த்தத்திற் றாண்டிய	அனுமாரை	சகலததளககர்த்தர்களுந்தஙகடஙகள்சாமார்த்தியங்களைச் சொல்லிக் கொண்டிருந்தபோது, அன்போடு	பார்த்தார்
	(இராமர்)	இலங்கைககதிபதியாயிருந்த	இராவணனை	வானரச சேனைகளைக் கொண்டு	(எச்சப்பயனிலை) ஜயித்த (வர்)
	(அனுமார்)	நூறுயோசனைவிஸ்தாரமுள்ள	சமுத்திரத்தை	ஒரு முகூர்த்தத்தில்	(எச்சப்பயனிலை) தாண்டிய (வர்)
சகல	தளக்கர்த்தர்களும்	தங்கள் தங்கள்	சாமர்த்தியங்களை	(அப்)போது	(எச்சப்பயனிலை) சொல்லிக்கொண்டிருந்த (அர்கள்)

அப்பியாசம். A.

எழுவாய்க்கேற்ற பயனிலையைக் கூட்டிச் சிறுவாக்கியமாக்குக:—

1. பசுக்கள் பால்——
2. குயவன் கலங்கள்——
3. பறவை முட்டை——
4. சந்திரன் பகலில்——
5. மலர்கள் வாசனை——
6. மூடர் மூடரை——
7. கல்விக்குக் கரை——
8. ஒளிமுன் இருள்——
9. கடிகாரங் காலம்——
10. பொய் மெய்யை——
11. கடவுள் சர்வமும்——
12. கல்வி அறிவை——

அப்பியாசம். B.

பயனிலைகளுக்கேற்ற எழுவாய்களைக் கூட்டி யெழுதுக:—

1. ——கனைக்கிறது
2. ——கத்துகிறது
3. ——கர்ஜிக்கிறது
4. ——முக்காரம் போடுகிறது
5. ——அலறுகின்றது
6. ——சீறுகிறது
7. ——ஓடுகிறது
8. ——பாய்கிறது
9. ——துள்ளுகிறது
10. ——பறக்கிறது
11. ——பாடுகிறது
12. ——நீந்துகிறது

அப்பியாசம். C.

அடியில் வரும வாக்கியங்களிற் குறைவுபட்டு நிற்கின்ற செயப்படுபொருள்களைக் கூட்டி யெழுதுக:—

1. புலி——மேயுமா
2. சோறு——தீர்க்கும்
3. நித்திரை——தீர்க்கும்
4. தேனீ——சேர்க்கிறது
5. மரணம்——விடாது
6. நெருப்பு——எரிக்கும்
7. எலிகள்——கடிக்கும்
8. ஓநாய்——தேடும்
9. பணம்——செய்யும்
10. கல்வி——தரும்
11. காற்று——அவிக்கும்
12. தண்ணீர்——தீர்க்கிறது

அப்பியாசம். D.

அடியில் வருகிற வாக்கியங்களில் கீற்றுள்ள இடங்களில் தக்க பெயர்ப் பயனிலைகளைக் கூட்டுக:—

1. இவன் என்——
2. அது எங்களுடைய——
3. நான் உன்——
4. அவன் நமக்கு——
5. நீ என்——
6. மயில் அழகான——
7. பாம்பு நகரும்——
8. கோழி பறவாத——
9. கல்வி சிறந்த——
10. உடல் அழிகிறது——
11. கல்வி குறையாத——
12. பாவம் பொல்லாத——

அப்பியாசம். E.

கீற்றுள்ள இடத்தில் ஏற்ற சொற்களைக்கூட்டி வாக்கியத்தைமுடி:—

1. அவன் தேவதூதனைக்கண்டு——
2. என் மகன் படியாமல்——
3. மழை பெய்யாவிட்டால்——
4. பூஞ்செடிகள் தண்ணீரில்லாமல்——
5. நான் குதிரைமேலிருந்து விழுந்து——
6. அவலக்கு மிஞ்சி உண்டால்——
7. அவன் எதைக்காண——
8. நீ என்ன செய்ய——
9. இந்தக்கட்டி பெருத்தால்——
10. நீ இப்போது இங்கே வா——
11. கண்டதைத் தின்றால்——
12. நீ நன்றாய்ப் படித்தால்——

அப்பியாசம். F.

அடியில் வரும் 24-வாக்கியங்களுக்கும் வாக்கியாங்கச் சேதன விலக்கணங் கூறுக:—

ஒரு குலமகன் வளர்த்த மயிலொன்று வீம்புக்காகத் தன் மேனியழகைக் காட்ட மிகவும் விரும்பியது. இலக்ஷுமியினுவு தடித்திருப்பதினு லெண்டிய நன்றுயுச்சரியாள். குருடர்களுக்குங் கூட எழுத்தைக் கற்பிக்கலாமென்று ஞானலக்ஷுமி தனலக்ஷுமியுடன் சொன்னுள். குடிமிப்பைய ஞெருவனிருப்புலக்கையோடு பையச் சென்றந்தக் குதிரைக்காலை யொடித்துவிட்டது நடவாக்குதிரையென்று பலபேர் முன்சொல்லி வடகிழக்குப் பக்கந் தன்றுய்கையைப் பிடித்துக்கொண்டு போனுன். அவனம்மண் ணன்றென்றவ்வளவு பேச்சுமாத்திரஞ் சொன்னதற்கென்னகொடுக்கலாமென்றரசுகை போன்றவர் தாயம்மாளைக் கேட்டார். இராப்பகன் மழை சள சள வென்று மேலும் மேலும் பெய்தாலும் எரிகொள்ளி போன்ற சூரியனிலிருந் துண்டாகுங் காங்கையானது தரையை வரவரக் காயவைக்கிறதை ஓ! கருங்குழலே நீ பாராய் புவியினன்மை செய்பவன் யார்? அதனுலரசனுக்கு மனவருத்த முண்டாகித் தன்னரசை மந்திரிகளிடத் தொப்புவித்துத் தன் மனைவிகளோடு வெளிப்பட்டொரு முனிவரிடத்துச் சென்று வணங்கித் தன் மனக்குறையை சொல்லிக்கொள்ள வம்முனிவர் கேட்டு விசனப்பட்டுப் பயப்படாதே யென்றுசீர்வதித்தார். நான் போனவருஷத்திலைம்பது மைலொரே நாளினடந்தேன் இரட்சணிய மூர்த்தியைப் பின்பற்றி நடக்கும் மனிதனிரண்டா மரணமடையாமன் மோக்ஷஞ் சேருவான். கம்மறட்டாளுலேயே செய்யப்படும், சென்னைப்பட்டணத்திற்றன் ஞெழிலாளிகளுக்குக் குறைவில்லை. அரசமாநகரல்லி ராஜாவென்பவர் தம் பௌத்திரனுகிய தனராஜாவை நோக்கித் தம்முடைய முன்னேர்களின் பட்டணம் வாணியம்பாடியென்று புதுக்கோட்டை முத்துசாமி ஐயர் முன்னிலையிற் செப்பினுர், குஞ்சரமென்பதியானை. நன்மையினடக்கிற மனிதனப்படியே யெப்பொழுது நடவாமலிருந்தா னீங்காத துன்பத்தையடைவான். நகரேயனுகிய இரட்சணிய மூர்த்தியைக் குறித்துச் சொல்லும் புஸ்தகமே பெருமையுடையது. கண்ணில்லாத விருத்தாப்பியனை மெல்ல நடக்கச் செய்தாலிடறிவிழான். மகனே எனத் தகப்பனையன்றி வேறெருவனும் அழைக்கான். கல்லாத மனிதன் சாஸ்திரத்தைப் படிப்பிக்கான். தீமையினடவாயாக. நன்மையைச் செய்மின். தீமையைச் செய்யன்மின். இவ்வுலகின் வாழ்வியாருக்கு நிற்காது. அரசன் கடிமாலைசூடி நனிகளித்தான்.

N.B.—An English version of this Section on Tamil Analysis will be found in Appendix A.

Notes on Parts of Speech

சொல்லிலக்கணக் குறிப்பு.

பெயர்ச்சொல்—Noun.

NOUNS IN TAMIL WITH THEIR EQUIVALENTS IN ENGLISH.

1. பொருட்பெயர் (பொது)—மனிதன்; Common Noun—man.
   ,, (சிறப்பு)—கந்தன் ; Proper Noun—Kunthen, name of a man.
2. பொருளடியாகப்பிறந்தபெயர்—வில்லி ; Common Noun—archer.
3. இடப்பெயர் (பொது)—தேசம் ; Common Noun—Country.
   ,, (சிறப்பு)—தஞ்சாவூர் , Proper Noun—Tanjore.
4. இடமடியாகப்பிறந்தபெயர்—(பொது) ஊரான் ; Common Noun—villager.
   ,, (சிறப்பு)—பங்காளத்தான் ; Proper Noun—Bengali.
5. காலப்பெயர் (பொது)—வருஷம் ; Common Noun—year.
   ,, (சிறப்பு)—பிரபவ ; Proper Noun—Prabava, the name of a year.
   ,, —நேற்று ; Adverb of Time—yesterday.
6. காலமடியாகப்பிறந்தபெயர் (சிறப்பு)—அமாவாசை; Proper Noun—Ammavasai(=New-moon), name of a man.
7. சினைப்பெயர்—கால் ; Common Noun—leg.
8. சினையடியாகப்பிறந்தபெயர்—குருடன்; C. Noun—blind-man.
9. குணப்பெயர் அல்லது பண்புப்பெயர்—நன்மை ; Abstract Noun—goodness.
10. வண்ணப்பண்புப்பெயர்—வெண்மை; Abstract Noun—whiteness.
11. வடிவுப்பண்புப்பெயர்—உயரம் ; Abstract Noun—height.
    சுவைப்பண்புப்பெயர்—இனிப்பு ; Abstract Noun—sweetness.
    எண்ணலளவைப்பண்புப்பெயர்—இரண்டு ; Cardinal Definite Numeral Adjective—two.
    —பத்தாவது; Ordinal Definite Numeral Adjective—tenth.

14. நிறுத்தலளவைப்பண்புப்பெயர்—வீசை ; Common Noun—viss the name of an Indian weight.

15. முகத்தலளவைப்பண்புப்பெயர்—மரக்கால் ; C. Noun—marakal he name of an Indian measure.

16. நீட்டலளவைப்பண்புப்பெயர்—அங்குலம், கெஜம் ; Common Noun —inch, yard.

17. பண்படியாகப்பிறந்தபெயர்—கரியன் ; An adjective and a Common Noun put together—black-man.

18. முதனிலைதொழிற்பெயர்—பூட்டு ; Common Noun—lock.

19. முதனிலைபெருதொழிற்பெயர்—சண்டை ; Common No fight, war &c.

20. முதனிலைதிரிந்ததொழிற்பெயர்—பாடு ; Common Noun—labour trouble &c.

21. காலங்காட்டுந்தொழிற்பெயர்—படிக்கிறது ; Participial Noun—reading.

22. காலங்காட்டாததொழிற்பெயர் (அல்லது) முக்காலத்துக்கும் பொதுவான தொழிற்பெயர்—படித்தல் ; Participial Noun —reading.

23. தொழிலடியாகப்பிறந்தபெயா (அல்லது) பால்காட்டுந் தொழிற்பெயர் —ஓதுவான்; உழுவான் ; Common Noun—reader, farmer.

24. வினையாலணையும்பெயர் (அல்லது) பாலையுங்காலத்தையுங்காட்டுந்தொழிற்பெயர்—ஓடுகிறவன் ; Common Noun—runner

25. முறைப்பெயர்—தந்தை, தாய் ; Common Noun—father, mother

26. ஆகுபெயர்—வெற்றிலை நட்டான் ; Synecdoche—he planted the betel-leaf.

ஊரடங்கிற்று; Metonymy—the town became calm.

தாமரைபோன்ற பாதம் ; Simile—the lotus-like fee

27. தன்மைப்பெயர்—நான் ; First Personal Pronoun—I.

28. முன்னிலைப்பெயர்—நீ ; Second Personal Pronoun—you.

29. படர்க்கைப்பெயர்—அவன் ; Third Personal Pronoun—he.

30. சுட்டுப்பெயர் அல்லது சுட்டடியாகப்பிறந்தபெயர்—இவள்; A de ustrative Pronoun and a Common Noun together—this-woman.

14 நிறுத்தலளவைப்பண்புப்பெயர்—வீசை ; Common Noun—viss the name of an Indian weight.

15. முகத்தலளவைப்பண்புப்பெயர்—மரக்கால் ; C. Noun—marakal he name of an Indian measure.

16. நீட்டலளவைப்பண்புப்பெயர்—அங்குலம், கெஜம் ; Common Noun —inch, yard.

17. பண்படியாகப்பிறந்தபெயர்—கரியன் ; An adjective and a Common Noun put together—black-man.

18. முதனிலைதொழிற்பெயர்—பூட்டு ; Common Noun—lock.

19. முதனிலைபெறுதொழிற்பெயர்—சண்டை ; Common No fight, war &c.

20. முதனிலைதிரிந்ததொழிற்பெயர்—பாடு ; Common Noun—labour trouble &c.

21. காலங்காட்டுந்தொழிற்பெயர்—படிக்கிறது ; Participial Noun—reading.

22. காலங்காட்டாததொழிற்பெயர் (அல்லது) முக்காலத்துக்கும் பொதுவான தொழிற்பெயர்—படித்தல் ; Participial Noun —reading.

23. தொழிலடியாகப்பிறந்தபெயா (அல்லது) பால்காட்டுந் தொழிற்பெயர் —ஓதுவான்; உழுவான் ; Common Noun— reader, farmer.

24. வினையாலணையும்பெயர் (அல்லது) பாலையுங்காலத்தையுங்காட்டுந்தொழிற்பெயர்—ஓடுகிறவன் ; Common Noun—runner

25. முறைப்பெயர்—தந்தை, தாய் ; Common Noun—father, mother

26. ஆகுபெயர்—வெற்றிலை நட்டான் ; Synecdoche—he planted the betel-leaf.

ஊரடங்கிற்று; Metonymy—the town became calm.

தாமரைபோன்ற பாதம் ; Simile—the lotus-like fee

27. தன்மைப்பெயர்—நான் ; First Personal Pronoun—I.

28. முன்னிலைப்பெயர்—நீ ; Second Personal Pronoun—you.

29. படர்க்கைப்பெயர்—அவன் ; Third Personal Pronoun—he.

30. சுட்டுப்பெயர் அல்லது சுட்டடியாகப்பிறந்தபெயர்—இவள். A ustrative Pronoun and a Common Noun together—this-woman.

(*d*) Personification. Objects of the lower order are sometimes spoken of, when personified, as Masculine or Feminine like the objects of the higher order, as in English.

4. இடம் (Person). The same as in English.

5. வேற்றுமை (Declension). In the Declension of Nouns, there are eight cases in Tamil. Of these, the 1st is the Nominative, 2nd the Accusative, 6th the Possessive and the 8th the Vocative. Of the other four, the 4th gives a Dative significance, and the 3rd, 5th and the 7th are the ablatives of instrumental connection, of remotion and of location respectively. The suffixes of these four cases are equal in meaning to the Prepositions in English.

1st or the Nominative Case.—முதல் வேற்றுமை.

6. The particles connected with the First case are:—ஆனவன், ஆனவள், ஆனவர், ஆனவர்கள், ஆனது, ஆனவை, ஆனவைகள்; என்பவன், என்பவள், என்பவர், என்பவர்கள், என்பது, என்பவை, என்பவைகள். இவ் வுருபுகளின்றியும் முதல்வேற்றுமையில் பெயர்ச்சொற்கள் வருவதுண்டு. (உ-ம்) கிறிஸ்துவானவர் மூன்றும்நாள் உயிரோடெழுந்தார், or கிறிஸ்து மூன்றும் நாள் உயிரோடெழுந்தார்.

2nd or the Accusative Case.—இரண்டாம் வேற்றுமை.

7. The particle connected with the second case is:—ஐ. டைக்கட்டினன். He built a house.

3rd or the Instrumental case.—மூன்றும் வேற்றுமை.

8. The particles connected with the third case are:—ஆன், ஒடு or ஓடு, உடன், கொண்டு or மூலமாய்.

"ஆல்" or "ஆன்"

a.—கடவுளால் உலகமுண்டாயிற்று—The world was [illegible] *by* God.

b.*—என்னால் அவனுக்கு வேலை கிடைத்தது—He got the work *through* me.

c.—அவன் கத்தியால் அதை வெட்டினான்—He cut it *with* a knife.

d.—அவனால் பெங்களூருக்குப் போனேன்—I went to Bangalore *because* of him.

e.—மண்ணாலாகிய குடம்— Pot made *of* clay.

" ஓடு " or " ஒடு "

அவனோடு வந்தேன்—I came *with* him.

" உடன் "

அவனுடன் வந்தேன்—I came *along with* him.

" கொண்டு " or " மூலமாய் "

அவனைக்கொண்டு அதைமுடித்தேன்-I finished it *through* him.

4th or the Dative case.—நான்காம் வேற்றுமை.

The particles connected with the 4th case are:—கு ; ஆக, ஓசரம் or என்று ; நிமித்தம் or பொருட்டு ; இட்டு ; பற்றி ; குறித்து.

" கு "

a.—தரித்திரருக்குப் பிச்சை கொடுத்தான்—He gave alms *to* the poor.

b.—வேதத்திற்கு விரோதமான காரியம்—This is *against* (to) the Scripture.

c.—புஸ்தகத்திற்கு வந்தான்—He came *for* the book.

"ஆக" "ஓசரம்" or "என்று"

—எனக்காகச் செய்தான்—He did it *for* me.

---

*என்னால் அவனுக்கு வேலைகிடைத்தது:—here "ஆல்" may mean "through" or "consideration for." It may be either rendered either:—

I.—He got the work *through* me (*i.e.*, through my agency)—[illegible] வேலை வாங்கிக் கொடுத்தேன்.

II.—It is *out of* consideration for me that he got the work (through my relationship with him)—[illegible]

N. B.—"ஓசரம்" is a corrupt form of உபசாரம், meaning obligation.

b.—*அவன் மகனுக்காக ஊரைவிட்டான்*—He left the place *for the sake of* his son.

" நிமித்தம் " or " பொருட்டு "

என்னிமித்தம் வந்தான்—He came *on account of* me.

" இட்டு "

என்னையிட்டு வந்தான்—He came *because of* me.

" பற்றி "

a.—*என்னைப்பற்றிப் பேசினான்*—He spoke *of* me.

b.—*என்னைப்பற்றிப் பாடினான்*—He sang *about* me.

" குறித்து "

a.—*என்னைக்குறித்துப் பேசினான்*—He spoke *about* me.

b.—*என்னைக்குறித்துப் பாடினான்*—He sang *about* me.

N.B.—பற்றி and குறித்து are interchangeable.

5th or the ablative of remotion.—ஐந்தாம் வேற்றுமை.

10. The particles connected with the 5th case are:— இன்; நின்று or இருந்து; காட்டிலும், பார்க்கிலும், விட, இலும் or இட

" இல் "

a.—*காக்கையிற்கரிது களம்பழம்*—Kalam fruit is darker *than* crow.

.—*கல்வியிற்பெரியன் கம்பன்*—Kamban is accounted great *from* his learning.

" இன் "

a.—*மலையின் வீழருவி*—The stream that flows *from* the mountain.

b.—*மதுரையின் வடக்குச் சிதம்பரம்*—Chithambaram is *to* the north of Madura.

" நின்று " or " இருந்து "

ஊரினின்று போனான்—He went *from* the village

"காட்டிலும், பார்க்கிலும், விட, இலும், or இனும்."

அவனைக் காட்டிலும் நான் கெட்டிக்காரன்—I am cleverer *than* he.

—

6th or the Genitive or Possessive Case.—ஆறும் வேற்றுமை.

11. The particles connected with the 6th case are :—அது, ஆது, அ or உடைய.

N.B.—அது, ஆது என்னும் உருபுகள் ஒருமையிலும், அ என்னும் உருபு பன்மையிலும், உடைய என்னுஞ் சொல்லுருபு இவ்விரண்டிலும் வரும்.

உதாரணம் :

(a) இராமனது (ஆது or உடைய) புஸ்தகம்.
(b) மனிதர்கள சோக்கம|or மனிதர்களுடைய நோக்கம்.

—•—

7th or the ablative of location.—ஏழாம் வேற்றுமை.

12. The particles connected with the 7th case are :—இல், கண், கால், அகம், புறம், உள், கீழ், மேல், முன், பின், சார், அயல், புடை, திசை, தேம், தலை, இடை, கடை, வலம், இடம், உழை, உழி, உளி, வயின், வரய், பால், முதல், பாடு, அளை, வழி, தோறும், மிசை, மாடு, மீது, இடத்தில், அண்டை, கிட்ட, பக்கல், பக்கம், பாங்கர், முகம், இன்.

உதாரணம்.

இல்—பெங்களூரிலிருந்தான்—He was *in* Bangalore.

கண்—விரலின்கண் விளங்குகின்றது மோதிரம்—The ring glitters *on* the finger.

கால்—ஊர்க்கால் சிவந்த பொதும்பர்—The grove grown *in the vicinity of* the village.

அகம்—பயன் சாராச்சொல் பல்லாரகத்துண்டு-Useless talk is *with* many.

புறம்—ஊர்ப்புறம் இருந்தான்—He was *by* (*by the side of* or *near*) the village.

உள்—வீட்டுக்குள்ளிருந்தான் —He was *in* the house.

கீழ்—மரத்தின்கீழ் இருந்தான்—He was *under* the tree.

மேல்—மலைமேல் இருந்தான்—He was *on* the mountain.

முன்—அவன் என் முன் வரட்டும்—Let him come *before* (to) me.

பின்—காதலிபின் சென்றது கருத்து—(His) thoughts were *after* (his) lover.

சார்—காட்டுச்சார் ஓடுங் குறுமுயால்—The hare that runs *in* the jungle.

அயல்—ஊரயல் இருந்தான்—He was *by* (*by the side of* or *near*) the village.

புடை—எயிற்புடைநின்றான்—He stood *on* the rampart.

திசை—தேர் திசை யிருந்தான்—He was *on* (or *in*) the car.

தேஎம்—தோழிக் குரியவை கோடாய் தேத்து—All the requisites necessary for the maid are *with* or *in* the hands of the handmaid (nurse-maid).

தலை—வலைத்தலை மானன்ன நோக்கியர்—They looked (bewildered) like a deer (caught) *in* the net.

இடை—நல்லாரிடை புக்கு—Going *into the society of* good men.

கடை—வேலின் கடைமணிபோற்றிண்ணியான்—One who is as strong as the diamond set *in* the spear.

வலம்—கைவலத்துள்ளதுகொடுக்கும்—He would give whatever he has *in* his hand.

இடம்—அவனிடம் போனேன்—I went *to* him.

உழை—அவனுழை வந்தேன்—I came *to* him.

உழி—அவனூருழி சென்றான்—He went *to* the village.

உளி—குயில்சேர் குளிர்காவுளி சேர்புரையும்—Going and living *in* the cool grove frequented *by* the cuckoo

வயின்—அவர்வயின் செல்லாதே—Don't go *to* them.

வாய்—குரைகடல்வாய் அமுதென்கோ—May I say it to be the nectar (that comes out) *from* (or is found *in*) the sea that roars.

பால்—என்பாலிருந்தான்—He was *with* me.

முதல—சுரன்முதல்வந்த வுரன் மாய்மாலை—The awe-inspiring twilight that set *over* the wilderness.

பாடு—நம்பாடணையாத நாள்—The day that does not agree *with* us.

அளை—கல்லளைச் சுனைநீர்—The spring-water (that oozes out) *from* a rock.

வழி—நின்றதோர் நறவேங்கை நிழல்வழி யசைந்தன்ன—As if it shook *under* the shade of the vanga tree which was standing all fragrant.

தோறும்—மனைதோறும் மக்களுளர்—There are people *at every* house.

மிசை—நீதிமான் நிலமிசை நீடுவாழ்வான்—The righteous man will live long *in* the world.

மாடு—அரசன்மாட்டு அவன் புகழ் அடையான்—He will not be praised *before* (or *in the presence of* or *in the service of*) a king.

மீது—மலையின்மீது இருந்தான்—He was *on* the mountain.

இடத்தில்—அவனிடத்திலிருக்கிறது—It is *with* him.

அண்டை—அவனண்டை பணமுண்டு—There is money *with* him.

கிட்ட—அவன் கிட்டப் பேசுவது நியாயமல்ல—It is not right to talk *with* him.

பக்கல்—முனுசாமிபக்கல் துரைசாமி யுட்கார்ந்தான்—Durasawmy sat *by the side of* Munisawmy.

பக்கம்—கணவன்பக்கம் எல்லாப்பொருளுஞ் சேர்ந்தன—Everything went *to* the husband.

பாங்கர்—அரசன் காட்டுப்பாங்கர் சென்று வேட்டையாடினான்—The king went *to* the forest and hunted.

முகம்—போர்முகஞ்சென்றான்—He went *to* the battle field.

[illegible]—வானுலகின் இலது வேறிடமுண்டோ—Could anything that is not *in* heaven be found elsewhere.

N. B.— These suffixes or rather affixed words give a sense of location to the foregoing word. Of these 42 suffixes only 14 (இல், புறம், உள், கீழ், மேல், முன், பின், இடம், தோறும், இடத்தில், அண்டை, கிட்ட, பக்கல் and பக்கம்) are of use in the ordinary prose (whether spoken or written). Others find a place in poetry and in poetic prose.

8th or the Vocative Case.—எட்டாம் வேற்றுமை.

18. The particles connected with the 8th case are :— [illegible], ஏ, ஓ, or [illegible].

உதாரணம்.

(*a*) ஆ—அண்ணு; (*b*) ஈ—தம்பீ; (*c*) ஊ—தம்பூ; (*d*) ஏ—அண்ணே; (*e*) ஓ—அப்பாவோ; (*f*) ஆய்—நங்காய்.

AMBIGUOUS CASE-TERMINATIONS.

பொருண்மயக்கம்.

பொருண்மயக்கமாவது ஒரு வேற்றுமைப்பொருள் மற்றொரு வேற்றுமை யுருபோடு தகுதியாய் வருவதாம்.

அவை வருமாறு :

First Case.—வினைமுதற்பொருள் எழுவாயுருபு மூன்றனுருபுகளோடன்றிச் சிறுபான்மை நான்கனுருப்பு ஆறனுருபுகளோடும் வரும் ; உதாரணம்:—

1st Case : அவர் செய்தார்—*He did.*

3rd Case : அவரால் செய்யத்தகும் அக்காரியம்—By him it becometh to be done, that thing; for, அவர் செய்யத்தகும் அக்காரியம்—*It becometh him to do that.*

4th Case : அவருக்குச் செய்யத்தகும் அக்காரியம்—To him is becoming the doing of that ; for, அவர் செய்யத்தகும் அக்காரியம்—*It becometh him to do that.*

6th Case : அவரது வரவு—His coming; for, அவர் (வந்த, வருகிற or வரும்) வரவு—*The advent of his coming.*

Second Case.—செயப்படுபொருள் இரண்டனுருபோடன்றிச் சிறுபான்மை எழுவாய் வேற்றுமை யுருபுமுதல் எழாம்வேற்றுமை யுருபு ஈறாய், உருபுகள் எல்லாவற்றோடும் வரும்.

உதாரணம் :

2nd Case : சோற்றையட்டான்—*He cooked the rice* (= சோறு).

1st Case : சோறடப்பட்டது—The rice was cooked; for, சோற்றையட்டான்—*He cooked the rice* (= சோறு).

3rd Case: அரிசியாற் சோறாக்கினான்—He cooked சோறு (= boiled rice) out of அரிசி (rice); for, அரிசியைச் சோறாக்கினான்—*He boiled the* அரிசி *into* சோறு.

4th Case: அவட்குக் கொள்ளும் இவ்வணிகலம்—This jewel is fit to her for wear; for, அவளைக் கொள்ளும் இவ்வணிகலம்—*This jewel will fit her to wear.*

5th Case: பழியினஞ்சும்—He dreads from guilt; for, பழியை அஞ்சும்—*He dreads guilt.*

6th Case: நூலது குற்றங் கூறினான்—He stated the flaws of the work; for, நூலைக் குற்றங் கூறினான்—*He criticised* (= *blamed*) *the work.*

7th Case: தூணின்கட் சார்ந்தான்—He reached on the pillar; for, தூணைச் சார்ந்தான்—*He reached the pillar.*

Third Case:—கருவிப்பொருள் மூன்றனுருபு ஐந்தனுருபுகளோடன் சிறுபான்மை எழுவாயுருபு, நான்கனுருபு, ஆறனுருபுகளோடும் வரும்.

உதாரணம்:

3rd Case: கண்ணாற் காண்பான்—*He will see with his eyes.*

1st Case: கண் காணும்—The eye will see; for, கண்ணால் காணும்—*He will see with his eyes.*

4th Case: கண்ணிற்குக் காணலாம்—To the eyes, it may appear; for, கண்ணாற் காணலாம்—*One can see with his eyes.*

5th Case: கண்ணிற்காணலாம்—From of the eyes, he may see; for, கண்ணாற் காணலாம்—*One can see with his eyes.*

6th Case: கண்ணினது காட்சி—The sight of the eye; for, கண்ணாலாகிய (ஆக்கிய) காட்சி—*The seeing with the eye.*

Fourth Case.—கோடற்பொருள் நான்கனுருபோடன்றிச் சிறுபான்மை [illegible]ம் வேற்றுமை யொழிந்த எல்லா வுருபுகளோடும் வரும்.

உதாரணம் :

4th Case: நாகருக்குப்பலி—*Sacrifice offered to the gods.*

1st Case: இரப்பவர் என்பெறினுங் கொள்வர்—The beggars receive whatever may be given them ; for, இரப்பவருக்கு என்னகொடுத்தாலும் வாங்கிக்கொள்வர். *Whatever may be given to the beggars, they never refuse to take.*

2nd Case: அழுக்கா றுடையானைச் செய்யவ டவ்வையைக் காட்டிவிடும்—சீதேவி would link together the envious and மூதேவி, as fit associates ; for, அழுக்கா றுடையானைச் செய்யவ டவ்வைக்குக் காட்டிவிடும்—சீதேவி *will give up the envious to* மூதேவி.

3rd Case: நாகராற்பலி—The sacrifice (occasioned) by the gods; for, நாகருக்குப்பலி-*Sacrifice offered to the gods.*

5th Case: நாகரின் அன்புசெய்தான்—He showed the kindness (arising) from (a consideration of) the gods; for, நாகருக்கு அன்புசெய்தான்—*He showed kindness to the gods.*

6th Case: நாகரது பலி—The sacrifice of (=used to be offered to) the gods; for, நாகருக்குப்பலி—*The sacrifice offered to the gods.*

7th Case: நாகர்கண் அன்புசெய்தான் –He showed love towards the gods ; for, நாகருக்கு அன்புசெய்தான்—*He showed love to the gods.*

Fifth Case.—ஐந்தாம்வேற்றுமைப்பொருள்களுள் நீக்கப்பொருள் சிறுபான்மை இரண்டனுருபேற்கும், எல்லைப்பொருள் சிறுபான்மை நான்கனுருபேற்கும் வரும்.

உதாரணம் :

2nd Case: மதுரையை நீங்கினன்—He left Madura ; for, மதுரையின் நீங்கினன்—*He went away from Madura* (நீக்கப்பொருள்).

4th Case: மதுரைக்கு வடக்குச் சிதம்பரம்—Chithumbaram. ... north to Madura; for, மதுரையின் வடக்குச் சிதம்பரம்—*Chithumbaram is to the north of Madura.* (எல்லைப்பொருள்)

Sixth Case.—சம்பந்தப்பொருள் ஆறனுருபோடன்றிச் சிறுபான்மை நான்கனுருபு, ஐந்தனுருபு, ஏழனுருபுகளோடும் வரும்.

உதாரணம் :

6th Case: சாத்தனது கை—*The hand of Satthen.*

4th Case: சாத்தனுக்குமகன்—Son to Satthen; for, சாத்தனுடையமகன்—*Son of Satthen.*

5th Case: மரத்தின் நீங்கின கொம்பு—The branch that is away from the tree; for, மரத்தினுடைய நீங்கின கொம்பு—*The Branch of the tree that is far removed from it.*

7th Case: உயிரின்கண் உணர்வு—Sensation in life; for, உயிரினது உணர்வு—*Sensation of life.*

Seventh Case.—இடப்பொருள் ஏழனுருபோடன்றிச் சிறுபான்மை எழுவாயுருபு, இரண்டனுருபு, நான்கன் உருபுகளோடும் வரும்.

உதாரணம் :

7th Case: தூணின்கட் சார்ந்தான்—*He rested on the pillar.*

1st Case: தூண்போதிகை தொட்டது—The pillar reached the prop; for, தூணின்கண் போதிகை தொட்டது—*The prop rested on the pillar.*

2nd Case: தூணைச்சார்ந்தான்—He rested the pillar; for, தூணின்கட் சார்ந்தான்—*He rested on the pillar.*

4th Case: *காலைக்கு வருவான்—He will come to the morning; for, காலையில் வருவான்—*He will come of a morning.*

---

* "காலை" is from "கால்"—meaning "காலம்"—time. A day is divided, both for ceremonial ablutions in the Hindu temple-worship and by the Pentavi-predictors (பஞ்சபட்சி சாஸ்திரிகள்), into six parts; thus "காலைக்குவருவான்" may mean also "that he will come opportunely" or in a proper time.

N.B.—பொருள் மயக்கத்தை வேற்றுமை உருபுப்பொருள் மயக்கம் என்று கொள்க.

An elliptical use of the case-terminations tend to an ambiguity in meaning ranging from two to seven modes of interpretation.

வேற்றுமையுருபுகள் தொக்குநின்றவழி பொருள்களினாலே மயங்குந் தன்மையையுடைய தொடர்மொழிகள் இரண்டுமுதல் ஏழிறுதிய பொருள்களால் மயங்கும்; உதாரணம்:—

"தெய்வவணக்கம்" may mean :—

1. *தெய்வத்தை வணங்குகிற வணக்கம்* (2nd Case)—The worship wherewith we worship God.
2. *தெய்வத்துக்கு வணக்கம்* (4th Case)—The worship due to God.

"நீர்மோர்" may mean :—

1. *நீரோடு கூடிய மோர்* (3rd Case)—The *மோர்* mixed with *நீர்*.
2. *நீரையுடைய மோர்* (6th Case)—The *மோர்* which has *நீர்*.
3. *நீரும்மோரும் (உம்மைத்தொகை)*—*நீர்* and *மோர்*.

"சொல்லிலக்கணம்" may mean :—

1. *சொல்லினது இலக்கணம் சொன்னநூல்* (1st Case)—The work which treats of the *இலக்கணம்* of the *சொல்*.
2. *சொற்கிலக்கணம்* (4th Case)—*இலக்கணம்* to the *சொல்*.
3. *சொல்லின திலக்கணம்* (6th Case)—*இலக்கணம்* of the *சொல்*.
4. *சொல்லின்கண் இலக்கணம்* (7th Case)—*இலக்கணம்* contained in the *சொல*.

"பொன்மணி" may mean :—

1. *பொன்னாலாகிய மணி* (3rd Case)—The *மணி* made of *பொன்*,

மாலைக்கு, அந்திக்கு, சந்திக்கு, பகலைக்கு, இன்றைக்கு, நாளைக்கு, ஊருக்கு, வீட்டிற்கு,—வருவான். In these words 'கு' the fourth case termination expresses the idea of the *seventh case*; thus, *மாலைக்கு வருவான்* must not be rendered according to the form, " He will come *to* the evening," but according to the idea *மாலை நேரத்தில் வருவான்*, *He will come in the evening*; the former is in the fourth case and the latter in the seventh and so with the others.

2. பொன்னோடுசேர்ந்த மணி (3rd Case)—The மணி mixed with பொன்.
3. பொன்னின்கண் மணி (7th Case)—The மணி in பொன்.
4. பொன்னாலாகிய மணி (பண்பு)—The மணி which is பொன்.
5. பொன்னும் மணியும் (உம்மைத்தொகை)—பொன் and மணி.

"மரவேலி" may mean :—

1. மரத்தைக் காக்கிற வேலி (2nd Case)—The வேலி which protects the மரம்.
2. மரத்தாலாகிய வேலி (3rd Case)—The வேலி made of மரம்.
3. மரத்துக்கு வேலி (4th Case)—The வேலி for the மரம்.
4. மரத்தினது வேலி (6th Case)—The வேலி of the மரம்.
5. மரத்தின்புறத்து வேலி (7th Case)—The வேலி by the side of the மரம்.
6. மரமாகிய வேலி (பண்பு)—The வேலி which is மரம்.

"சொற்பொருள்" may mean :—

1. * சொல்லானதுபொருள் (1st Case)—The பொருள் is சொல்.
2. † சொல்லாலறியப்படும் பொருள் (3rd Case)—The பொருள் conveyed by the சொல்.
3. சொல்லுக்குப்பொருள் (4th Case)—The பொருள் for the சொல்.
4. சொல்லினது பொருள் (6th Case)—The பொருள் of the சொல்.
5. சொல்லின்கட் பொருள் (7th Case)—The பொருள் in the சொல்.
6. சொல்லாகிய பொருள் (பண்பு)—The பொருள் which is சொல்.
7. சொல்லும் பொருளும் (உம்மைத்தொகை)-The சொல் and பொருள்.

"சொல்லானது பொருள்" என்றது தொகாநிலைப் பொருளாகிய எழுவாய்.

† "சொல்லால் அறியப்படும்பொருள்," "சொல்லின் அறியப்படும்பொருள்" என மூன்றுவதனோடு ஐந்தாவதும் விரிப்பாரு முளர். அவை யிரண்டிற்கும் ஏதுப்பொருள் ஒன்றே யாதலின் அது வேற்றுப்பொருளால் மயங்கியதன்றென்க.

வினைச்சொல்—Verb.

VERBS IN TAMIL WITH THEIR EQUIVALENTS IN ENGLISH.

1. **தன்வினை** (1): *ஓடுகிறான்*—He runs; *படிக்கிறான்*—He reads.
2. **பிறவினை** (2): *மாட்டையோட்டுகிறான்*—He drives the bullock (or he *causes* the bullock to *run*). *துரைசாமியைப் படிப்பிக்கிறான்*.—He teaches Doorasawmy (or he *causes* Doorasawmy *to read*).
3. **செய்வினை**—*ஓடுகிறான், படிக்கிறான்*; Active Verb (or Voice)—He *runs*, He *reads*.
4. **செயப்பாட்டு வினை**—*அடிபட்டான்*; Passive Verb (or Voice)—He *was beaten*.
5. **செயப்படுபொருள் குன்றியவினை**—*ஓடுகிறான்*; Intransitive Verb—He *runs*.
6. **செயப்படுபொருள் குன்றாவினை**—*பாடத்தைப் படிக்கிறான்*; Transitive Verb—He *reads* (his) lesson.
7. **இறந்தகால வினையெச்சம்**—*படித்து*; Compound Perfect Participle—*Having learned*.
8. **நிகழ்காலவினையெச்சம்** or **முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சம்**—*வாசிக்கக் கற்பித்தேன், பார்க்கவருகிறான்*; Verb in the Infinitive Mood or Gerund—I taught (him) *to read*. (He) comes *to see*.
9. **எதிர்காலவினையெச்சம்**—*படித்தால் சமர்த்தனாவான்*; Verb in the Subjunctive Mood— *if* (he) *reads* he will become clever.

---

* (1) *தன்-வினை* (=own—action) refers to an action of an agent where the action is of the agent himself; Ex. *திரும்பு*—turn one's self.

(2) *பிற-வினை* (=another-action or Causal Verb) refers to an action caused by an agent but done by another; Ex. *திருப்பு*—turn another, cause to turn.

10. இறந்தகாலப் பெயரெச்சம்—*படித்த மனிதன்*; Perfect Participial Adjective—*Learned* man.

11. நிகழ்காலப் பெயரெச்சம்—*ஓடுகிற குதிரை*; Imperfect Participial Adjective—*Running* horse or a horse that runs.

12. எதிர்காலப் பெயரெச்சம்—*ஓடுங்குதிரை*; Imperfect Participial Adjective—*runninɛ* horse, or a horse that would run well.

13. வினைமுற்று—*படிக்கிறான்*; Finite Verb—He reads.

14. தன்மை வினைமுற்று—*படிக்கிறேன்*; Verb, Indicative Mood, First Person—I read.

15. முன்னிலை வினைமுற்று—*படிக்கிறாய்*; Verb, Indicative Mood, Second Person—You read.

16. படர்க்கை வினைமுற்று—*படிக்கிறான்*; Verb, Indicative Mood, Third Person—He reads.

17. ஏவல் வினைமுற்று—(*நீ*) *படி*; Verb, Imperative Mood, Second Person—*Read* (you or thou).

18. வியங்கோள் வினைமுற்று (*நீ சுகமாய்*) இருப்பாயாக; Verb in the Optative Mood—*May* you *be* happy.

19. விதிவினை அல்லது உடன்பாட்டுவினை—*பார்த்தேன்*; Affirmative Verb—I saw.

20. மறைவினை அல்லது எதிர்மறைவினை—(நான்) பார்க்கவில்லை, Negative Verb—(I) *did not see.*

21. முதனிலை or பகுதி—Root.

22. விகுதி—Termination.

23. *இறந்தகாலம்*—Past Tense. *நிகழ்காலம்*—Present Tense. *எதிர்காலம்*—Future Tense.

24. குறிப்புவினை : Any Verb, or any word used as a predicate, which does not denote any tense in particular but is common to the three tenses.

25. Some words are always *குறிப்புவினை*, such as: உண்டு, வேறு, இல்லை, அல்ல, இன்று, அன்று, &c.

26. The predicate in a sentence, formed by the auxiliaries *may* or *might*, *can* or *could*, and *ought*, *must* or *should*, when rendered into Tamil is always குறிப்புவினை ; Ex. I *may read* or I *might read*—நான் படிக்கலாம்; I *can read* or I *could read*—நான் படிக்க

கூடும்; I *ought to read*, I *must read* or I *should read*—நான் படிக்கவேண்டும்.

27. The predicate in a sentence, formed by the copula (is, are, &c.) and (1) an Adjective, (2) a Noun, or (3) an Adjective and a Noun together, when rendered into Tamil is always குறிப்புவினை. (*It is also termed* பெயர்ப்பயனிலை). Ex. (1). That is good—*அது நல்லது*. (2). He is a merchant—*அவன் வர்த்தகன்*. He is Raman—*அவன் இராமன்*. (3). He is a wise man—*அவன் ஞானவான்*.

N.B.—*For the rules for these verbs, refer to Grammar.*

இடைச்சொல்.

வேற்றுமையுருபுகள், விகுதியுருபுகள், இடைநிலையுருபுகள், சாரியைகள், வினாவெழுத்துகள், சுட்டெழுத்துகள், உவமைச்சொற்கள், தத்தம் பொருளையுணர்த்தியசொற்கள், இசைநிறைக்கிறசொற்கள், அசைநிறைக்கிற சொற்கள், குறிப்பிடைச்சொற்கள் ஆக இடைச்சொற்கள் பதினொரு வகையாம்.

1. வேற்றுமையுருபுகள் (*பெயரியலிற் காண்க*)
2. விகுதியுருபுகள் (*பதவியலிற் காண்க*)
3. இடைநிலையுருபுகள் (*பதவியலிற் காண்க*)
4. சாரியைகள் (*பதவியலிற் காண்க*)
5. வினாவெழுத்துகள் (*எழுத்தியலிற் காண்க*)
6. சுட்டெழுத்துகள் (*எழுத்தியலிற் காண்க*)
7. உவமைச்சொற்கள் :—*போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன, பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய, ஆங்கு முதலிய இருபதும் உவமைச் சொற்களாம்.*
8. தத்தம் பொருளையுணர்த்திய இடைச்சொற்கள்:—ஏ, ஓ, உம், என, என்று, தில், மன், மற்று, கொல், ஒடு, தெய்ய, அந்தில், ஆங்கு, அம்ம, மா, கொள்ளா, தான், பின், முன், *முதலிய பத்தொன்பதும் தத்தம் பொருளையுணர்த்திய இடைச்சொற்களாம்.* (*இடையியலிற் காண்க*)
9. முன்னிலையிடத்து வருகிற அசைச்சொற்கள்:—*மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ முதலிய பத்தும் முன்னிலையிடத்து வருகிற அசைச்சொற்களாம்.* (இடையியலிற் காண்க)

10. எல்லாவிடத்தும் வருகிற அசைச்சொற்கள்:—யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஒரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், கின்று, நின்று, ஆகிய இப்பதினெட்டும் எல்லாவிடத்தும் வரும் அசைச்சொற்களாம். (இடையியலிற் காண்க.)

11. குறிப்பு இடைச்சொற்கள்:—

(a) ஆஅ, ஒஒ, அந்தோ, ஐயோ, அன்னோ, அச்சோ முதலிய ஆறும இரக்கத்தைக் குறிக்கும் இடைச்சொற்கள். (இடையியலிற் காண்க)

(b) கூ, கூகூ, ஐயோ, ஐயையோ முதலிய நான்கும், அச்சத்தைக் குறிக்கும் சொற்கள். (இடையியலிற் காண்க)

(c) எள, சீ முதலிய இரண்டும இகழ்ச்சியைக் குறிக்குஞ் சொற்கள். (இடையியலிற் காண்க)

(d) ஒகோ, ஒஒ, ஆகா, அம்மா முதலிய நான்கும் அதிசயத்தைக் காட்டுஞ் சொற்கள். (இடையியலிற் காண்க)

உரிச்சொல்.

உரிச்சொல் குறிப்பு, பண்பு, இசை யென மூவகைப்படும்.

1. குறிப்பு உரிச்சொற்கள்:—சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் ஆறும் "மிகுதி" என்னுங் குறிப்பை யுணர்த்துவனவாம்.

2. பண்புரிச்சொற்கள்:—"கடி" என்பது காப்பு, கூர்மை, நாற்றம், விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு என்னும் பதின்மூன்று குணங்களை யுணர்த்துவதாம்.

3. இசையுரிச்சொற்கள்:—

(a) முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, துவை, பிளிறு, இரை, இரங்கு, அழுங்கு, இயம்பல், இமிழ், குளிறு, அதிர், குரை, கனை, சிலை, சும்மை, கௌவை, கம்பலை, அரவம், ஆர்ப்பு என்னும், இருபத்திரண்டும் "ஓசை" என்னும் இசையை யுணர்த்துவனவாம்.

(b) மாறறம், நுவற்சி, செப்பு, உரை, கரை, நொடி, இசை, கூற்று, புகறல், மொழி, கிளவி, விளம்பு, அறை, பாட்டு, பகர்ச்சி, இயம்பல் என்னும் பதினாறும் "சொல்" என்னும் இசையை யுணர்த்துவனவாம்.

METHOD OF PARSING NOUNS.

பெயர்ச்சொல்லுக்கு இலக்கணங் கூறும் விதம்.

1. முதல் வேற்றுமையிலுள்ள ஒரு பெயர்ச்சொல்லுக்கு இலக்கணங் கூறும் விதம்:—இன்ன திணை, பால், இடம், பெயர்ச்சொல் என்று கூறி, இன்ன பயனிலைக்கு எழுவாயாக நிற்கின்றதென்று சொல்லி முடிக்கவேண்டும்.

2. எட்டாம் வேற்றுமையிலுள்ள ஒரு பெயர்ச்சொல்லுக்கு இலக்கணங் கூறும் விதம்:—இன்ன திணை, பால், இடம், பெயர்ச்சொல், வேற்றுமை யென்று கூறி, இன்ன வினைகொண்டு முடிகிறதென்று சொல்லி முடிக்கவேண்டும்.

3. முதல் வேற்றுமை[redacted]தவிர, மற்றெந்த வேற்றுமையிலாவதுள்ள ஒரு பெயர்ச்சொல்லுக்கு இலக்கணங்கூறும்விதம்:—வேற்றுமையும் அதற்குரிய பொருளையுங் கூறியபின்; இன்ன திணை, பால், இடம், பெயர்ச்சொல் என்றும், இன்ன சொல்லைக்கொண்டு முடிகிறதென்றுஞ் சொல்லி, முடிக்கவேண்டும்.

N.B.—இரண்டாம் வேற்றுமையிலுள்ள ஒருபெயர்ச்சொல்லுக்கு இலக்கணங் கூறும்போது மாத்திரம், பெயர்ச்சொல்லுக்குரிய இலக்கணங்களைக்கூறினபின், இன்ன வினைச்சொல்லுக்குச் "செயப்படுபொருளாக" வந்ததென்று சொல்லி முடிக்கவேண்டும்.

METHOD OF PARSING VERBS.

வினைச்சொல்லுக்கு இலக்கணங் கூறும் விதம்.

4. வினைச்சொல்: தெரிநிலைவினை, குறிப்புவினை யென வினைச்சொல் இருவகைப்படும்.

5. தெரிநிலை வினைக்கு இலக்கணங்கூறும்விதம்:—செயப்படுபொருள் குன்றியவினையா, குன்றாவினையாவென்றும்; இறந்தகாலமா, நிகழ்காலமா,

எதிர்காலமாவென்றும்; உடன்பாடா எதிர்மறையாவென்றும்; செய்வினையா, செயப்பாட்டுவினையாவென்றும்; தன்வினையா, பிறவினையாவென்றும்; வினைமுற்று, வினையெச்சமா, பெயரெச்சமா, தொழிற்பெயராவென்றுஞ் சொல்லி; எதைக்கொண்டு முடிகிறதென்று கூறவேண்டும்.

N.B.—வினைமுற்றாயிருந்தால்,—அவ்வினைமுற்றின் எழுவாயின் "திணை. பால், இடங்களை" முதலில் எடுத்துக்காட்டி, பிற்பாடு வினைச்சொல்லுக்குரிய இலட்சணங்களைக் கூறி, இன்ன "எழுவாய்க்குப் பயனிலையாக" வந்ததென்று சொல்லி முடிக்கவேண்டும்.

குறிப்புவினைக்குஇலக்கணங் கூறும் விதம்: உடன்பாடா, எதிர்மறையாவென்றும் ; பொதுக்குறிப்பா, சிறப்புக்குறிப்பா, வினாக்குறிப்பாவென்றும்; வினைமுற்று, வினையெச்சமா, பெயரெச்சமா, தொழிற்பெயராவென்றுஞ் சொல்லி, எதைக்கொண்டு முடிகிறதென்று கூறவேண்டும்.

N.B.—(a) குறிப்பு வினைமுற்றாயிருந்தால்,—குறிப்பு வினைக்குரிய இலக்ஷணங்களை மாத்திரங் கூறி, இன்ன எழுவாய்க்குப் "பயனிலையாக" வந்ததென்று சொல்லி முடிக்கவேண்டும்.

(b) குறிப்புப்பயனிலை "பெயர்ச்சொல்லாயிருந்தால்"—பெயர்ச்சொல்லுக்குரிய இலக்ஷணங்களையெல்லாங் கூறி, இன்ன எழுவாய்க்குப் "பயனிலைய[redacted]வேண்டும்

7. தொழிற்பெயருக்கு இலக்கணங் கூறும் விதம்: பெயர்ச்சொல்லுக்குரிய வேற்றுமையையும், பொருளையும்; வினைச்சொல்லுக்குரிய இலக்ஷணங்களையுங்கூறி, பெயர்ச்சொல்லை முடிக்கும் வண்ணம் முடிக்கவேண்டும்.

METHOD OF PARSING PARTICIPLES.

இடைச்சொல்லுக்கு இலக்கணங் கூறும் விதம்.

8. இடைச்சொல்லுக்குத் தனியே இலக்கணங் கூற முடியாது. என்னெனில்: அதுபெயர்ச்சொல்லையாவது வினைச்சொல்லையாவது அடுத்து வருமேயொழிய, தனியே வரமாட்டாது. ஆகையால், அது எந்தச்சொல்லையடுத்து வருகிறதோ, அந்தச் சொல்லுக்குரிய இலக்கணத்தைக் கூறி, இன்ன பொருளைக் குறிக்கும் இன்ன இடைச்சொல்லோடு கூடி, அனைத்தும் ஒரு சொல்லாய் நின்று, இன்ன சொல்லைக்கொண்டு முடிந்ததென்று சொல்லி முடிக்கவேண்டும்.

METHOD OF PARSING ADJECTIVE OR ADVERB.

உரிச்சொல்லுக்கு இலக்கணங் கூறும் விதம்

9. உரிச்சொல்லானது பெயருரிச்சொல் வினையுரிச்சொல் என இருவகைப்படும். ஆகையால், இன்ன பொருளைக் குறிக்கும் இன்ன உரிச்சொல்லென்று மாத்திரங் கூறி, இன்ன பெயரை அல்லது இன்ன வினையைத் தழுவி நிற்கின்றதென்று சொல்லி, முடிக்கவேண்டும்,

---

SYNTACTICAL PARSING.

சொன்முடிபிலக்கணத்திற் குதாரணம்:

N.B.—சொல்லிலக்கணம் இதனுளடக்கம்—Etymological Parsing is included in this.

(I.) இலண்டனி லரசாளுகின்ற ஜயலக்ஷுமியாகிய சக்ரவர்த்தினி யொருவருக்குமாத்திரஞ் சிறந்த மரியாதையுண்டு.

1. இலண்டனில் என்பது—இடப்பிறிதின் கிழமைப்பொருளில் வந்த, ஏழாம் வேற்றுமை யுருபேற்று நின்ற, அஃறிணை ஒன்றன்பால் படர்க்கைக் காரண இடப்பெயர்—ஆளுகின்ற என்னும் பெயரெச்ச வினையைக்கொண்டு முடிந்தது.

2. அரசு என்பது—ஆக்கப்படுபொருளில் வந்த, இரண்டாம் வேற்றுமைத் தொகையாகி நின்ற பண்புப்பெயர்—ஆளுகின்ற என்னும் பெயரெச்ச வினைக்குச் செயப்படுபொருளாக நின்றது.

3. ஆளுகின்ற என்பது—தெரிநிலை செயப்படுபொருள் குன்றாத, நிகழ் காலவுடன்பாட்டுத் தன்வினைப் பெயரெச்சம்—சக்ரவர்த்தினி யென்னும் பெயரைக்கொண்டு முடிந்தது.

4. ஜயலக்ஷுமியாகிய என்பது—உயர்திணைப் பெண்பால் படர்க்கை உவமை ஆகுபெயர்—ஆகிய என்னும் பண்புருபை யேற்றுச் சக்ரவர்த்தினி என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது.

5. சக்ரவர்த்தினி என்பது—உயர்திணைப்பெண்பால் படர்க்கையொருமை பொருள் பெயர்—இருபெயரொட்டுப்பண்புத் தொகையாகி, ஒருவருக்கு என்னும் பெயர்ச்சொல்லோடு ஒத்து நின்றது.

[illegible] என்பது—[illegible] பொருளில் வந்த [illegible] வேற்றுமை [illegible] என்னும் மரியாதையென்னும் [illegible] [illegible] உயர்திணைப் பெண்பால் படர்க்கை [illegible]

பெயர்—பிரிநிலையைக் குறிக்கும் மாத்திரம் என்னும் இடைச்சொல்லோடு கூடி, அனைத்தும் ஒரு சொல்லாக நின்று, உண்டு என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

7. சிறந்த என்பது—தெரிநிலை செயப்படுபொருள் குன்றிய, இறந்த கால உடன்பாட்டுத் தன்வினைப் பெயரெச்சம்—மரியாதை யென்னும் பெயரைக்கொண்டு முடிந்தது.

8. மரியாதை என்பது—பால் பகா அஃறிணைப் பண்புப்பெயர்—உண்டு என்னும் வினைமுற்றுக்கு எழுவாயாக நின்றது.

9. உண்டு என்பது—உடன்பாட்டுப் பொதுக்குறிப்பு வினைமுற்று—மரியாதை என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக வந்தது.

(II) வீட்டிலுள்ளவர்கள் கண்டு வியந்துகொள்ளும்பொருட்டு மதிலேறி நிற்பது மிறுமாப்புட னரச நடை நடப்பதும் மயிலுக்கானந்தமாயிருந்தன.

1. வீட்டில் என்பது—பொருள் பிறிதின்கிழமைப்பொருளில் வந்த, ஏழாம் வேற்றுமை யுருபேற்று நின்ற, அஃறிணை யொன்றன்பால் படர்க்கைப் பொருள் பெயர்—உள்ளவர்கள் என்னுஞ் சொல்லைக்கொண்டு முடிந்தது.

2. உள்ளவர்கள் என்பது உயர்திணை பலர்பால் படர்க்கை உடன்பாட்டுச் சிறப்புக்குறிப்பு வினையாலணையும் பெயர்—கண்டு என்னும்வினைக்கு எழுவாயாக நின்றது.

3. கண்டு என்பது—தெரிநிலை செயப்படுபொருள் குன்றாத, இறந்த கால உடன்பாட்டுத் தன்வினை வினையெசசம்—வியந்துகோள்ளும் என்னும் வினையைக்கொண்டு முடிந்தது.

4. வியந்துகோள்ளும் என்பது—தெரிநிலை செயப்படுபொருள் குன்றாத, எதிர்கால உடன்பாட்டுத் தன்வினைப் பெயரெச்சம்—பொருட்டு என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது.

5 பொருட்டு என்பது—பொருட்டுப் பொருளில் வந்த, ஆக என்னும் நான்காம் வேற்றுமை யுருபு தொகையாகி நின்ற பண்புப்பெயர்—ஏறி என்னும் வினையைக்கொண்டு முடிந்தது.

குறிப்பு :

(a) "பொருட்டு" பெயர்ச்சொல்லைத் தொடர்ந்து வரும்போது "நான்காம் வேற்றுமையின் சொல்லுருபாம்". (உ-ம்) அவன் பொருட்டு. இங்கே "பொருட்டு" நான்காம் வேற்றுமையின் சொல்லுருபு. (பொருட்டு= or "நிமித்தம்").

(b) "பொருட்டு" வினைச்சொல்லைத் தொடர்ந்து வரும்போது "பெயர்ச்சொல்லாம்" (உ-ம்) அவன் வரும்பொருட்டு. இங்கே "பொருட்டு", பண்புப் பெயர்ச்சொல். (பொருட்டு="நிமித்தம்").

(c) "பொருட்டு" குறிப்பு முற்றாயிருந்தால், "பொருளையுடையது" என்று அருத்தங் கொடுக்கும். (உ-ம்) அது பொருட்டு="அது பொருளையுடையது".

6. **மதில்**. என்பது—பொருள் பிறிதின் கிழமைப்பொருளில் வந்த, ஏழாம் வேற்றுமை உருபு தொகையாகி நின்ற, பால் பகா அஃறிணைப் படர்க்கைப் பொருள் பெயர்—(ஈண்டு ஒன்றன்பால்)—**ஏறி** என்னும் வினையைக் கொண்டு முடிந்தது.

7. **ஏறி** என்பது—தெரிநிலை செயப்படுபொருள் குன்றிய, இறந்தகால உடன்பாட்டுத் தன்வினை வினையெச்சம்—**நிற்பதும்** என்னும் தொழிற்பெயரைக்கொண்டு முடிந்தது.

8. **நிற்பதும்** என்பது—எண்ணுப் பொருளைத்தரும் **உம்** என்னும் இடைச்சொல்லை யேற்றுவந்த, தெரிநிலை செயப்படுபொருள் குன்றிய, எதிர்கால உடன்பாட்டுத் தன்வினைத் தொழிற்பெயர்—**இருந்தன** என்னும் வினைமுற்றுக்கு எழுவாயாக நின்றது.

9. **இறுமாப்புடன்** என்பது—விசேடணப் பொருளில் வந்த, மூன்றும் வேற்றுமை யுருபேற்று நின்ற, தன்வினைத் தொழிற்பெயர்—**நடப்பதும்** என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது. (விசேஷணம் or விசேடணம்=அடைமொழி).

10. **அரசன்** என்பது—பண்புத்தற்கிழமைப்பொருளில் வந்த, (**அது** என்னும் உருபு தொக்க) ஆறும் வேற்றுமைத்தொகையாகி நின்ற, உயர்திணை ஆண்பாற் படர்க்கைப் பண்படியாகப் பிறந்த பொருள் பெயர்—**நடை** என்னும் பெயரைத்தழுவி நின்றது,

11. **நடை** என்பது—காலங்காட்டாத தன்வினைத் தொழிற்பெயர்—அடையப்படு பொருளில் வந்த இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகையாகி, **நடப்பதும்** என்னுஞ் சொல்லைக்கொண்டு முடிந்தது.

12. **நடப்பதும்** என்பது—(எண்ணுப் பொருளைத்தரும் **உம்** என்னும் இடைச்சொல்லை யேற்றுவந்த) தெரிநிலை செயப்படுபொருள் குன்றிய, எதிர்கால உடன்பாட்டுத் தன்வினைத் தொழிற்பெயர்—**இருந்தன** என்னும் வினைமுற்றுக்கு எழுவாயாக நின்றது.

13. **மயிலுக்கு** என்பது—தகுதிப்பொருளில் வந்த, நான்காம் வேற்றுமையுருபேற்று நின்ற, பால்பகா அஃறிணைப்படர்க்கை இடுகுறிபொருள்பெயர்—(ஈண்டு ஒன்றன்பால்) **ஆனந்தமாய்** என்னுஞ் சொல்லைக்கொண்டு முடிந்தது.

14. **ஆனந்தமாய்** என்பது—தெரிநிலை செயப்படுபொருள் குன்றிய, இறந்தகால (செயவென்னும் வாய்பாடு திரிந்த செய்தென்னும்) உடன்பாட்டுத் தன்வினை வினையெச்சம்—**இருந்தன** என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.

குறிப்பு: "ஆ" என்னும் வினையடி "ஆனந்தம்" என்னும் பண்புப்பெயருடன் புணர்ந்து, அதனை வினைப்படுத்தியது.

15. **இருந்தன** என்பது—அஃறிணைப் பலவின்பால் படர்க்கைத் தெரிநிலை செயப்படுபொருள் குன்றிய, இறந்தகால உடன்பாட்டுத் தன்வினை வினைமுற்று—**நிற்பதும் நடப்பதும்** என்னும் எழுவாய்களுக்குப் பயனிலையாக வந்தது.

(III.) மைசூரரசனை நோக்கி, நீர் வாழ்க வென்றொரு பெரியவர் கூறினார்.

1. **மைசூர்** என்பது—தகுதிப்பொருளில் வந்த, நான்காம் வேற்றுமையுருபு தொகையாகி நின்ற, அஃறிணை யொன்றன்பால் படர்க்கைக் காரண இடப்பெயர்—**அரசனை** யென்னுஞ் சொல்லைக்கொண்டு முடிந்தது.

2. **அரசனை** என்பது—வாழ்த்துப் பொருளில் வந்த, இரண்டாம் வேற்றுமை யுருபேற்று நின்ற, உயர்திணை ஆண்பாற் படர்க்கைப் பண்படியாகப் பிறந்த பொருள் பெயர்—**நோக்கி** என்னும் வினைக்குச் செயப்படுபொருளாக நின்றது.

3. **நோக்கி** என்பது—தெரிநிலை செயப்படுபொருள் குன்றாத, இறந்தகால உடன்பாட்டுத் தன்வினை வினையெச்சம்—**கூறினார்** என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.

4. **நீர்** என்பது—திணை பால் பொதுவாகிய முன்னிலை பன்மைப்பெயர் (ஈண்டு அரசனைக் குறிக்கின்றது)—**வாழ்க** என்னும் வினைமுற்றுக்கு எழுவாயாக நின்றது.

5. **வாழ்க** என்பது—தெரிநிலை செயப்படுபொருள் குன்றிய, எதிர்கால உடன்பாட்டுப் பொதுவியங்கோள் தன்வினை வினைமுற்று—**நீர்** என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக வந்தது.

6. **என்று** என்பது—**வாழ்க** என்னும் வினையை யடுத்து வந்த இடைச்சொல்—**கூறினார்** என்னும் வினைமுற்றைத் தழுவி நின்றது.

7. **ஒரு** என்பது—ஒன்று என்பதின் விகாரமொழியாகிய எண்ணுப்பெயர் (இதுபண்பினுளடங்கும்)—**பெரியவர்** என்னும் பெயரை விசேடித்து நின்றது.

8. **பெரியவர்** என்பது—உயர்திணை ஆண்பாற் படர்க்கைப் பண்படியாகப் பிறந்த பொருள்பெயர்—**கூறினார்** என்னும் வினைமுற்றுக்கு எழுவாயாக நின்றது.

9. கூறினார் என்பது—உயர்திணை ஆண்பாற் படர்க்கைத் தெரிநிலை செயப்படுபொருள் குன்றாத, இறந்தகால உடன்பாட்டுத் தன்வினை வினைமுற்று—பெரியவர் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக வந்தது.

அப்பியாசம் :

N. B.—11-ம் பக்கத்தில், வாக்கியாங்கச் சேதன விலக்கணங் கூறுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் 24வாக்கியங்களுக்குஞ் சொன்முடி பிலக்கணங் கூறுக.

புணர்ச்சியிலக்கணக் குறிப்பு.

(1) புணர்ச்சி யென்பது நிலைமொழியும் வருமொழியும் ஒன்றோடொன்று புணருவது. அது **பொருட்புணர்ச்சி பதப்புணர்ச்சி** யென இருவகையாம்.

குறிப்பு.

(*a*) புணர்ச்சியில் உயிர்மெய்யீற்று மொழியை "உயிரீற்றுமொழி" என்றும், உயிர்மெய்ம்முதன் மொழியை "மெய்ம்முதன்மொழி" என்றுங் கொள்க.

(*b*) மெய்ம்முதன் மெய்யீறு, மெய்ம்முதல் உயிரீறு, உயிர்முதல் உயிரீறு, உயிர்முதன் மெய்யீறு ஆகிய நான்குவகை மொழிகள் நிலைமொழி வருமொழியாக நின்று ஒன்றோடொன்று புணரும் என்று அறிக. "உதாரணம்":—கடவுள் ஆளுகிறார்—மெய்யீற்று மொழிமுன் உயிர்முதன் மொழிவந்து புணர்ந்தது. அவர் வருவார்—மெய்யீற்று மொழிமுன் மெய்ம்முதன் மொழிவந்து புணர்ந்தது. கிருபை புரிவார்—உயிரீற்று மொழிமுன் மெய்ம்முதன் மொழிவந்து புணர்ந்தது. என்னை ஆதரிப்பார்—உயிரீற்று மொழிமுன் உயிர்முதன்மொழி வந்து புணர்ந்தது.

(2) பொருட் புணர்ச்சியாவது ஒரு மொழி தன் பொருள் நோக்கத்தால் வேறு மொழியோடு புணர்ந்து நிற்பது. அது **வேற்றுமைப்புணர்ச்சி அல்வழிப்புணர்ச்சி** என இருவகைப்படும்.

(3.) வேற்றுமைப் புணர்ச்சி ஐ, ஆல், கு, இன், அது, இல் என்னும் ஆறு உருபுகளும் மொழிக்கு நடுவில் மறைந்தும் வெளிப்பட்டும் நிற்கப் பதங்கள் பொருந்தும் புணர்ச்சியாம்.

உதாரணம்:

("வேற்றுமைத் தொகை".)	("வேற்றுமை விரி")	("உருபு".)
2. நீர் குடித்தான்............	நீரைக்குடித்தான்............	ஐ.
3. கல்லெறிந்தான்............	கல்லாலெறிந்தான்............	ஆல்.
4. கூலிவேலை............	கூலிக்குவேலை............	கு.
5. மலைவீழருவி............	மலையின்வீழருவி............	இன்.
6. கனகசிகாமணிகை............	கனகசிகாமணியதுகை............	அது.
7. காட்டுப்புலி............	காட்டில்புலி............	இல்.

குறிப்பு

(a வேற்றுமை யேற்ற பெயர்ச்சொல்லுக்கும் அது கொண்டு முடியுஞ் சொல்லுக்கும் மத்தியில் உருபுமாத்திரம் வருவது "வேற்றுமைத் தழுவுதொடர்" என்றும், உருபோடு அவ்விடத்திற்கேற்ற வேறுமொழி வந்து முடிவது "வேற்றுமைத் தழாததொடரென்றுஞ்" சொல்லப்படும் (உ ம) நீர் குடித்தான் நீரைக்குடித்தான்—இவ்விரண்டும் வேற்றுமைத் தழுவுதொடராம், தயிர்க்குடம் (தயிரையுடைய குடம்) வேற்றுமைத் தழாததொடராம்

(b) தழாததொடராவது நிலைமொழி வருமொழியைப் பொருட்பொருத்தம் உறத் "தழுவாததொடர்," பொருட்பொருத்தம் உறத் தழுவிய தொடர் "தழுவுதொடர்"

(c) மொழிக்கு நடுவில் வேற்றுமை யுருபுகள் தொக்கு வருவதன்றி அதுகொண்டு முடியும் வேறு மொழியுந் தொக்குவரின் உருபும் பயனும் உடன்றொக்கத்தொகை யென்னப்படும் உதாரணம்:—பொன்காசு = பொன் + ஆல் + ஆகிய காசு, கைக்களிறு = கை + ஐ + உடைய களிறு

(d) வேற்றுமைத் தொகை விரிந்தவிடத்து "வேற்றுமைத் தொகாநிலைத்தொடராம்" வேற்றுமை "யுருபும்" "பயனும்" உடன்றொக்கத்தொகை விரிந்தவிடத்து முன்னது வேற்றுமைத் தொகாநிலைத் தொடரும், பின்னது பெயரெச்சத்தொகாநிலைத்தொடருமாம்

(4) அல்வழிப் புணர்ச்சியாவது வேற்றுமையுருபுகள் இடையில்வராமல் நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப் புணருவது. அது தொகைநிலைத் தொடர் தொகாநிலைத்தொடரென இருவகைப்படும்.

உதாரணம் :

(தொகைநிலைத்தொடர்—5).

1. வினைத்தொகை — கொல்யானை, அடுகளிறு
2. { பண்புத்தொகை — கருங்குதிரை, செந்தாமரை,
 { இருபெயரொட்டுப் பண்புத்தொகை } — சாரைப்பாம்பு, ஆயன் சாத்தன்
3. உவமைத்தொகை — மதிமுகம், பவளவாய்
4. உம்மைத்தொகை . — இராப்பகல், சேரசோழபாண்டியர்
5. அன்மொழித்தொகை — தேன்மொழி வந்தாள், தாழ்குழல்

(தொகாநிலைத்தொடர்—9)

1. எழுவாய்த்தொடர் — கனகசிகாமணி வந்தான்
2. விளித்தொடர் — சாத்தா வா,
3. { தெரிநிலைப் பெயரெச்சத்தொடர் — வந்த குதிரை
 { குறிப்புப் பெயரெச்சத் தொடர் — பெரியசாத்தன்
4. { தெரிநிலைவினையெச்சத்தொடர் — வந்து போனான்.
 { குறிப்பு வினையெச்சத்தொடர் — விருந்தின்றி யுண்ணான்.
5. தெரிநிலை வினைமுற்றுத்தொடர் — வந்தான் கனகசிகாமணி.
6. குறிப்பு வினைமுற்றுத்தொடர் — பொன்னன் இவன்
7. இடைச்சொற்றொடர் — மற்றொன்று
8. உரிச்சொற்றொடர் ... — நனிபேதை
9. அடுக்குத்தொடர் .. — பாம்பு பாம்பு.

குறிப்பு.

(a) மேற்கண்டபதினன்கு வகையும் அல்வழி தழுவுதொடர் என்னப்படும். 'சுரையாழ அம்மி மிதப்ப' என்பது 'சுரைமிதப்ப அம்மியாழ' எனக் கூட்டப்படுதலால் "சுரை" என்பது "ஆழ" என்பதையும் "அம்மி" என்பது மிதப்ப என்பதையுந் தழுவாமையால் இப்படி வருகின்றவைகளெல்லாம் தழாத்தொடராகிய அல்வழிப் புணர்ச்சியாம்.

(b) வினைத்தொகை விரிந்தவிடத்துப் பெயரெச்சத் தொகாநிலைத்தொடராம். பண்புத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்தவிடத்து இடைச்சொற்றொடராம். உவமைத்தொகை விரிந்தவிடத்து முன்னது இடைச்சொற்றொடராம். பின்னது இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்ச வினையெச்சத்தொடருமாம். அன்மொழித்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் முதல் ஏற்பனவாம்.

(c) நிலைமொழி முதல் வேற்றுமையாகவும், விளிவேற்றுமையாகவும், தெரிநிலைப் பெயரெச்சமாகவும், குறிப்புப் பெயரெச்சமாகவும், தெரிநிலை வினையெச்சமாகவும், குறிப்பு வினையெச்சமாகவும், தெரிநிலை வினைமுற்ருகவும், குறிப்பு வினைமுற்ருகவும், இடைச்சொல்லாகவும், உரிச்சொல்லாகவும் நின்ருல், அவை முறையேஎழுவாய்த்தொடர், விளித்தொடர், தெரிநிலைப் பெயரெச்சத்தொடர், குறிப்புப் பெயரெச்சத்தொடர், தெரிநிலை வினையெச்சத்தொடர், குறிப்பு வினையெச்சத்தொடர், தெரிநிலை வினைமுற்றுத்தொடர், குறிப்பு வினைமுற்றுத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர் எனறு சொல்லப்படும்.

(5) பதப்புணர்ச்சியாவது நிலைமொழியீறும் வருமொழி முதலும் ஒன்றுபட்டிணங்குவதாம். அது **இயல்பு புணர்ச்சி விகாரப்புணர்ச்சி** யென இருவகைப்படும்.

(6) நிலைமொழியும்வருமொழியும்விகாரப்படாமல் புணருவது **இயல்பு புணர்ச்சியாம்.**

(உ-ம்) பொன்+மணி=பொன்மணி, அலை+பெரிது=அலைபெரிது.

(7) நிலைமொழியும் வருமொழியும் ஒன்ருேடொன்று புணரும்போது தோன்றல் திரிதல் கெடுதல் விகாரங்களைப்பெற்று வருவது **விகாரப்புணர்ச்சியாம்.**

(8) நிலைமொழிக்கும் வருமொழிக்கும் நடுவில் எழுத்தாவது சாரியையாவது தோன்றுவது **தோன்றல் விகாரமாம்.**

உதாரணம்:—மா+காய்=மாங்காய், ஙகரந்தோன்றியது, ஆல்+காய்=ஆலங்காய், 'அம்' சாரியை தோன்றியது.

(9) ஒரெழுத்து மற்ருேரெழுத்தாகத் திரிந்து வருவது **திரிதல் விகாரமாம்.**

உதாரணம்:—கல்+மலை=கன்மலை, லகரம் னகரமாகத் திரிந்தது; பொன்+தகடு=பொற்றகடு, னகரமுந் தகரமும் றகரமாகத் திரிந்தன.

(10) உள்ள எழுத்துக் கெட்டுநிற்பது **கெடுதல் விகாரமாம்.**

உதாரணம்:—மரம்+வேர்=மரவேர், மகரங்கெட்டது.

யடிகள் நூல்

குறிப்பு.

(a) ... மொழி வருமொழிகளுடைய (முதல், இடை, கடை) மூன்றிடத்தும் வரும். உதாரணம் :—ஆறு+பத்து=அறுபது; இரும்பு+உலக்கை = இருப்புலக்கை, பல+பொருள்=பல்பொருள்.

(b) ஒரு புணர்ச்சியில் ஒரு விகாரம் வருவதல்லாமல் இரண்டு அல்லது மூன்று விகாரங்கள் வருதலும் உண்டு. உதாரணம்:—அவனை+அடித்தான்=அவனையடித்தான், அவனை+பார்த்தான்=அவனைப்பார்த்தான்— இவ்விரண்டுந் தோன்றல் விகாரம். கல்+மலை =கன்மலை, கல்+தீது=கற்றீது—இவ்விரண்டுந் திரிதல் விகாரம். மரம்+நார்=மரநார், பல+பொருள்=பல்பொருள்—இவ்விரண்டுங் கெடுதல் விகாரம். குளம்+கரை=குளக்கரை, மரம்+அடி=மரவடி, நாழி+உரி=நாடுரி—இம்மூன்றுங் கெடுதலுந் தோன்றலும் அடைந்த விகாரம். ஆறு+பத்து=அறுபது, வேள்+நன்மை=வேணன்மை—இவ்விரண்டுந் திரிதலுங் கெடுதலும் அடைந்த விகாரம், பனை+காய்=பனங்காய்—இது கெடுதலுந், தோன்றலுந், திரிதலும் அடைந்த விகாரம்.

பதப்புணர்ச்சி யிலக்கணத்திற்கு உதாரணம்:

N.B.—பொருட்புணர்ச்சி யிலக்கணம் இதனுளடக்கம்-Combination of Ides is included in this.

I. இலண்டனி லரசாளுகின்றஜயலக்ஷுமியாகிய சக்ரவர்த்தினி யொருவருக்கு மாத்திரஞ் சிறந்த மரியாதையுண்டு.

1. இலண்டனில் + அரசு என்பது—இயல்புபுணர்ச்சி ; வேற்றுமைவழி, ஏழாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்

2. அரசு + ஆளுகின்ற என்பது —கெடுதல் விகாரப்புணர்ச்சி: வேற்றுமை வழி, இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்

3. ஆளுகின்ற + ஜயலக்ஷுமியாகிய என்பது—இயல்பு புணர்ச்சி ; அல்வழித் தெரிநிலைப் பெயரெச்சத்தொடர்.

4. ஜயலக்ஷுமியாகிய + சக்ரவர்த்தினி என்பது --இயல்பு புணர்ச்சி ; அல்வழி யிடைச்சொற்றொடர்.

5. சக்ரவர்த்தினி + ஒருவருக்குமாத்திரம் என்பது—தோன்றல் விகாரப் புணர்ச்சி; அல்வழிப் பண்புத்தொகை நிலைத்தொடர்.

6. ஒருவருக்குமாத்திரம் + சிறந்த என்பது—திரிதல் விகாரப்புணர்ச்சி ; அல்வழி யிடைச்சொற்றொடர்.

7. சிறந்த + மரியாதை என்பது—இயல்பு புணர்ச்சி; அல்வழித் தெரிநிலைப் பெயரெச்சத்தொடர்.

8. மரியாதை + உண்டு என்பது தோன்றல் விகாரப்புணர்ச்சி: அல்வழி யெழுவாய்த்தொடர்.

(II.) வீட்டிலுள்ளவர்கள் கண்டு வியந்துகொள்ளும் பொருட்டு மதிலேறி நிற்பது மிறுமாப்புட னரசனடை நடப்பதும் மயிலுக்கானந்தமாயிருந்தன.

1. **வீட்டில் + உள்ளவர்கள்** என்பது—இயல்பு புணர்ச்சி; வேற்றுமை வழி, ஏழாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

2. **உள்ளவர்கள் + கண்டு** என்பது—இயல்பு புணர்ச்சி; அல்வழி, யெழுவாய்த்தொடர்.

3. **கண்டு + வியந்துகொள்ளும்** என்பது—இயல்பு புணர்ச்சி; அல்வழி, தெரிநிலை வினையெச்சத்தொடர்.

4. **வியந்துகொள்ளும் + பொருட்டு** என்பது—இயல்பு புணர்ச்சி; அல்வழித் தெரிநிலைப் பெயரெச்சத்தொடர்.

5. **பொருட்டு + மதில்** என்பது—இயல்பு புணர்ச்சி; வேற்றுமைவழி, நான்காம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.

6. **மதில் + ஏறி** என்பது—இயல்பு புணர்ச்சி; வேற்றுமைவழி, ஏழாம் வேற்றுமைத்தொகை நிலைத்தொடர்.

7. **ஏறி + நிற்பதும்** என்பது—இயல்பு புணர்ச்சி; அல்வழித் தெரிநிலை வினையெச்சத்தொடர்.

8. **நிற்பதும் + இறுமாப்புடன்** எனபது—இயல்பு புணர்ச்சி; (தழாஅத் தொடர்) அல்வழி, எழுவாய்த்தொடர்.

9. **இறுமாப்புடன் + அரசன்** என்பது—இயல்புபுணர்ச்சி; வேற்றுமை வழி, மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

10. **அரசன் + நடை** என்பது—திரிதலுங் கெடுதலுமடைந்த விகாரப்புணர்ச்சி; வேற்றுமைவழி, ஆறாம்வேற்றுமைத்தொகை நிலைத்தொடர்.

11. **நடை + நடப்பதும்** என்பது—இயல்பு புணர்ச்சி; வேற்றுமைவழி, இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகைநிலைத்தொடர்.

12. **நடப்பதும் + மயிலுக்கு** என்பது—இயல்பு புணர்ச்சி; (தழாஅத் தொடர்) அல்வழி, எழுவாய்த்தொடர்.

13. **மயிலுக்கு + ஆனந்தமாய்** என்பது—கெடுதல் விகாரப்புணர்ச்சி; வேற்றுமைவழி, நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

14. **ஆனந்தமாய் + இருந்தன** என்பது—இயல்பு புணர்ச்சி; அல்வழித் தெரிநிலை வினையெச்சத்தொடர்.

(III.) மைசூராசனை நோக்கி நீர் வாழ்க வென்றொரு பெரியவர் கூறினர்.

1. மைசூர் + அரசனை என்பது—இயல்பு புணர்ச்சி ; வேற்றுமைவழி, நானகாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.

2. அரசனை + நோக்கி என்பது—இயல்புபுணர்ச்சி; வேற்றுமைவழி, இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

3. நோக்கி + நீர் என்பது—இயல்பு புணர்ச்சி ; அல்வழித்தெரிநிலை வினையெச்சத்தொடர்.

4. நீர் + வாழ்க என்பது—இயல்புபுணர்ச்சி ; அல்வழி, எழுவாய்த் தொடர்.

5. வாழ்க + என்று என்பது—தோன்றல் விகாரப்புணர்ச்சி; அல்வழி, தெரிநிலை வினைமுற்றுத்தொடர்.

6. என்று + ஒரு என்பது—கெடுதல் விகாரப்புணர்ச்சி; அல்வழி, இடைச் சொற்றொடர்.

7. ஒரு + பெரியவர் என்பது—இயல்புபுணர்ச்சி; அல்வழிப் பண்புத தொகைநிலைத்தொடர்.

8. பெரியவர் + கூறினர் என்பது—இயல்பு புணர்ச்சி ; அல்வழி, எழுவாய்த்தொடர்.

அப்பியாசம்.

N.B.—11-ம் பக்கத்தில்—வாக்கியாங்கச்சேதன விலக்கணங் கூறுவதற் காகக் கொடுக்கப்பட்டிருக்கும் 24 வாசகியங்களுக்கும் புணர்ச்சி யிலக்கணங் கூறுக. (பதப்புணர்ச்சியும் பொருட்புணர்ச்சியு மென்றறிக.)

ON DIVISIBLE WORDS.

பகுபத முடிபிலக்கணக் குறிப்பு

WORDS.—பதங்கள்.

1. Words. எழுத்துகள் தனித்தாவது இரண்டு முதலியவாகத் தொடர்ந்தாவது ஒரு பொருளைத் தெரிவித்தால் பதமாம். அது பகாப்பதம் பகுபதம் என இருவகையாம்.

2. ஓர் எழுத்தாலாகிய மொழிகள்:—

(a) சிறப்புப்பதங்கள்:—ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ; கா, கூ, கை, கோ ; சா, சீ, சே, சோ; தா, தீ, து, தூ, தே, தை; நா, நீ, நே, நை, நொ, நோ ; பா, பூ, பே, பை, போ; மா, மீ, மூ, மே, மை, மோ, யா; வா, வீ, வை, வெள.

(b) ஒப்பற்ற பதங்கள் —உ, ஒ, ஒள, கீ, கு, கௌ, கொ, த; தூ, நூ; ப, பீ, பீ, ம வி, வே

3. Simple words பகுக்கப்படாத இயல்பினையுடைய சொல் பகாப்பதம். அது இரண்டு எழுத்துமுதல் எழெழுத்து ஈறுகத்தொடரும். (உ-ம்) அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி.

4. Compound words. பகுதி விகுதி முதலிய உறுப்புகளால் பகுக்கப்படுஞ் சொல் பகுபதம் அது இரண்டு எழுத்து முதல் ஒன்பது எழுத்து ஈறுகத் தொடரும் (உ-ம்) கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான்.

கவனிப்பு

(a) ஒரே பகுதியையுடைய ஒருபகுபதம் இரண்டெழுத்து முதல் ஒன்பது எழுத்திறுகத்தொடரும் ஆனால், நடத்துவிப்பிக்கிறான் என்பகுதி முதலிய உறுப்பு வேறுபட்டு வருகின்றவைகளுக்கு இவ்வரையறை யில்லையென்றறிக

(b) பகுத்தால் பொருள் உள்ளது பகுபதம், பகுத்தால் பொருள் இல்லது பகாப்பதம்

5. பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகிய இவ்வாறுமே பகுபதத்தின் உறுப்புகளாம்.

6 Root பகுதி —சொற்களின் முதலில் பகாப்பதமாய் நிற்பதே பகுதி என்னப்படும். (உ-ம்) அறிஞன் என்பதில் "அறி" என்பதும், கூனன் என்பதில் "கூன்" என்பதும் பெயர்ப்பகுதிகளா . நடக்கிறன் என்பதில் "நட" என்பதும், செய்கிறன் என்பதில் "செய்" என்பதும் வினைப்பகுதிகளாம்

7. Termination. விகுதி.—விகுதியாவது மொழியின் கடையில் நிற்கும் ஓர் உறுப்பாம். (உ ம்) கோக்கள் என்பதில் "கள்" என்பதும், துருமார் என்பதில் "மார்" என்பதும் பெயர்விகுதிகள் ; வந்தான் என்பதில் "ஆன்" என்பதும், போனுள் என்பதில் "ஆள்" என்பதும் வினைவிகுதிகள்.

8 Middle Particle. இடைநிலை —இடைநிலையாவது பகுதி விகுதிகளுக்கு மத்தியில் நின்று பெயர்ச்சொற்களிற் காலத்தை யுணர்த்தாமலும், வினைச்சொற்களிற் காலத்தை யுணர்த்தியும் நிற்கின்ற ஓர் உறுப்பாம். (உ-ம்) வலைச்சி, வலைஞன்—இவற்றில் சகரமும் ஞகரமும் பெயர் இடைநிலைகள் படிக்கிறன் என்பதில் "கிறு" என்பதும் போயினன் என்பதில் "இன்" என்பதும் வினை இடைநிலைகள்

9. Euphonic particle. சாரியை:—சாரியையாவது செவிக்கு இன்பம் பயத்தற் பொருட்டு மொழிகளைச் சார்ந்துவரும் ஓர் உறுப்பாம். (உ-ம்) ஆலங்காய் என்பதில் "அம்" என்பதும், வந்தனன் என்பதில் "அன்" என்பதுஞ் சாரியைகளாம்.

கவனிப்பு:—சாரியைகளின் அட்டவணை:—அன், ஆன், இன், அல், இல், அற்று, இற்று, அத்து, அம், ஆம், தம், நம், நும், ஏ, அ, ஆ, உ, ஐ, கு, து, ன் இவ்விருபத்தொன்றுஞ் சாரியைகளாம். (பதவியலிற் காண்க.)

10. Combination. சந்தியாவது நிலைமொழியும் வருமொழியும் ஒன்றோடொன்று புணருவது. (உ-ம்) பொன்மணி, அலைபெரிது—இவை இயல்பு புணர்ச்சி. மா + காய்=மாங்காய், கல்+மலை=கன்மலை, மரம் + வேர்=மரவேர் —இவை விகாரப்புணர்ச்சி (சந்தி, புணர்ச்சி என்பனஒருபொருட்சொற்கள்.)

11. Change. விகாரம்:—விகாரமாவது மொழிகளில் உண்டாகும் வித்தியாசம். அது செய்யுள் விகாரம், புணர்ச்சி விகாரம், பகுதி விகாரமென மூவகையாம்.

12. செய்யுள் விகாரமென்பது அடி தொடை முதலியவற்றை நோக்கிய விடத்து நேரும். அது வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல், முதற்குறை, இடைகுறை, கடைக்குறை யென ஒன்பது வகைப்படும். இவ்விகாரங்கள் வழக்கத்திலும் உண்டு. (பதவியலிற் காண்க.)

13. புணர்ச்சி விகாரம் நிலைமொழி வருமொழிகளின் சந்திகளினுல் மொழி மூன்றிடத்து நேரும். அது தோன்றல், திரிதல், கெடுதல் என மூன்று வகையாம். இதுதான் பகுபத முடிபிலக்கணத்திற் சந்தி யென்று சொல்லப்படுவது. (புணரியலிற் காண்க.)

14. காலங் காட்டுதற்காயினும் இயல்பாகவாயினும் மொழிகள் விகாரப்பட்டு வருவது பகுதி விகாரமாம். உதாரணம்: நடு—நட்டான் என்பது காலங்காட்டுதல். கோணு—கொணர்ந்தான் என்பது இயல்பாக மாறுதல்.

THE LIST OF TERMINATIONS OF VERBS AND NOUN

விகுதிகளைக் காட்டும் அட்டவணை.

1. தன்மை யொருமை வினைமுற்று விகுதிகள் : என், ஏன், அன், அல், கு, து, டு, று—உண்டனென், உண்டேன், உண்டனன்; உண்பல், உண்கு, வந்து, உண்டு, சென்று.

குறிப்பு.

(a) "அல்"—எதிர்காலத் தன்மை யொருமையில் மாத்திரம் வரும். உண்பல் = உண்பேன்.

(b) "டு"—இறந்தகாலத்தையும் ; "கு"—எதிர்காலத்தையும் ; "து," "று"—இறப்பெதிர்வாகிய இரண்டு காலங்களையும் இடைநிலை வேண்டாதுணர்த்தும். உண்டு = உண்டேன்; உண்கு = உண்பேன் ; வந்து = வந்தேன், சென்று = சென்றேன் ; வருது = வருவேன், சேறு = செல்வேன்.

2. தன்மைப்பன்மை வினைமுற்று விகுதிகள் : அம், ஆம், எம், ஏம், ஓம், கும், தும், டும், றும்—உண்கின்றனம், உண்கின்றாம், உண்கின்றனெம், உண்கின்றேம், உண்கிறோம், உண்கும், வந்தும், உண்டும், சென்றும்.

குறிப்பு:—உண்கும் = உண்போம், வந்தும் = வந்தோம், உண்டும் = உண்டோம், சென்றும் = சென்றோம் ; வருதும் = வருவோம், சேறும் = செல்வோம்.

3. முன்னிலை யொருமை வினைமுற்று விகுதிகள் : ஐ, ஆய், இ—உண்டனை, உண்டாய், உண்டி.

4. முன்னிலைப்பன்மை வினைமுற்று விகுதிகள்: இர், ஈர்—உண்டனிர், உண்டீர்.

5. ஆண்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் : அன், ஆன்—உண்டனன், உண்டான்.

6. பெண்பாற் படர்க்கை வினைமுற்று விகுதிகள் : அள், ஆள்—உண்டனள், உண்டாள்.

7. பலர்பாற் படர்க்கை வினைமுற்று விகுதிகள் : அர், ஆர், ப, மார்—உண்டனர், உண்டார், உண்ப, உண்மார். (உண்ப = உண்டார், உண்பார். உண்மார் = உண்பார்.)

8. ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் : து, று—உண்டது, ஆயிற்று.

9. பலவின்பாற் படர்க்கை வினைமுற்று விகுதிகள் : அ—உண்டன.

10. ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால்களுக்குப் பொதுவாகிய வினைமுற்று விகுதி : உம்—உண்ணும்.

11. ஒருமை ஏவல் வினைமுற்று விகுதிகள் : ஆய், இ—உரையாய், உரைதி.

12. பன்மை ஏவல் வினைமுற்று விகுதிகள். இர், ஈர், மின், உம்—உரைத்திர், உரையீர், உரைமின், உரையும்.

13. வியங்கோள் வினைமுற்று விகுதிகள்: க, ய, ர், அல், ஆல், ஒட்டும், ஆக, கட—வாழ்க, வாழிய, வாழியர், உண்ணல், ஒரால், வாழட்டும், வாழ்வேளுக, வாழக்கடவேன். (ஒரால்=ஒருவற்க=நீங்கற்க=நீங்காதே.)

குறிப்பு:—"அ" "தல்" என்பனவும் வியங்கோள் விகுதிகளாய் வரும். (உ-ம்) நான்மறை யறங்களோங்க, மனத்துக்கண் மாசிலனுதல்.

14. துணைவிகுதி அல்லது விகுதிமேல் விகுதி: கள்—வருவார்கள்.

15. எதிர்மறை விகுதிகள்: ஆ, இல், அல், எல்—செய்யான், செய்கிலீன், செய்கலான், செய்யேல்.

16. இறந்தகால வினையெச்சவினை விகுதிகள்: உ, இ, ய் (யகரமெய்), பு, ஆ, ஊ, என, உம்—படித்து, ஓடி, போய், செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, காண்டலும்.

17. எதிர்கால வினையெச்சவினை விகுதிகள்: இன், இல், ஆல், கால், எல், எனின், ஆயின், ஏனும், ஆனல், இய, இயர், வான், பான், பாக்கு, கடை, வழி, இடத்து, உழி—படிக்கின், படிக்கில், படித்தால், படிக்குங்கால், உண்டானேல், உண்டானெனின், உண்டானுயின், உண்டானேனும், உண்டானுல், ஆடிய, ஆடியர், விடுவான், நடப்பான், விடுபாக்கு, செய்தக்கடை, செய்தவழி, செய்தவிடத்து, செய்துழி.

18. நிகழ்கால (முக்காலத்துக்கும் பொதுவான) வினையெச்சவினை விகுதிகள்: அ, கு—படிக்க, உணற்கு.

19. எதிர்மறை விகுதியோடு வரும் வினையெச்சவினை விகுதிகள் : மல், மை, மே, து—படியாமல், படியாமை, படியாமே, படியாது.

20. இறந்தகாலப் பெயரெச்சவினையில் வரும் விகுதி : அ—படித்த.

21. நிகழ்காலப் பெயரெச்சவினையில் வரும் விகுதி : அ—படிக்கிற.

22. எதிர்காலப் பெயரெச்சவினை விகுதி : உம்—படிக்கும்.

23. எதிர்மறை விகுதியோடு வரும் பெயரெச்சவினை விகுதி : அ—படியாத.

24. இறந்தகாலத் தொழிற்பெயரில் வரும் விகுதிகள் : மை, து—படித்தமை, படித்தது.

25. நிகழ்காலத் தொழிற் பெயரில் வரும் விகுதிகள் : மை, து—படிக்கின்றமை, படிக்கிறது.

26. எதிர்காலத் தொழிற்பெயரில் வரும் விகுதி : து—வருவது.

27. காலங்காட்டாத தொழிற்பெயர் விகுதிகள் : தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, வு, மதி, அடம்,

யானை, ஞல, ஜல, ஞு—படித்தல, ஆடல், வாட்டம, மகாலை, வருகை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, உணர்ச்சி, கல்வி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, தோற்றரவு, வாரானை, இழிவு, இறக்குமதி, கட்டடம், ஆட்டுவான் (=ஆட்டுதல்), எச்சில், தழால், வெகுளி.

28. எதிர்மறை விகுதியோடு வருந் தொழிற்பெயர் விகுதிகள் : ண்மை, து—நடவாமை, நடவாதது.

29. உடன்பாட்டுப் பொதுக்குறிப்பு வினைமுற்றுகள் : டு, தரும், படும், வேண்டும், ஆம், ஒல்லும், கூடும், முடியும்—உண்டு, கற்பிக்கத்தரும், கற்பிக்கப்படும், கற்பிக்கவேண்டும், கற்பிக்கலாம், கற்பிக்கவொல்லும், கற்பிக்கக்கூடும், கற்பிக்கமுடியும்.

30. எதிர்மறைப் பொதுக்குறிப்பு வினைமுற்று விகுதிகள் : ஐ, று, தகாது, படாது, வேண்டாம், ஆகாது, ஒல்லாது, கூடாது, முடியாது—இல்லை, இன்று, கற்பிக்கத்தகாது, கற்பிக்கப்படாது, கற்பிக்கவேண்டாம், கற்பிக்கலாகாது, கற்பிக்கவொல்லாது, கற்பிக்கக்கூடாது, கற்பிக்கமுடியாது.

31. உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்ச வினை விகுதி : அ—மெல்ல.

32. எதிர்மறையில் வரும் குறிப்பு வினையெச்சவினை விகுதிகள் : மல், மை, மே, து, றி, ஆல், கால், கடை, வழி, இடத்து—அல்லாமல், அல்லாமை, அல்லாமே, அல்லது, அன்றி, அல்லால், அல்லாக்கால், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து.

33. உடன்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சவினை விகுதிகள் : டு, இய—செய்ய, அழகிய.

34. எதிர்மறையில் வரும் குறிப்புப்பெயரெச்சவினை விகுதி : அ—இல்லாத.

35. ஆற்றல் உணர்த்தும் விகுதிகள்: மாட்டு, கில்—செய்யமாட்டுவேன், செய்கிற்பேன்.

36. மங்கலப்பொருளை அல்லது வழக்கப்பொருளை யுணர்த்தும் விகுதி: வா.

> **மங்கலம் :** போய் வருகிறேன் (=போகிறேன்), போய்வாரும் (=போம்), அழைத்துவா (=போய் அழை) இவற்றில் போய்வா அழைத்துவா—பகுதிகள்.
>
> **வழக்கு :** நடந்துவருகிறது (=நடக்கிறது), செய்து வருகிறார்கள் (=செய்கிறார்கள்). இவற்றில் "நடந்துவா" 'செய்துவா"—பகு

37. *கிருபைப்பொருளை யுணர்த்தும் விகுதி* : **அருள்**—*திருவாய்மலர்ந்தருளினர் (=மலர்ந்தார்), குருவானவர் எழுந்தருளினர் (=எழுந்தார்). இவற்றில்* **மலர்ந்தருள், எழுந்தருள்**-*பகுதிகள்.*

38. *தற்செயல் விகுதி* : **கோள்**—*விழித்துக்கொள்ளுகிறான். (இங்கே விழித்துக் கொள்ளுகிறான் என்பது விழிக்கிறான் என்று அருத்தமாம். இந்த வினையில்* **"விழித்துக்கோள்"**—*பகுதி.*

குறிப்பு.

(a) *தற்செயல் விகுதி "கொள்" ஒரு வினைச்சொல்லுக்கு ஈற்றில் வரும்போது சுயாதீனத்தை யுணர்த்தும். (உ-ம்) விழித்துக்கொள்ளுகிறனென்பது தன்னிஷ்டபடி அவனே விழிக்கிறான் என்று அருத்தமாம். ஒருவனுடைய கட்டாயத்தினாலல்லவென்றறிக.*

(b) *"கொள்" என்னும் தற்செயல் விகுதி "வா," "போ" என்னும் வினைச்சொற்களுக்கு ஈற்றில் வருவதுடன் முதலிலும் வரும். அப்போது "வா," "போ" என்னுஞ் சொற்கள் செயப்படுபொருள் குன்றா வினையாய் நிற்கும். (உ-ம்) பணம் கொண்டுபோகிறான், புஸ்தகம் கொண்டுவருகிறான். இங்கே "கொண்டுபோ" "கொண்டுவா" என்பவை—பகுதிகளாம்.*

39. *எச்சரிக்கைப் பொருளை யுணர்த்தும் விகுதி* : **வை**—*அவனை அனுப்பிவைக்கிறான், (=அனுப்புகிறான்), மீனைக் குளத்தில் விட்டுவைக்கிறான் (=விடுகிறான்). இவற்றில்* **"அனுப்பிவை," "விட்டுவை"**—*பகுதிகள்.*

40. *துணிவு பொருள் விகுதிகள்* : **விடு, ஒழி, தொலை, போடு**—*கொடுத்துவிடுவான், போயொழிந்தான், எழுதித்தொலைத்தான், வெட்டிப்போட்டான். இவற்றில்* **கொடுத்துவிடு, போயொழி, எழுதித்தொலை, வெட்டிப்போடு**—*பகுதிகள்.*

41. *பிறவினை விகுதிகள்* : **வி, பி, கு, சு, டு, து, பு, று**—*செய்விக்கிறான், நடப்பிக்கிறான், போக்குகிறான், பாய்ச்சுகிறான், உருட்டுகிறான், நடத்துகிறான், எழுப்புகிறான், பயிற்றுகிறான்.*

42. *செயப்பாட்டுவினை விகுதிகள்* : **படு, உண்**—*எழுதப்படுகிறான், அடியுண்டான்.*

43. *பிற்பொருட்டு விகுதி* : **உம்**—*வந்தது* +"உம்"+ *போனான்=வந்தும் போனான்.*

44. *துணைவினை (வினைமேல்வினை, அல்லது பகுதிப்பொருள் விகுதி).* **இரு, இடு, போ, தா**—*எழுந்திருந்தான், உரைத்திட்டான், ஒழிந்துபோனான், போதந்தான் (=போயினான்). இங்கே* **எழுந்திரு, உரைத்திடு, ஒழிந்துபோ, போதா**—*இவைகள் பகுதிகளாம்.*

45. வினை முதற்பொருளில் வரும் விகுதிகள் : இ, ஐ, அம்—அலரி, பறவை, எச்சம்.

46. செயப்படு பொருளில் வரும் விகுதிகள் : இ, ஐ, அம்—ஊருணி; தொடை, தொல்காப்பியம்.

47. கருவிப்பொருளில் வரும் விகுதிகள் : இ, ஐ, அம்—மண்வெட்டி, பார்வை, நோக்கம்.

48. பெயர் விகுதிகள் : அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, து, இ, மார், மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ்—குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், குழையன, யாது, பொன்னி, தேவிமார், வடமன், கோமான், கோக்கள், அவை, எந்தை, எங்கை, தம்பி, எம்முன், தோன்றல், பிறன், மகள், பிறர், அவ்.

குறிப்பு.

(a) "கள்" என்னும் பன்மைப்பெயர் விகுதி உயர்திணையில் மரியாதை யொருமை விகுதி யெனவும் படும். (உ-ம்) தாங்கள் சொன்னீர்கள், ஐயா அவர்கள் வருவார்கள், "தாங்கள்" "அவர்கள்" என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர்களும், "சொன்னீர்கள்" "வருவார்கள்" என்னும் பலர்பால் படர்க்கை வினை முற்றுகளும் ஈண்டு மரியாதை யொருமையைக் குறிக்கின்றன வென்றறிக.

(b) பெயரினும் வினையினும் "னகர", "ளகர", "ரகர", "யகர", ஈற்றுச் சொல்லின் அயலிலிருக்கும் "ஆகாரம்" செய்யுளில் ஓகாரமாகும். (உ-ம்) நல்லார்="நல்லோர்", என்றிசினர்="என்றிசினோர்

(c) "இகரவிகுதி" பெண்பாலையே அல்லாமல் ஆண்பாலையும் ஒன்றன்பாலையுங் காட்டுவதுண்டு. உதாரணம்:—"ஆண்பால்": துறவி, வில்லி; "ஒன்றன் பால்": நாற்காலி, முக்காலி.

49. பண்புப்பெயர் விகுதிகள் : மை, ஐ, பு, கு, றி, று, அம், பம், நர், உ, சி, து, இல், மன்—நன்மை, தொல்லை, மாண்பு, நன்கு, நன்றி, நன்று, நலம், ஒட்பம், நன்னர், மழவு, மாட்சி, தீது, குறில், பருமன்.

குறிப்பு.

பண்பிற்பகா நிலைப்பதம் : செம்மை, கருமை, பசுமை, வெண்மை, திண்மை, நுண்மை, சிறுமை, பெருமை, குறுமை, நெடுமை, தீய்மை, தூய்மை, வெம்மை, குளிர்மை, கொடுமை, கடுமை, மேன்மை, கீழ்மை, மெய்மை, வறுமை, பொய்மை, வன்மை, மென்மை, நன்மை, ஐம்மை, பழைமை, புதுமை, இனிமை, அணுமை, நிலைமை, ஆண்மை, உம்மை, ஒருமை, பன்மை, இருமை, அருமை, கைம்மை, கூர்மை, கேண்மை, சேண்மை, வளமை, இளமை, முதுமை, சேய்மை, உண்மை, பொன்மை, அணிமை, தண்மை, நொய்மை, இன்மை, பருமையும் இவை போல்வன பிறவுஞ் சொன்னிலையாற் பகுபதமாயினும், "மை" விகுதிக்குப் பகுதிப் பொருளல்லது வேறுபொருள் இல்லாமையினாலே பொருணிலையாற் பகாப்பதமாம்.

50. தன்மைப்பொருள் உணர்த்தும் விகுதி : மை—ஆண்மை.

இடைநிலையைக் காட்டும் அட்டவணை.

51. இறந்தகால இடைநிலைகள் : த், ட், ற், இன்—படித்தான், கண்டான், சென்றான், அனுப்பினான்.

குறிப்பு: ("ய்") யகரமெய்யும், "இசின்" என்பதும் இறந்தகால இடைநிலைகளாயும் வரும். (உ-ம்) போயது, என்றிசினோர்.

52. நிகழ்கால இடைநிலைகள் : கிறு, கின்று, ஆநின்று—படிக்கிறான், படிக்கின்றான், படியாநின்றான்.

குறிப்பு: "ஆநின்ந்து," "ஆவிருந்து," "ஆநிற்கிறு," "ஆநிற்கின்று," "ந்" "த்"—இவ்வாறும் நிகழ்கால இடைநிலைகளாயும் வரும். (உ-ம்) உண்ணாநின்ந்தான், உண்ணாவிருந்தான், உண்ணாநிற்கிறான், உண்ணாநிற்கின்றான், உணனுநர், உரைத்திர். (உண்ணுநர்—"உண்கிறார்கள்", உரைத்திர்=சொல்லுகிறீர்கள்).

53. எதிர்கால இடைநிலைகள்: வ், ப்—செய்வான், படிப்பான்.

குறிப்பு: ("ம்") மகரமெய், "மன்", "கு"—இம்மூன்றும் எதிர்கால இடைநிலைகளாயும் வரும். (உ-ம்) என்மர், என்மனார், செய்கேன் = செய்வேன்.

METHOD OF DIVIDING DIVISIBLE WORDS.

பகுபத முடிபிலக்கணங்கூறும் விதம்.

(தெரிநிலை வினைப்பகுபதம்.)

1. களிப்பிக்கப்படுகின்றேன் : களி—தன்வினைப்பகுதி, பி—பிறவினை விகுதி, (ப்) பகரமெய்—தோன்றல் சந்தி, களிப்பி-பிறவினைப்பகுதி; கு—சாரியை, (க்) ககரமெய்—தோன்றல் சந்தி, (அ) அகரம்—சாரியை, (உ) உகரம்—கெடுதல் சந்தி, படு—செயப்பாட்டுவினை விகுதி, (ப்) பகரமெய்—தோன்றல் சந்தி, களிப்பிக்கப்படு—செயப்பாட்டு வினைப்பகுதி; கின்று-நிகழ்கால இடைநிலை, ஏன்—தன்மை யொருமை வினைமுற்றுவிகுதி, (உ) உகரம்—கெடுதல் சந்தி; இவ்வாறு முடிந்த களிப்பிக்கப்படுகின்றேன் என்னும் பகுபதந் தெரிநிலை நிகழ்காலத் தன்மை யொருமை வினைமுற்று.

2. கண்டோம் : காண்—பகுதி, (கா) ககர ஆகாரம் (க) ககர அகரமானது குறுக்கல் விகாரம், ஓம்—தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி, (ட்) டகரமெய்—இறந்தகால இடைநிலை; இவ்வாறு முடிந்த கண்டோம் என்னும் பகுபதந் தெரிநிலை இறந்தகாலத் தன்மைப் பன்மை வினைமுற்று.

3. உண்டாய் : உண்—பகுதி, ஆய்—முன்னிலை யொருமை வினைமுற்று விகுதி, (ட்) டகரமெய்—இறந்தகால இடைநிலை, இவ்வாறு முடிந்த உண்டாய் என்னும் பகுபதந் தெரிநிலை இறந்தகால முன்னிலை யொருமை வினைமுற்று.

4. சென்றீர்கள் : செல்-பகுதி, ஈர்—முன்னிலைப்பன்மைவினைமுற்று விகுதி, கள்—விகுதிமேல் விகுதி, (ந்) நகரமெய்—இறந்தகால இடைநிலை, (ல்—ற்) லகரமெய் றகரமெய்யானது—திரிதல் சந்தி, (ற்—ன்) றகரமெய் னகரமெய்யானது மெலித்தல்விகாரம்; இவ்வாறு முடிந்த சென்றீர்கள் என்னும் பகுபதந் தெரிநிலை இறந்தகால முன்னிலைப்பன்மை வினைமுற்று.

5. அனுப்பிவைக்கிறான்: அனுப்பு—தன்வினைப் பகுதி, (இ) இகரம்—சாரியை, (உ) உகரம்—கெடுதல் சந்தி, வை—எச்சரிக்கைப் பொருளையுணர்த்தும் விகுதி, அனுப்பிவை—அனைத்தும் ஒருபகுதி; ஆன்—ஆண்பால் படர்க்கை வினைமுற்றுவிகுதி, கிறு—நிகழ்கால இடைநிலை, (க்)ககரமெய்—தோன்றல் சந்தி, (உ) உகரம்—கெடுதல் சந்தி ; இவ்வாறு முடிந்த அனுப்பிவைக்கிறான் என்னும் பகுபதந் தெரிநிலை நிகழ்கால ஆண்பால் படர்க்கை வினைமுற்று.

6. விழித்துக்கொண்டாள் : விழி—தன்வினைப்பகுதி, து—சாரியை, (த்) தகரமெய்—தோன்றல் சந்தி, கோள்—தற்செயல்விகுதி, (க்) ககரமெய்—தோன்றல் சந்தி, விழித்துக்கோள்—அனைத்தும் ஒரு பகுதி ; ஆள்—பெண்பால் படர்க்கை வினைமுற்று விகுதி, (ட்) டகரமெய்-இறந்தகால இடைநிலை, (ள்—ட்) ளகரமெய் டகரமெய்யானது—திரிதல் சந்தி, (ட்—ண்) டகரமெய் ணகரமெய்யானது மெலித்தல் விகாரம் ; இவ்வாறு முடிந்த விழித்துக்கொண்டாள் என்னும் பகுபதந் தெரிநிலை இறந்தகாலப் பெண்பால் படர்க்கை வினைமுற்று.

7. மலர்ந்தருளினார் : மலர்—தன்வினைப்பகுதி, து—சாரியை, (த்) தகரமெய்—தோன்றல் சந்தி, (த்—ந்) தகரமெய் நகரமெய்யானது—மெலித்தல் விகாரம், அருள்—கிருபைப்பொருளை யுணர்த்தும் விகுதி, (உ) உகரம்—கெடுதல் சந்தி, மலர்ந்தருள்—அனைத்தும் ஒரு பகுதி; ஆர்—பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதி, இன்—இறந்தகால இடைநிலை; இவ்வாறு முடிந்த மலர்ந்தருளினார் என்னும் பகுதமானது (ஈண்டு மரியாதையில் ஒருமைப்பொருளை யுணர்த்துவதால்) ஆண்பால் படர்க்கை வினைமுற்றாம்.

8. கொடுத்துவிட்டார்கள் : கொடு—தன்வினைப்பகுதி, து—சாரியை, (த்) தகரமெய்—தோன்றல் சந்தி, விடு—துணிவு பொருளையுணர்த்தும் விகுதி, கொடுத்துவிடு—அனைத்தும் ஒரு பகுதி ; ஆர்—பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதி, கள்—விகுதி மேல்விகுதி, கொடுத்துவிடு என்னும் பகுதி இரட்டி இறந்தகாலங்காட்டியது—விரித்தல் விகாரம், (உ) உகரம்—கெடுதல் சந்தி; இவ்வாறுமுடிந்த கொடுத்துவிட்டார்கள் என்னும் பகுபதந் தெரிநிலை இறந்தகாலப் பலர்பால் படர்க்கை வினைமுற்று.

N.B.—"விடு" என்னும் விகுதியிலுள்ள ஒற்று இரட்டி "விட்டு" என்றாகி, இறந்தகாலங் காட்டியது. இதைப் பகுதி விகாரம் என்றுஞ் சொல்வர்.

9. கொண்டுபோயிற்று : கோள் —தன்வினைப்பகுதி, டு—எழுத்துப்பேறு, (ள்—ட்) ளகரமெய் டகரமெய்யானது—திரிதல் சந்தி, (ட்—ண்) டகரமெய் ணகரமெய்யானது—மெலித்தல் விகாரம், போ—துணைவினை, கொண்டுபோ—அனைத்தும் ஒரு பகுதி; று—ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று விகுதி, இன்—இறந்தகால இடைநிலை, (ன்—ற்) னகரமெய் றகர

மெய்யானது—திரிதல் சந்தி, (ய்) யகரமெய் தோன்றல் சந்தி;, இவ்வாறு முடிந்த **கொண்டுபோயிற்று** என்னும் பகுபதந் தெரிநிலை இறந்தகால ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்று.

10. வந்தன : வா—பகுதி, (வா—வ) வகர ஆகாரம், வகர அகரமானது—குறுக்கல் விகாரம், (அ) அகரம்—பலவின்பால் படர்க்கை வினைமுற்று விகுதி, (த்) தகரமெய்—இறந்தகால இடைநிலை, அன்—சாரியை, (த்) தகரமெய்—தோன்றல் சந்தி ; (த்—ந்) தகரமெய் நகரமெய்யானது—மெலித்தல் விகாரம் ; இவ்வாறு முடிந்த "வந்தன" என்னும் பகுபதம் தெரிநிலை இறந்தகாலப் பலவின்பால் படர்க்கை வினைமுற்று.

11. *படிப்பாய்: படி—பகுதி, ஆய்—ஏவலொருமை வினைமுற்றுவிகுதி, (ப்) பகரமெய்—எழுத்துப்பேறு, (ப்) பகரமெய்—தோன்றல் சந்தி; இவ்வாறு முடிந்த **படிப்பாய்** என்னும்பகுபதம் ஏவல் ஒருமை வினைமுற்று. (**ஆய்** என்னும் விகுதியே எதிர்காலத்தையுங் காட்டிற்று.)

12. போய்வாரும்: போ—தன்வினைப் பகுதி, (ய்) யகரமெய்—எழுத்துப்பேறு, வா—மங்கலப் பொருளை யுணர்த்தும் விகுதி, **போய் வா**—அனைத்தும் ஒரு பகுதி, ரு—விரித்தல் விகாரம், உம்—ஏவல் பன்மை வினைமுற்று விகுதி, (உ) உகரங்—கெடுதல்சந்தி; இவ்வாறு முடிந்த **போய்வாரும்** என்னும் பகுபதமானது (ஈண்டு மரியாதையில் ஒருமைப்பொருளை யுணர்த்துவதால்) ஏவல் ஒருமை வினைமுற்றும்.

13. செய்மின்: செய்—பகுதி, மின்—ஏவல்பன்மை வினைமுற்று விகுதி; இவ்வாறு முடிந்த **செய்மின்** என்னும் பகுபதந் தெரிநிலை ஏவற்பன்மை வினைமுற்று. (**மின்** என்னும் விகுதியே எதிர்காலத்தையுங் காட்டியது.)

14. செய்யுங்கள் : செய்—பகுதி, உம்—ஏவல் பன்மை வினைமுற்று விகுதி, (ய்) யகரமெய்—தோன்றல் சந்தி, கள்—விகுதிமேல்விகுதி, (ம்—ங்) மகரமெய் ஙகரமெய்யானது—திரிதல் சந்தி; இவ்வாறு முடிந்த **செய்யுங்கள்** என்னும் பகுபதம் ஏவல்பன்மை வினைமுற்று. (**உம்** என்னும் விகுதியே எதிர்காலத்தையுங் காட்டிற்று.)

15. வாழ்க : வாழ்—பகுதி, (க) ககரம்—வியங்கோள் வினைமுற்று விகுதி; இவ்வாறு முடிந்த **வாழ்க** என்னும் பகுபதந் தெரிநிலை வியங்கோள் வினைமுற்று.

16. வியந்துகொண்டு : விய—தன்வினைப்பகுதி, து—சாரியை, (த்) தகரமெய் தோன்றல் சந்தி ; (த்—ந்) தகரமெய் நகர மெய்யானது—மெலித்தல் விகாரம், கொள்—தற்செயல் விகுதி, **வியந்துகொள்**—அனைத்தும் ஒரு பகுதி ; (உ) உகரம்—இறந்தகால வினையெச்ச விகுதி, (ட்) டகரமெய்—இறந்தகால இடைநிலை, (ள்—ட்) ளகரமெய் டகரமெய்யானது—திரிதல் சந்தி, (ட்—ண்) டகரமெய் ணகரமெய்யானது—மெலித்தல் விகாரம் ; இவ்வாறு முடிந்த **வியந்து கொண்டு** என்னும் பகுபதந் தெரிநிலை இறந்தகால வினையெச்சம்.

---

*ஏவல் வினைமுற்றுக்கும் எதிர்கால முன்னிலை வினைமுற்றுக்கும் வித்தியாசம் யாதெனில்:—ஏவல்வினைமுற்றில் "விகுதியே" காலங்காட்டும். முன்னிலைவினைமுற்றில் "இடைநிலை" காலங்காட்டு மென்றறிக.

17. காட்ட : காண்—தன்வினைப் பகுதி, டு-பிறவினை விகுதி, (ண்—ட்) ணகரமெய் டகரமெய்யானது—திரிதல் சந்தி, காட்டு—பிறவினைப்பகுதி ; (அ) அகரம்—நிகழ்கால வினையெச்ச விகுதி, (உ) உகரம்—கெடுதல் சந்தி; இவ்வாறு முடிந்த காட்ட என்னும் பகுபதந் தெரிநிலை நிகழ்காலப் பிறவினை வினையெச்சம்.

18. அசைந்தால் : அசை—பகுதி, ஆல்-எதிர்கால வினையெச்ச விகுதி, து—சாரியை, (உ) உகரம்—கெடுதல் சந்தி, (த்)தகரமெய்-தோன்றல் சந்தி, (த்—ந்) தகரமெய் நகரமெய்யானது—மெலித்தல் விகாரம் ; இவ்வாறு முடிந்த அசைந்தால் என்னும் பகுபதம் தெரிநிலை எதிர்கால வினையெச்சம்.

19. சிறந்த : சிற—பகுதி, (அ) அகரம்—பெயரெச்ச விகுதி, (த்) தகர மெய்—இறந்தகால இடைநிலை, (த்) தகரமெய்—தோன்றல் சந்தி, (த்—ந்) தகரமெய் நகரமெய்யானது—மெலித்தல்விகாரம் ; இவ்வாறு முடிந்த சிறந்த என்னும் பகுபதந் தெரிநிலை இறந்தகாலப் பெயரெச்சம்.

20. சொல்லப்படுகிற : சொல்—தன் வினைப்பகுதி, படு—செயப்பாட்டு வினை விகுதி, (அ) அகரம்—சாரியை, (ல்) லகரமெய்—தோன்றல் சந்தி (ப்) பகரமெய்—தோன்றல் சந்தி. சொல்லப்படு—செயப்பாட்டு வினைப் பகுதி ; (அ) அகரம்-பெயரெச்ச விகுதி, கிறு—நிகழ்கால இடைநிலை, (உ) உகரம்—கெடுதல் சந்தி ; இவ்வாறு முடிந்த சொல்லப்படுகிற என்னும் பகுபதந் தெரிநிலை நிகழ்காலப் பெயரெச்சம்.

21. தருவிக்கும் : தா—தன்வினைப்பகுதி, (தா—த) தகர ஆகாரம் தகர அகரமானது—குறுக்கல் விகாரம், ரு—விரித்தல் விகாரம், வி—பிற வினை விகுதி, தருவி—பிறவினை பகுதி ; உம்—எதிர்காலப் பெயரெச்ச விகுதி, கு—சாரியை, (உ) உகரம்—கெடுதல் சந்தி, (க்) ககரமெய்—தோன்றல் சந்தி ; இவ்வாறு முடிந்த தருவிக்கும் என்னும் பகுபதந் தெரிநிலை எதிர் காலப்பெயரெச்சம்.

22. பேறு : பெறு—பகுதி, பெறுதல் என்னும் பதத்திலுள்ள தல்விகுதி கெட்ட மாத்திரத்தில் பகுதி முதனீண்டது ; இவ்வாறு முடிந்த பேறு என்னும் பகுபதம் முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்.

23. படியாநின்றது : படி—பகுதி, து-தொழிற்பெயர் விகுதி, ஆநின்று-நிகழ்கால இடைநிலை, (அ) அகரம்—சாரியை, (உ) உகரம்—கெடுதல் சந்தி, (ய்) யகரமெய்- தோன்றல் சந்தி ; இவ்வாறு முடிந்த படியாநின்றது என்னும் பகுபதம் தெரிநிலை நிகழ்காலத் தொழிற்பெயர்.

24. படிப்பு : படி—பகுதி, பு—தொழிற்பெயர் விகுதி, (ப்) பகரமெய்-தோன்றல் சந்தி ; இவ்வாறு முடிந்த படிப்பு என்னும் பகுபதந் தெரிநிலை காலங்காட்டாத தொழிற்பெயர்.

25. ஓதுவான் : ஓது—பகுதி, ஆன்—ஆண்பால் படர்க்கை வினைமுற்று விகுதி, (வ்) வகரமெய்—தோன்றல் சந்தி ; இவ்வாறு முடிந்த ஓதுவான் என்னும் பகுபதந் தெரிநிலை தொழிலடியாகப்பிறந்த பெயர் அல்லது பால் காட்டுந் தொழிற் பெயர்.

26. செய்தவன்: செய்—பகுதி, அன்—ஆண்பால் படர்க்கை வினைமுற்று விகுதி, (த்) தகரமெய்—இறந்தகால இடைநிலை, (அ) அகரம்—சாரியை, (வ்) வகரமெய் தோன்றல் சந்தி; இவ்வாறு முடிந்த செய்தவன் என்னும் பகுபதந் தெரிநிலை இறந்தகால வினையாலணையும் பெயர்.

குறிப்பு வினைப் பகுபதம்.

27. உண்டு : உள்—பகுதி, டு—குறிப்பு வினைமுற்று விகுதி, (ள்—ட்) ளகரமெய் டகரமெய்யானது—திரிதல் சந்தி, (ட்—ண்) டகரமெய் ணகரமெய்யானது—மெலித்தல் விகாரம்; இவ்வாறு முடிந்த உண்டு என்னும் பகுபதம் உடன்பாட்டுக் குறிப்பு வினைமுற்று.

28. பொருட்டு : பொருள—பகுதி, டு—குறிப்பு வினைமுற்றுவிகுதி, (ள்—ட்) ளகரமெய் டகரமெய்யானது திரிதல் சந்தி; இவ்வாறு முடிந்த பொருட்டு என்னும் பகுபதம் உடன்பாட்டுக் குறிப்பு வினைமுற்று.

29. மெல்ல : மென்மையின் விகாரமாகிய மெல்—பகுதி, (அ) அகரம்—குறிப்பு வினையெச்சவிகுதி, (ல்) லகரமெய்—தோன்றல் சந்தி; இவ்வாறு முடிந்த மெல்ல என்னும் பகுபதம் உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சம்.

30. இளைய : இளமை—பகுதி, (அ) அகரம்—பெயரெச்ச விகுதி, மை—கெடுதல் சந்தி, (ய்) யகரமெய்—தோன்றல் சந்தி; இவ்வாறு முடிந்த இளைய என்னும் பகுபதம் உடன்பாடடுக் குறிப்புப் பெயரெச்சம்.

31. உரிமை : உரி—பகுதி, மை—தொழிற் பெயர் விகுதி; இவ்வாறு முடிந்த உரிமை என்னும் பகுபதம் உடன்பாட்டுக் குறிப்புத் தொழிற்பெயர்.

32. உள்ளவன் : உள்—பகுதி, அன்—ஆண்பால் படர்க்கை விகுதி, (அ) அகரம்—சாரியை, (ள்) ளகரமெய்—தோன்றல் சந்தி, (வ்) வகரமெய்—தோன்றல் சந்தி; இவ்வாறு முடிந்த உள்ளவன் என்னும் பகுபதம் உடன்பாட்டுக் குறிப்பு வினையாலணையும் பெயர்.

எதிர்மறைத் தெரிநிலை வினைப்பகுபதம்.

(எதிர்மறை எதிர்காலத்தில் மாத்திரம் வரும்.)

33. படியேன் : * படி—பகுதி, ஏன்—தன்மையொருமை வினைமுற்று விகுதி, (ய்) யகரமெய்—தோன்றல் சந்தி, (எதிர்மறை (ஆ) ஆகாரம் புணர்ந்து கெட்டது.) இவ்வாறு முடிந்த படியேன் என்னும் பகுபதந் தெரிநிலை எதிர்மறை தன்மை யொருமை வினைமுற்று.

34. படியோம் : படி—பகுதி, ஓம்—தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி, (ய்) யகரமெய் தோன்றல் சந்தி. (எதிர்மறை (ஆ) ஆகாரம் புணர்ந்து கெட்டது); இவ்வாறு முடிந்த படியோம் என்னும் பகுபதந் தெரிநிலை எதிர்மறை தன்மைப் பன்மை வினைமுற்று.

---

* வருமொழி (விகுதி) முதலெழுத்து நெடிலுயிராயிருக்குமாயின் எதிர்மறை ("ஆ") ஆகாரம்புணர்ந்து கெட்டுவரும்.

35. படியாய் : **படி**—பகுதி, **ஆய்**—முன்னிலை யொருமைவினைமுற்று விகுதி, **(ய்)** யகரமெய்—தோன்றல் சந்தி எதிர்மறை (**ஆ**) ஆகாரம் புணர்ந்து கெட்டது); இவ்வாறு முடிந்த **படியாய்** என்னும் பகுபதம் தெரிநிலை எதிர்மறை முன்னிலை யொருமை வினைமுற்று.

36. படியீர் : **படி**—பகுதி, **ஈர்**—முன்னிலைப்பன்மை வினைமுற்று விகுதி, (**ய்**) யகரமெய்—தோன்றல் சந்தி, எதிர்மறை (**ஆ**) ஆகாரம் புணர்ந்து கெட்டது); இவ்வாறு முடிந்த **படியீர்** என்னும் பகுபதம் தெரிநிலை எதிர்மறை முன்னிலைப் பன்மை வினைமுற்று.

37. படியான் : **படி**—பகுதி, **ஆன்**—ஆண்பால் படர்க்கைவினைமுற்று விகுதி, (**ய்**) யகரமெய்—தோன்றல் சந்தி, (எதிர்மறை (**ஆ**) ஆகாரம் புணர்ந்துகெட்டது); இவ்வாறு முடிந்த **படியான்** என்னும் பகுபதம் தெரிநிலை எதிர்மறை ஆண்பால் படர்க்கை வினைமுற்று.

38. படியாள் : **படி**—பகுதி, **ஆள்**—பெண்பால் படர்க்கை வினைமுற்று விகுதி, (**ய்**) யகரமெய்—தோன்றல் சந்தி, (எதிர்மறை (**ஆ**) ஆகாரம் புணர்ந்து கெட்டது); இவ்வாறு முடிந்த **படியாள்** என்னும் பகுபதம் தெரிநிலை எதிர்மறைப் பெண்பால் படர்க்கை வினைமுற்று.

39. படியார் : **படி**—பகுதி, **ஆர்**—பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதி; (**ய்**) யகரமெய்—தோன்றல் சந்தி, (எதிர்மறை (**ஆ**) ஆகாரம் புணர்ந்துகெட்டது); இவ்வாறு முடிந்த **படியார்** என்னும் பகுபதம் தெரிநிலை எதிர்மறை பலர்பால் படர்க்கை வினைமுற்று.

40. படியாது: **படி**—பகுதி, **து**—ஒன்றன்பால் படர்கை வினைமுற்று விகுதி, (**ஆ**) **ஆகாரம்**—எதிர்மறைவிகுதி, (**ய்**) யகரமெய்—தோன்றல் சந்தி; இவ்வாறு முடிந்த **படியாது** என்னும பகுபதம் தெரிநிலை எதிர்மறை ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று.

41. படியா : **படி**—பகுதி, (**ஆ**) ஆகாரம்—விகுதி, (**ய்**) யகரமெய்—தோன்றல் சந்தி, (**ஆகார விகுதியே** பலவின்பாலையும் எதிர்மறையையுங்காட்டுகிறது); இவ்வாறு முடிந்த **படியா** என்னும் பகுபதம் தெரிநிலை எதிர்மறை பலவின்பால் படர்க்கை வினைமுற்ற.

42. படியாமல் : **படி**—பகுதி, **மல்**—வினையெச்ச விகுதி, (**ஆ**) ஆகாரம்—எதிர்மறை விகுதி, (**ய்**) யகரமெய்—தோன்றல் சந்தி; இவ்வாறு முடிந்த **படியாமல்** என்னும் பகுபதம் தெரிநிலை எதிர்மறை வினையெச்சம்.

43. படியாத : **படி**—பகுதி, (**அ**) அகரம்—பெயரெச்சவிகுதி, (**த்**) தகரமெய்—**எழுத்துப்**பேறு, (**ஆ**) ஆகாரம்—எதிர்மறை விகுதி, (**ய்**) யகரமெய்—தோன்றல் சந்தி; இவ்வாறு முடிந்த **படியாத** என்னும் பகுபதம் தெரிநிலை எதிர்மறைப் பெயரெச்சம்.

44. படியா : **படி**—பகுதி, (**ஆ**) ஆகாரம்—எதிர்மறை விகுதி, (**ய்**) யகரமெய் தோன்றல் சந்தி, (**அ**) **அகரவுயிர்**—பெயரெச்ச விகுதியும், (**த்**) தகரமெய்—எழுத்துப்பேறும் புணர்ந்து கெட்டது; இவ்வாறு முடிந்த **படியா** என்னும் பகுபதம் தெரிநிலை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

45. படியாதது : **படி**—பகுதி, து—தொழிற்பெயர் விகுதி, (**அ**) **அகரம்—சாரியை**, (**த்**) தகரமெய்—எழுத்துப்பேறு, (**ஆ**) **ஆகாரம்**—எதிர்மறை

விகுதி, (ய்) யகரமெய்—தோன்றல் சந்தி; இவ்வாறு முடிந்த **படியாதது** என்னும் பகுபதந் தெரிநிலை எதிர்மறைக் காலங்காட்டுந் தொழிற்பெயர்.

46. படியாமை : **படி**—பகுதி, **மை**—தொழிற்பெயர் விகுதி, (**ஆ**) ஆகாரம் எதிர்மறை விகுதி, (**ய்**) யகரமெய்—தோன்றல் சந்தி; இவ்வாறு முடிந்த **படியாமை** என்னும் பகுபதந் தெரிநிலை எதிர்மறைக் காலங்காட்டாத தொழிற்பெயர்.

47. படியாதவன் : **படி**—பகுதி, **அன்**—ஆண்பால் படர்க்கை வினைமுற்று விகுதி, (வ்) வகரமெய்—எதிர்கால இடைநிலை, (**ஆ**) ஆகாரம்—எதிர்மறை விகுதி. (**ய்**) யகரமெய்—தோன்றல் சந்தி, (**அ**) அகரம்—சாரியை, (த்) தகரமெய்—எழுத்துப்பேறு; இவ்வாறு முடிந்த **படியாதவன்** என்னும் பகுபதந் தெரிநிலை எதிர்மறை வினையாலணையும் பெயர்.

எதிர்மறைக் குறிப்பு வினைப்பகுபதம்.

48. இல்லை : **இல்**—பகுதி, **ஐ**—ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவான விகுதி, (ல்) லகரமெய்—தோன்றல் சந்தி; இவ்வாறு முடிந்த **இல்லை** என்னும் பகுபதம் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று.

49. அன்று : **அல்**—பகுதி, **று**—விகுதி, (**ல்—ற்**) லகரமெய் றகரமெய்யானது—திரிதல்சந்தி, (**ற்—ன்**) றகரமெய் னகரமெய்யானது—மெலித்தல் விகாரம்; இவ்வாறு முடிந்த **அன்று** என்னும் பகுபதம் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று.

50. அல்லாமல் : **அல்**—பகுதி, **மல்**—எதிர்மறைக் குறிப்புவினையெச்ச விகுதி, (**ஆ**) ஆகாரம்—எதிர்மறை விகுதி, (**ல்**) லகரமெய்—தோன்றல் சந்தி; இவ்வாறு முடிந்த **அல்லாமல்** என்னும் பகுபதம் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம்.

51. அல்லாத : **அல்**—பகுதி, (**ஆ**) ஆகாரம்—எதிர்மறைவிகுதி, (**ல்**) லகரமெய்—தோன்றல் சந்தி, (**அ**) அகரம்—பெயரெச்சவிகுதி, (**த்**) தகரமெய்—எழுத்துப்பேறு; இவ்வாறு முடிந்த **அல்லாத** என்னும் பகுபதம் எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்.

52. இல்லாமை : **இல்**—பகுதி, (**ஆ**) ஆகாரம்—எதிர்மறை விகுதி, (**ல்**) லகரமெய்—தோன்றல் சந்தி, **மை** — தொழிற்பெயர் விகுதி; இவ்வாறு முடிந்த **இல்லாமை** என்னும் பகுபதம் எதிர்மறைக்குறிப்புத் தொழிற்பெயர்.

53. இல்லாதவன் : **இல்**—பகுதி, (**ஆ**) ஆகாரம்— எதிர்மறை விகுதி, (**ல்**) லகரமெய்—தோன்றல் சந்தி, **அன்**—ஆண்பால் படர்க்கை வினைமுற்று விகுதி, (**வ்**) வகரமெய்—தோன்றல்சந்தி, (**அ**) அகரம்—சாரியை, (**த்**) தகரமெய்—எழுத்துப்பேறு; இவ்வாறு முடிந்த **இல்லாதவன்** என்னும் பகுபதம் எதிர்மறைக்குறிப்பு வினையாலணையும் பெயர்

பெயர்ப் பகுபதம்.

௫௪. பாது. பத என்பதின் மரூஉவாகிய பா—பகுதி, தீ—தொழிற்பெயர் விகுதி.

55. மீதி: மீது என்பதின் மரூஉவாகிய மீ—பகுதி, தீ—தொழிற்பெயர் விகுதி.

56. எச்சம்: எஞ்சு—பகுதி, அம்—வினைமுதற்பொருள்விகுதி, (ஞ்—ச்) ஞகரமெய் சகரமெய்யானது—வலித்தல் விகாரம், (உ) உகரம்—கெடுதல் சந்தி (தொழிலடியாகப் பிறந்தபெயர்)

57. ஒழுக்கம்: ஒழுகு—பகுதி, அம்—தொழிற்பெயர் விகுதி, பகுதி ஒற்று இரட்டியது—விரித்தல் விகாரம், (உ) உகரம்—கெடுதல் சந்தி.

58. அவள்: (அ) அகரம்—சுட்டிடைப்பகுதி, அள்—பெண்பாற்பெயர்விகுதி, (வ்) வகரமெய்—உடம்படுமெய்.

59. கள்ளர்: கள்—பகுதி, அர்—பல்லோர் படர்க்கை விகுதி, (ள்) ளகரமெய்—தோன்றல் சந்தி. (கள்=திருடு)

60. கொழுநன்: கொழு—பகுதி, அன்—ஆண்பாற் படர்க்கை விகுதி, (ந்) நகரமெய்—பெயரிடைநிலை, (பொருளடியாகப் பிறந்த பெயர்)

61. தூண்டில்: தூண்டு—பகுதி, இல்—தொழிற்பெயர் விகுதி, (உ) உகரம்—கெடுதல் சந்தி.

62. மனைவி: மனை—பகுதி, இ—பெண்பால் விகுதி, (வ்) வகரமெய்—பெயரிடைநிலை.

63. உழுநர்: உழு—பகுதி, அர்—பலர்பால் விகுதி, (ந்) நகரமெய்—பெயரிடைநிலை.

64. வலைச்சி: வலை—பகுதி, இ—பெண்பால் விகுதி, (ச்) சகரமெய்—பெயரிடை நிலை, (ச்) சகரமெய்—தோன்றல்சந்தி.

65. கூனி: கூன்—பகுதி, இ—பெண்பால் விகுதி.

66. அறிஞன்: அறி—பகுதி, அன்—ஆண்பால் விகுதி, (ஞ்) ஞகரமெய்—பெயரிடைநிலை.

67. பொன்னன்: பொன்—பகுதி, அர்—ஆண்பால் விகுதி, ன்) னகரமெய்—தோன்றல் சந்தி.

68. நிலத்தன்: நிலம்—பகுதி, அன்—ஆண்பால்விகுதி, அத்து—சாரியை, (ம், அ) மகரமெய்யும அகரமும்—கெடுதல சந்தி, (உ) உகரம்— கெடுதல் சந்தி.

69. திணிதோளன்: திணிதோள்—பகுதி, அன்—ஆண்பால் விகுதி

70. நன்மை: நல்—பகுதி, மை—பண்புப்பெயர் விகுதி, (ல்—ன்) லகரமெய் னகரமெய்யானது—திரிதல்சந்தி.

வினைவிகற்ப விலச்சணச் சரவிளக்கு - A CHANDELIER OF THE VERB.



* தொழிற்பெயர்.

- முதனிலைத் தொழிற்பெயர்
- முதனிலை பெருத தொழிற்பெயர்
- முதனிலை திரிந்த தொழிற்பெயர்
- விகுதிபெற்ற தொழிற்பெயர்
  - காலங்காட்டுந் தொழிற்பெயர்
    - இறந்த
    - நிகழ்கா
    - எதிர்கா
  - காலங்காட்டாத தொழிற்பெயர் அல்லது முக்காலத்துக்கும் பொதுவான தொழிற்பெயர்
  - தொழிலடியாகப் பிறந்தபெயர் அல்லது பாலைக்காட்டுந் தொழிற்பெயர்
    - ஆண்பா
    - பெண்
    - பலர்பா
    - ஒன்றன்
    - பலவின்
  - வினையாலணையும் பெயர் அல்லது பாலையுங் காலத்தையுங் காட்டுந் தொழிற்பெயர்
    - ஆண்பா
      - இறந்த
      - நிகழ்கா
      - எதிர்கா
    - பெண்
      - இறந்த
      - நிகழ்கா
      - எதிர்கா
    - பலர்பா
      - இறந்த
      - நிகழ்கா
      - எதிர்கா
    - ஒன்றன்
      - இறந்த
      - நிகழ்கா
      - எதிர்கா
    - பலவின்
      - இறந்த
      - நிகழ்கா
      - எதிர்கா

METHOD OF CONJUGATING VERBS

வினைவிகற்ப விலக்கணங் கூறும் விதம்.

(CONJUGATION OF VERBS SHOWING THEIR TERMINATIONS)

உடன்பாடு—Affirmative Form.

Indicative Mood.

(இறந்தகால ஒருமை.)

தன்மை யொருமை வினைமுற்றுகள்—உண்டனென், உண்டேன், உண்டனன், உண்டு, வந்து, சென்று.

முன்னிலை யொருமை வினைமுற்றுகள்—உண்டனை, உண்டாய், உண்டி.

ஆண்பாற் படர்க்கை வினைமுற்றுகள்—உண்டனன், உண்டான்.

பெண்பாற் படர்க்கை வினைமுற்றுகள்—உண்டனள், உண்டாள்.

ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்றுகள—உண்டது, ஆயிற்று.

(இறந்தகாலப் பன்மை)

தன்மைப் பன்மை வினைமுற்றுகள்—உண்டனம், உண்டாம், உண்டனெம், உண்டேம், உண்டோம, உண்டெம, வந்தும், சென்றும்.

முன்னிலைப் பன்மை வினைமுற்றுகள—உண்டனிர், உண்டீர்.

பலர்பால் படர்க்கை வினைமுற்றுகள்—உண்டனர், உண்டார், உண்ப.

பலவின்பாற் படர்க்கை வினைமுற்று—உண்டன.

(நிகழ்கால ஒருமை.)

தன்மை யொருமை வினைமுற்றுகள்—உண்கின்றனென், உண்கிறேன், உண்கின்றனன்.

முன்னிலை யொருமை வினைமுற்றுகள்—உண்கின்றனை, உண்கிறாய், உண்கிற்றி.

ஆண்பாற் படர்க்கை வினைமுற்றுகள்—உண்கின்றனன், உண்கிறான்.

பெண்பாற் படர்க்கை வினைமுற்றுகள்—உண்கின்றனள், உண்கிறாள்

ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்று—உண்கிறது.

(நிகழ்காலப் பன்மை.)

தன்மை பன்மை வினைமுற்றுகள்—உண்கின்றனம், உண்கின்றாம், உண்கின்றனெம், உண்கின்றேம், உண்கிறோம்.

முன்னிலைப்பன்மை வினைமுற்றுகள்—உண்கின்றனிர், உண்கிறீர்.

பலர்பாற்படர்க்கை வினைமுற்றுகள்—உண்கின்றனர், உண்கிறார்.

பலவின்பாற் படர்க்கை வினைமுற்று—உண்கின்றன.

(எதிர்கால ஒருமை.)

தன்மை யொருமை வினைமுற்றுகள்—உண்பென், உண்பேன், உண்பல், உண்பல், உண்கு, வருது, சேறு, செய்யமாட்டேவேன், செய்கிற்பேன்.

முன்னிலை யொருமை வினைமுற்றுகள்—உண்பை, உண்பாய், சேறி, செய்யமாட்டுவாய், செய்கிற்பாய்.

ஆண்பாற் படர்க்கை வினைமுற்றுகள்—உண்பன், உண்பான், உண்ணும், செய்யமாட்டுவான், செய்கிற்பான்.

பெண்பாற் படர்க்கை வினைமுற்றுகள்—உணபள், உண்பாள், உண்ணும், செய்யமாட்டுவாள், செய்கிற்பாள்.

ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்றுகள்—உண்ணும். செய்யமாட்டும. செய்கிற்கும்.

(எதிர்காலப் பன்மை.)

தன்மைப் பன்மை வினைமுற்றுகள்—உண்பம், உண்பாம், உண்பெம், உண்பேம், உண்போம், உண்கும், வருதும், சேறும், செய்யமாட்டுவோம், செய்கிற்போம்.

முன்னிலைப் பன்மை வினைமுற்றுகள்—செய்குவிர், உண்பீர், செய்யமாட்டுவீர், செயகிற்பீர்.

பலர்பாற் படர்க்கை வினைமுற்றுகள்—உண்பர், உண்பார், உண்ப, உண்மார், செய்யமாட்டுவார், செய்கிற்பார்.

பலவின்பாற் படர்க்கை வினைமுற்றுகள்—உண்ணும், செய்யமாட்டும், செய்கிற்கும்.

குறிப்பு.

(a.) **உண்டு**=உண்டேன், **வந்து**=வந்தேன், **சென்று**=சென்றேன், **உண்து**=உண்பேன், **வருது**=வருவேன், **சேறு**=செல்வேன், **சேறி**=செல்வாய்; **உண்பல்**=உண்பேன்; **உண்டும்**=உண்டோம், **வந்தும்**=வந்தோம் **சென்றும்**=சென்றோம், **உண்தும்**=உண்போம், **வருதும்**=வருவோம், **சேறும்**=செல்வோம்.

(b.) 'உம்' விகுதி எதிர்காலத்தைக் காட்டிக்கொண்டு ஆண்பால் பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால்களுக்குப் பொதுவாய்வரும். அதற்கு செய்யுமென் வாய்பாட்டு வினைமுற்று என்று பெயா.

Imperative Mood—ஏவல்.

(எதிர்காலம்.)

முன்னிலை யொருமை வினைமுற்றுகள்:—உரை, உரையாய், உரைதி, சென்றீ, சின்மே.

முன்னிலைப்பன்மை வினைமுற்றுகள்:—உரையும், உரைத்திர், உரையீர், உரைமின்.

குறிப்பு.

(a.) உரையாய், நடவாய் என்பவை முதலிய 'ஆய்' விகுதி குறைந்து 'உரை' 'நட' என பகுதியே ஏவல் ஒருமையாக வருவதும் உண்டு.

(b.) சேன்றீ, நின்மே என்னும் மொழிகளின் ஈற்றிலுள்ள ஈகார ஏகாரங்கள் விகுதிகளல்ல; 'ஆய்' விகுதி குறைந்த ஏவலில் வரும் முன்னிலையசையாம், இங்கே ஈயும் ஏயும் முறையே றகர வொற்றையும் மகர வொற்றையும் ஊர்ந்துவந்தன. றகரவொற்றும் மகரவொற்றும் எழுத்துப் பேறு. (சேன்றீ = செல்லாய், நின்மே = நில்லாய்)

Optative Mood—வியங்கோள்.

(எதிர்காலஒருமை.)

தன்மை யொருமை வினைமுற்றுகள்—வாழ்க, வாழிய, வாழியர், உண்ணல், வாழ்வேனாக, வாழக்கடவேன், வாழட்டும்.

முன்னிலை யொருமை வினைமுற்றுகள்—வாழ்க, வாழிய, வாழியர், உண்ணல், வாழ்வாயாக, வாழக்கடவாய்.

ஆண்பாற்படர்க்கை வினைமுற்றுகள்—வாழ்க, வாழிய, வாழியர், உண்ணல், வாழ்வானாக வாழக்கடவன், வாழட்டும்

பேண்பாற் படர்க்கை வினைமுற்றுகள்—வாழ்க வாழிய, வாழியர், உண்ணல், வாழ்வாளாக, வாழக்கடவள், வாழட்டும்.

ஒன்றன்பாற்படர்க்கை வினைமுற்றுகள்—வாழ்க, வாழிய, வாழியர், உண்ணல், வாழ்வதாக, வாழக்கடவது, வாழட்டும்.

(எதிர்காலப்பன்மை.)

தன்மைப் பன்மை வினைமுற்றுகள்—வாழ்க, வாழிய, வாழியர், உண்ணல், வாழ்வோமாக, வாழக்கடவோம், வாழட்டும்.

முன்னிலைப் பன்மை வினைமுற்றுகள்—வாழ்க, வாழிய, வாழியர், உண்ணல், வாழ்வீராக, வாழக்கடவீர்.

பலர்பாற்படர்க்கை வினைமுற்றுகள்—வாழ்க, வாழிய, வாழியர், உண்ணல், வாழ்வாராக, வாழக்கடவர், வாழட்டும்,

பலவின்பாற்படர்க்கை வினைமுற்றுகள்—வாழ்க, வாழிய, வாழியர், உண்ணல், வாழ்வனவாக, வாழக்கடவன, வாழட்டும்.

குறிப்பு.

(a) க, ய, ர், அல், ஒட்டும்—இவ்வைந்தும் பொது வியங்கோள் வினைமுற்று விகுதிகள். ஆக, கட இவ்விரண்டுஞ் சிறப்பு வியங்கோள் வினைமுற்று விகுதிகள், ஆகையால் இவ்விரண்டுந் திணை பால் இடங்களைக் குறிக்கும் விகுதிகளை யேற்றேவரும்.

(b.) வழக்கத்தில் ஒட்டும் என்றும் விகுதி முதல் குறைந்துவரும். உதாரணம்:—அவர் போகட்டும் (போக (ஒ) ட்டும்.) யாம் வரட்டும் (வர(ஒ) ட்டும்). முன்னிலையில் வாக்கியத்தின் இடையிலேமாத்திரம் இவ்விகுதி பெற்ற வியங்கோள் வரும். உதாரணம்:—நீ படிக்கட்டும் என்று நான்பேசா திருந்தேன்.

(c.) ஆ, ஓ, எ,—என்னும் ஈற்று வினு இடைச்சொற்கள் பெயருடன் அன்றி வினையுடனுஞ் சேர்ந்துவரும். உதாரணம்:—அவன் வந்தானு? அவன் வருவானோ? அவன் வந்தானே? நான் வரட்டுமா?

Participle Verb—வினையெச்சவினை.

இறந்தகால வினையெச்சவினை—படித்து, ஓடி முதலியன.
நிகழ்கால வினையெச்சவினை—படிக்க, உணற்கு.
எதிர்கால வினையெச்சவினை—படிக்கின், படிக்கில் முதலியன.

Participle Adjective—பெயரெச்சவினை.

இறந்தகாலப் பெயரெச்சவினை—படித்த.
நிகழ்காலப் பெயரெச்சவினை—படிக்கிற.
எதிர்காலப் பெயரெச்சவினை—படிக்கும்.

Verbal Noun—தொழிற்பெயர்.

இறந்தகாலத் தொழிற்பெயர்—படித்தமை, படித்தது.
நிகழ்காலத் தொழிற்பெயர்—படிக்கின்றமை, படிக்கிறது.
எதிர்காலத் தொழிற்பெயர்—படிப்பது, வருவது.
காலங்காட்டாத தொழிற்பெயர்—படித்தல், ஆடல், முதலியன.

குறிப்பு.

(a.) அம், ஆம், எம், ஏம், ஓம், தும், டும், தும், றும், என்னும் இவ்வொன்பது விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் இருதிணைப்பொதுவாய் வருந் தன்மைப் பன்மை வினைமுற்றுச்சொற்களாயினும், அவை தன்னிலையி னிற்பதன்றி முன்னிலையாரையும் படர்க்கையாரையுந் தன்மையிற் கூட்டுதலுமுண்டு.

(b) அம், ஆம், என்னும் இவ்விருவிகுதியால் வருவன முன்னிலை யாரைத் தன்னோடு கூட்டும்.

உதாரணம்.

நீயும் யானும் ... உண்டனம்.
" " ... உண்டாம்.

(c.) எம், ஏம், ஓம், என்னும் இம்மூன்று விகுதியால் வருவன படர்க்கையாரைத் தன்னோடு கூட்டும்.

உதாரணம்.

அவனும் யானும் ... உண்டனெம்.
" " .. உண்டேம்.
" " ... உண்டோம்.

(d) கும், டும், தும், றும் என்னும் இந்நான்கு விகுதியால் வருவன முன்னிலையாரையும் படர்க்கையாரையும் தன்னோடு கூட்டும்.

உதாரணம்.

நீயும், அவனும், யானும் .. உண்கும்.
" " " ... உண்டும்.
" " " ... வந்தும்.
" " " ... சென்றும்.

(e.) இவ்வொன்பது விகுதியீற்றுமொழிகள் இங்ஙனம் வருதலால் உளப்பாட்டுத் தன்மை வினையென்னப்படும்.

(f.) தன்மை வினைமுற்றுகளுள் 'செய்து' என்னுந்தன்மை யொருமை வினைமுற்றுச்சொல்லும் 'செய்தும்' என்னுந் தன்மைப்பன்மை வினைமுற்றுச் சொல்லும் வினையுடனுமுடியும்; அப்போதும் வினைமுற்றேயாம். உதாரணம்:—உண்டு வந்தேன், உண்டும் வந்தேம் என வரும்.

உண்பேன் வந்தேன், உண்பேம், வந்தேம் என மற்றவை வினைகொண்டு முடிதல் மரபு அன்று எனக்கொள்க.

(g.) என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இ, இர், ஈர், ன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, று, அ, என்னும் விகுதிகளாலும் குறிப்புவினைமுற்றுகள் வரும்.

உதாரணம்.

யான் — தாரினன், தாரினேன்.
யாம் — தாரினம், தாரினும், தாரினெம், தாரினேம், தாரினோம்.
நீ — வில்லினை, வில்லாய், வில்லி.

நீர் — குழையினிர், குழையீர்.
நம்பி — குழையினன், குழையான்.
நங்கை — குழையினள், குழையாள்.
அவர் — குழையர், குழையார்.
அது — அணித்து. அற்று.
அவை — இல்லன, இல்ல.

யான் தாரினேன் = யான் மாலையை யுடையவன், நம்பி குழையான் = நம்பி குண்டலத்தை யுடையவன், அது அணித்து = அது சமீபத்தையுடையது. அது அற்று = அது அத்தன்மையையுடையது.

(*h*) அம், ஆம் எம், ஏம், ஓம் என்னும் தன்மைப் பன்மை வினைக் குறிப்பும் உளப்பாட்டில் வரும். உதாரணம்:—நீயும் யானும் தாரினம், அவனும் யானும் தாரினெம் எனவரும்.

(*i*) டுவ் விகுதியை ஈற்றிலுடைய மொழி அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்றாம். உதாரணம:—அது பொருட்டு, அது ஆதிரைநாட்டு, அது குண்டு கட்டு.

அது பொருட்டு = அது பொருளையுடையது. அது ஆதிரைநாட்டு = அது ஆதிரைநாளையுடையது. அது குண்டுகட்டு = அது ஆழமானகண்ணையுடையது.

எதிர்மறை—NEGATIVE FORM.

(எதிர்மறை எதிர்காலத்தில் மாத்திரம் வரும்.)

எதிர்கால ஒருமை.

தன்மையொருமை வினைமுற்றுகள்—செய்யேன், செய்யமாட்டேன், செய்கிறேன், செய்கிற்கலேன், செய்கிலேன், செய்கலேன்.

முன்னிலையொருமைவினைமுற்றுகள்—செய்யாய், செய்யமாட்டாய், செய்கிற்கிலாய், செய்கிற்கலாய், செய்கிலாய், செய்கலாய்.

ஆண்பாற்படர்க்கை வினைமுற்றுகள்—செய்யான், செய்யமாட்டான், செய்கிற்கிலான், செயகிற்கலான், செய்கிலான், செய்கலான்.

பெண்பாற்படர்க்கைவினைமுற்றுகள்—செய்யாள், செய்யமாட்டாள், செய்கிற்கிலாள், செய்கிற்கலாள், செய்கிலாள், செய்கலாள்.

ஒன்றன்பாற்படர்க்கை வினைமுற்றுகள்—செய்யாது, செய்யமாட்டாது, செய்கிற்கிலது, செய்கிற்கலது, செய்கிலது, செய்கலது.

எதிர்காலப் பன்மை.

தன்மைப்பன்மை வினைமுற்றுகள்—செய்யோம், செய்யமாட்டோம், செய்கிற்கிலோம், செய்கிற்கலோம், செய்கிலோம், செய்கலோம்.

முன்னிலைப்பன்மை வினைமுற்றுகள்—செய்யீர், செய்யமாட்டீர், செய்கிற்கிலீர், செய்கிற்கலீர், செய்கிலீர், செய்கலீர்.

பலர்பாற்படர்க்கை வினைமுற்றுகள்—செய்யார், செய்யமாட்டார், செய்கிற்கிலார், செய்கிற்கலார், செய்கிலார், செய்கலார்.

பலவின்பாற் படர்க்கை வினைமுற்றுகள்—செய்யா, செய்யமாட்டா, செய்கிற்கில, செய்கிற்கல, செய்கில, செய்கல.

ஏவல்.

முன்னிலையொருமை வினைமுற்றுகள்—செய்யேல், செய்யல், செய்யாதே. (செய்யாதை என்பதின் மரூஉ செய்யாதே.)

முன்னிலைப்பன்மை வினைமுற்றுகள்—செய்யன்மின், செய்யாதேயும்.

வியங்கோள் ஒருமை.

தன்மையொருமை வினைமுற்றுகள்—செய்யேனாக, செய்யற்க.

முன்னிலையொருமை வினைமுற்றுகள்—செய்யாயாக, செய்யற்க.

ஆண்பாற்படர்க்கை வினைமுற்றுகள்—செய்யானாக, செய்யற்க.

பெண்பாற்படர்க்கை வினைமுற்றுகள்—செய்யாளாக, செய்யற்க.

ஒன்றன்பாற்படர்க்கை வினைமுற்றுகள்—செய்யாதாக, செய்யற்க.

வியங்கோட் பன்மை.

தன்மைப்பன்மை வினைமுற்றுகள்—செய்யோமாக, செய்யற்க.

முன்னிலைப்பன்மை வினைமுற்றுகள்—செய்யீராக, செய்யற்க.

பலர்பற்படர்க்கை வினைமுற்றுகள்—செய்யாராக, செய்யற்க.

பலவின்பாற்படர்க்கை வினைமுற்றுகள்—செய்யாவாக, செய்யற்க.

குறிப்பு:...உடன்பாட்டில் வரும் வியங்கோள் விகுதிகளில் ஆக என்னும் சிறப்பு விகுதியும், க என்னும் பொது விகுதியும் எதிர்மறையிலும் வரும்.

எதிர்மறை வினையெச்சவினை—படியாமல், படியாமே, படியாமை, படியாது.

எதிர்மறைப் பெயரெச்சவினை—படியாத.

எதிர்மறைத் தொழிற்பெயர் —நடவாமை.

அப்பியாசம்.

உண் என்கிற பகுதியடியாக வரும் வினைகளையும் பெயர்களையும் விளம்புக.

உண்	முதனிலை	
உண்டேன்	தன்மை யொருமை	இறந்தகால வினைமுற்று.
உண்டோம்	தன்மைப் பன்மை	
உண்டாய்	முன்னிலையொருமை	
உண்டீர்	முன்னிலைப் பன்மை	
உண்டான்	படர்க்கை ஆண்பால்	
உண்டாள்	படர்க்கைப் பெண்பால்	
உண்டார்	படர்க்கைப் பலர்பால்	
உண்டது	படர்க்கை ஒன்றன்பால்	
உண்டன	படர்க்கைப் பலவின்பால்	
உண்கிறேன்	தன்மை யொருமை	நிகழ்கால வினைமுற்று.
உண்கிறோம்	தன்மைப் பன்மை	
உண்கிறாய்	முன்னிலை யொருமை	
உண்கிறீர்	முன்னிலைப் பன்மை	
உண்கிறான்	படர்க்கை ஆண்பால்	
உண்கிறாள்	படர்க்கைப் பெண்பால்	
உண்கிறார்	படர்க்கைப் பலர்பால்	
உண்கிறது	படர்க்கை ஒன்றன்பால்	
உண்கின்றன	படர்க்கைப்பலவின்பால்	
உண்பேன்	தன்மை யொருமை	எதிர்கால வினைமுற்று.
உண்போம்	தன்மைப் பன்மை	
உண்பாய்	முன்னிலை யொருமை	
உண்பீர்	முன்னிலைப் பன்மை	
உண்பான்	படர்க்கை ஆண்பால்	
உண்பாள்	படர்க்கைப் பெண்பால்	
உண்பார்	படர்க்கைப் பலர்பால்	
உண்ணும்	படர்க்கை ஒன்றன்பால்	
உண்ணும்	படர்க்கைப் பலவின்பால்	

உண் உண்ணாய் ... ... ஏவல் ஒருமை வினைமுற்றுகள்.
உண்ணும், உண்மின் ... ... ஏவற்பன்மை வினைமுற்றுகள்.
உண்க ... ... வியங்கோள் வினைமுற்று.
உண்டு, உண்ண, உண்கில் ... ... வினையெச்சங்கள்.
உண்ட, உண்கிற, உண்ணும் ... ... பெயரெச்சங்கள்.
உண் என்கிற பகுதிக்கு முதனிலைத் தொழிற்பெயரில்லை.*

முதனிலை பெறாத தொழிற்பெயர்கள் தெரிநிலை வினைப்பகுதியடியாக வாரா. (உதாரணம்.)

கூத்து, சண்டை, வேட்டை, பசி, பட்டினி, சூது, கோள், வாது, வஞ்சனை, மோசம், வினை, தொழில், தாள், அமர், தூது, வேலை, தொண்டு, செட்டுமுதலியவை முதனிலை பெறாததொழிற்பெயர் எனப்படும்.

உதாரணம்.

ஊண் ... ... முதனிலை திரிந்ததொழிற்பெயர்.
உண்டது, உண்கிறது, உண்பது...காலங்காட்டுந் தொழிற்பெயர்கள்.
உண்ணல் ... ... காலங்காட்டாத தொழிற்பெயர்.
ஊணன் . . .. தொழிலடியாகப்பிறந்தபெயர்.
உண்டவன், உண்கிறவன், உண்பவன்—வினையாலணையும் பெயர்கள்.

கவனிப்பு :—ஆகார வினையடியாக வரும் வினைகளுந் தொழிற்பெயர்களுந் தனியே வராமல், பெயரையே யடுத்து வரும் என்றறிக.

N. B—For the rules for these tenses, &c., refer to Grammar.

ON LETTERS.

எழுத்திலக்கணக்குறிப்பு.

1. Letters : தமிழெழுத்து உயிர், மெய், ஆய்தம், உயிர்மெய்யென நான்குவகைப்படும்.

2. Vowels. உயிர் பன்னிரண்டு:—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ. இவை குறில் நெடிலென இருவகைப்படும். (உயிர், ஆவி என்பன ஒருபொருட்சொற்கள். உயிர்க்கு வடநூலார் அச்சு அல்லது சுரம் என்பர்.)

(*a*) Short Vowels. குற்றெழுத்து ஐந்து:—அ, இ, உ, எ, ஒ. (இவை குறில் எனவும், குறுமை யெனவும் பெயர் பெறும். குறிற்கு வடநூலார் இரச்சுவம் என்பர்.

(*b*) Long Vowels. நெட்டெழுத்து ஏழு—ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ. (இவை நெடில் எனவும், நெடுமை எனவும் பெயர் பெறும். நெடிற்கு வடநூலார் தீர்க்கம் என்பர்.)

குறிப்பு:—"ஐ" "ஔ" இவ்விரண்டும் இணையுயிர்கள் எனவும்படும். அகரக்கூறும் இகரக்கூறுஞ்சேர்ந்து ஐகாரமாம்; அகரக்கூறும் உகரக்கூறுஞ்சேர்ந்து ஔகாரமாம். (அ+இ=ஐ, அ+உ=ஔ.)

3. Consonants. மெய் பதினெட்டு:—க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன். இவை வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படும். (மெய், ஒற்று, உடல்,

உடம்பு, புள்ளி, என்பன ஒருபொருட்சொற்கள். மெய்க்கு வடநூலார் அல் அல்லது வியஞ்சனம் என்பர்.

(a) Hard Consonants. வல்லெழுத்து ஆறு:—க், ச், ட், த், ப், ற். (இவை வலி, வன்மை, வல்லினம், வன்கணம் எனவும் படும். வலிக்குவடநூலார் சய் அல்லது பர்சம் என்பர்.)

(b) Soft Consonants or Nasals. மெல்லெழுத்து ஆறு:—ங், ஞ், ண், ந், ம், ன். (இவை மெலி, மென்மை, மெல்லினம், மென்கணம் எனவும் படும். மெலிக்கு வடநூலார் அநுநாசிகா அல்லது பர்சம் என்பர்.)

N. B.—ண், ந், ன், இம்மூன்று எழுத்துகளுக்கும் டண்ணகரம், தன்னகரம், றன்னகரம் என இலக்கணிகள் பெயரிட்டிருக்கின்றனர்.

(c) Medial Consonants (neither hard nor soft). இடையெழுத்து ஆறு:—ய், ர், ல், வ் ழ், ள். (இவை இடை, இடைமை, இடையினம், இடைக்கணம் எனவும்படும். இடைக்கு வடநூலார் அந்தத்தக்ஙரம் அல்லது யண் என்பர்.)

கவனிப்பு:—தமிழில் "பதினெண்" மெய்களுண்டென்று இலக்கணிகள் கணக்கிட்டிருந்தாலும், வல்லினத்தின் பலவித உச்சரிப்புகளைக்கவனிக்கும்போது, மெய்யெழுத்து "முப்பத்திமூன்றென்று" சொல்லலாம். சமஸ்கிருத பாஷையில் ஒவ்வொரு உச்சரிப்புக்கும் பிரத்தியேகமான எழுத்திருப்பதுபோல் தமிழில் இல்லாவிடினும், அடியிற்கண்டிருக்கும் மொழிகளில் மெய்யெழுத்துகளின் பலவிதஉச்சரிப்புகளை வரிசை கிரமப்படுத்திக் காட்டியிருக்கின்றோம். அவற்றைப் பிள்ளைகளின் நாவிற்கு பழக்கமுண்டாகும்படி ஒலிவடிவிலேயாவது உச்சரிக்கப் பழக்கிவரவேண்டும்.

மெய்யெழுத்தின் பலவித உச்சரிப்பு.

க் { கடி, பக்கம், பகல், தங்கம்

ங்—அங்ஙனம்

ச் { தச்சன், சதை, மஞ்சள்

ஞ்—ஞண்டு

ட் { பட்டம், படம், பண்டம்

ண்—பணம்

த் { தலை, சுத்தம், அதனால், மந்தன்

ந்—நலம்

ப் { படி, அப்பம், கோபம், கம்பன்

ம்—மனசு

ய்—அயல்

ர்—கரம்

ல்—பலம்

வ்—அவன்

ழ்—பழம்

ள்—களம்

ற் { அறம், கற்றவன், சென்ற

ன்—கனவு

N. B.—இவற்றின் விவரங்களைக் குறித்து வல்லினத்தின் பலவித உச்சரிப்புகளைக் காட்டும் அட்டவணையிற் காண்க.

4. Gutturals. ஆய்தமாவது சிலவிடத்தில் உயிர்போலவுஞ் சிலவிடத்தில் மெய்போலவும் ஒலித்து உயிருமாகாமல் மெய்யுமாகாமல் தனிநிலையாய் வருகிற ஓர் எழுத்தாம். அதற்கு வடிவு (ஃ) மூன்று புள்ளி. (ஆய்தம், அஃகேனம், முப்புள்ளி, ஒற்று, தனிநிலை என்பன ஒரு பொருட்சொற்கள்.)

5. Vowel-Consonants. உயிர்மெய்யெழுத்தாவது உயிரும் மெய்யுங்கூடிப் பிறக்கும் எழுத்து; அது பதினெட்டு மெய்யின்மேலும் பன்னிரண்டு உயிருந் தனித்தனி யேறிவர இருநூற்றுப்பதினாறாகும்.

(உ-ம்.) ககரமெய்யின்மேல் அகரம் ஏற (க) எனவும் ஆகாரம் ஏற (கா) எனவும் வரும். மற்றவையும் இவ்வாறே.

குறிப்பு:—ஒற்றொலிமுன்னும் உயிரொலி பின்னுமாகி உயிர்மெய்யெழுத்து பிறக்கும். (உ-ம்) க்+அ=க, க்+ஆ=கா மற்றவையும் இவ்வாறே.

6. Production of letter sounds. உயிரெழுத்தும் இடையெழுத்துங் கழுத்திற் பிறக்கும். வல்லெழுத்து மார்பிற் பிறக்கும். மெல்லெழுத்து மூக்கிற் பிறக்கும். ஆய்தம் தலையிற் பிறக்கும். சார்பெழுத்துகள் தம்முதலெழுத்துகளோ டொப்பனவாய்ப் பிறக்கும்.

7. Organs of Speech. எழுத்துகள் உதடு, நாக்கு, பல், அண்ணம் ஆகிய நான்கின் தொழிலால் உச்சரிக்கப்படும்.

8. Kindred Letters. இனவெழுத்துகள் :—உயிரெழுத்துகளில் நெட்டெழுத்துகளுக்கு அதனதன் குற்றெழுத்துகளே யினமாம். குற்றெழுத்தில்லாத ஐகாரத்துக்கு இகரமும், ஒளகாரத்துக்கு உகரமும் இனமாம். மெய்யெழுத்துகளில் வல்லெழுத்துகளுக்கு அதனதன் பின்னிற்கின்ற மெல்லினவெழுத்துகளே யினமாம். இடையினம் ஆறும் ஓரினம் எனவும்படும்.

9. Demonstrative Letters. சுட்டெழுத்து:—அ, இ, உ இம்மூன்றும் சொல்லுக்கு முதலில் அகத்துறுப்பாகவேனும் புறத்துறுப்பாகவேனும் நின்று சுட்டுப்பொருளை யுணர்த்திவரின் சுட்டெழுத்தாம்.

(உ-ம்.) அவன், இவன், உவன்—அகத்து வந்தன. அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன்—புறத்து வந்தன. அகரந் தூரத்திலிருக்கிற பொருளையும், இகரஞ் சமீபத்திலிருக்கிற பொருளையும், உகரம் இரண்டுக்கு மத்தியிலிருக்கிற பொருளையுஞ் சுட்டுதற்குவரும்.

குறிப்பு:—சுட்டெழுத்துகள் இடைச்சொல்லை யடுத்துவரும்போது அகத்துறுப்பாம்; பெயர்ச்சொல்லை யடுத்து வரும்போது புறத்துறுப்பாம். (அவன்—சுட்டடியாகப் பிறந்தபெயர். அப்பையன்—சுட்டடுத்து வந்தபெயர்.)

10. சுட்டெழுத்து மூன்றுந் திரிந்தும் வரும். (உ-ம்) அ+பையன்=அந்தப் பையன், இ+பையன்=இந்தப்பையன் உ+பையன்=உந்தப்பையன்.

11. Interrogative Letters. வினாவெழுத்து:—ஆ, எ, ஏ, ஓ, என்னும் உயிரெழுத்துகளும், "யா" என்னும் உயிர்மெய்யெழுத்தும் ஆகிய இவ்வைந்தும் வினாப்பொருளை யுணர்த்திவரின் வினாவெழுத்தாம். அவற்றுள் எகரமும் யாவும் மொழிக்கு முதலில் புறத்துறுப்பாகவேனும் அகத்துறுப்பாகவேனும் வரும். ஆகாரமும் ஓகாரமும் மொழிக்கு ஈற்றில் புறத்துறுப்பாகவே வரும். ஏகாரம் மொழிக்கு முதலில் அகத்துறுப்பாகவும், ஈற்றில புறத்துறுப்பாகவும்வரும்.

(உ-ம்.) எக்கொற்றன் ?, எவன் ?; யாங்கனம் ?, யாவன் ?– எகரமும் யாவும் முதலிலே புறத்தும் அகத்தும் வந்தன. மகனா ? மகனோ ?—ஆகாரமும் ஓகாரமும் ஈற்றிலே புறத்து வந்தன. ஏது ? கொற்றனே ?—ஏகாரம் முதலில் அகத்தும் ஈற்றில் புறத்தும் வந்தது.

குறிப்பு:—வினாவெழுத்துகளில் எகர மாத்திரந் திரிந்தும் வரும். (உ-ம்) எ+பையன்=எந்தப்பையன்.

12. உகரம் மாத்திரையின் சுருக்கத்தாலும் இயல்பாலும் குற்றியலுகரம், முற்றியலுகரம் என இருவகைப்படும்.

13. Abbreviated உ. குற்றியலுகரம்:—ஒரு குறிலிணையும் இரண்டு குறிலிணையும் ஆக்கப்படாத மொழியீற்றுவல்லின மெய்யின் மேல் ஏறிய உகரம் குற்றியலுகரம் என்னப்படும். (குற்றியலுகரம், குற்றுகரம், உகரக்குறுக்கம் என்பன ஒரு பொருட்சொற்கள்.

14. அது ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தை நோக்கி நெடிற்றொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர் என அறுவகையாம்.

(உ-ம்). நாகு, ஈறு, கூடு—நெடிற்றொடர்; வரகு, பலாசு,உருபு—உயிர்த்தொடர்; கொக்கு, கச்சு, பட்டு—வன்றொடர்; சங்கு பஞ்சு, துண்டு—மென்றொடர்; செய்து, சார்பு, சால்பு—இடைத்தொடர்; எஃகு, பஃது—ஆய்தத்தொடர்.

குறிப்பு.

(a) குற்றியலுகரமானது நெடிலேழையுஞ் சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வாராத ஔகாரம் நீங்கிய பதினொரு உயிரையும், வல்லெழுத்தாறையும், மெல்லெழுத்தாறையும், வல்லெழுத்துகளோடு தொடராத வகரம் நீங்கிய இடையெழுத்தைந்தையும்; ஆய்தம் ஒன்றையுந் தொடர்ந்தவைகையால் முப்பத்தாறுகும். அன்றியும், நுந்தை என்னும் சொல்லிலே நகரமெய்யிலிருக்கிற உகரமும் குற்றியலுகரம் என்னப்படும். நுந்தை (நும் + தந்தை) = உம்முடையதந்தை.

(b) நெடிற்றொடர் முதலில் நெட்டெழுத்தைப்பெற்று இரண்டெழுத்து மொழியாகவே வரும். (உ-ம் பாடு; ஆறு.

(c) உயிர்த்தொடர் ஈற்றுக்கு அயலில் உயிரெழுத்தைப்பெற்று இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துகளால் ஆகிவரும். (உ-ம்) மெழுகு, பாலாறு.

15. முற்றியலுகரம்:—தனித்துந் தனிக்குறிலைச் சேர்ந்தும் வரும் வல்லின மெய்யின்மேலும், தனித்துந் தொடர்ந்தும்வரும் மெல்லின இடையின மெய்களின்மேலும் வரும் உகரம் முற்றியலுகரமாம்.

(உ-ம்) கு, து; நடு, பசு; யு, நு; தாணு, கதவு. (முற்றியலுகரத்தை முற்றுகரம் எனவுங் கூறுவர்.)

16. Abbreviated இ. குற்றியலிகரம் —நிலைமொழியீற்றுக் குற்றியலுகரங்கள் வருமொழிமுதலில் யகரம் வருமாயின் இகரமாய்த்திரியும். இவற்றோடு"மியா"என்னும் முன்னிலை அசைச்சொல்லிலிருக்கின்ற இகரத்தைக்கூட்டக் குற்றியலிகரம் முப்பத்தேழாம்.

(உ-ம்) நாகு + யாது = நாகியாது, எஃகு + யாது = எஃகியாது, வரகு + யாது = வரகியாது; கேண்மியா, சென்மியா.

17. Prolongation of sounds. அளபெடை:—செய்யுளில் ஓசைகுறைந்தவிடத்து எழுத்தை நீட்டிச்சொல்வதே அளபெடையாம். அது உயிரளபெடை ஒற்றளபெடையென இருவகைப்படும். உயிரளபெடை இருபத்தொன்று;

(உ-ம்) வாஅகை, படாஅகை, கடாஅ, ஆடூஉ, எடுப்பதூஉம், நசைஇ. ஒற்றளபெடைநாற்பத்திரண்டு; (உ-ம்) அரங்ங்கம், மங்ங்கலம், மடங்ங், நங்ங். (அளபெடையை அளபு எனவுங் கூறுவர். வடநூலார் புலுதம் என்பர்.)

18. Measurement of Time or Quantity of Letters. எழுத்துகளின் மாத்திரை:—மனிதருடைய கண்ணிமைப்பொழுது அல்லது கைந்நொடிப்பொழுது ஒருமாத்திரை என்னப்படும். உயிரளபெடைக்கு மாத்திரை மூன்று; நெடிலுக்கு மாத்திரை இரண்டு; குறிலுக்

கும், ஒற்றளபெடைக்குந் தனித்தனி மாத்திரை ஒன்று; ஒற்றுக்கும், குற்றியலுகரத்திற்கும், குற்றியலிகரத்திற்கும், ஆய்தத்திற்குந் தனித்தனி மாத்திரை அரை; உயிர்மெய்க்கு மெய் மாத்திரையொழிய வறிய உயிர்மாத்திரையே மாத்திரையாம்.

குறிப்பு:—பண்டமாற்றினும், விளியினும், இசையினும், புலம்பலினும் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் தமக்குச்சொன்ன அளவைக்கடந்து நீண்டொலிக்கும்.

Sanscrit Letters. வடவெழுத்துகள்.

19. அனேக வடமொழிகள் தொன்று தொட்டுத் தமிழ்ப் பாஷையிற் கலந்து வழங்கப்பட்டு வருவதினால் அவைகளைச் சரியானபடி உச்சரிக்கும் பொருட்டு அப்பாஷைக்கே யுரித்தான சிலவெழுத்துகள் தமிழில் வழங்கப்பட்டுவருகின்றன. [illegible]

20. உயிரெழுத்து பதினாறு:—అ ఆ [illegible] ఋ ౠ ఌ ౡ ఎ ఏ ఐ ఒ ఓ ఔ అం అః

21. மெய்யெழுத்து முப்பத்தேழு:—క ఖ గ ఘ ఙ చ ఛ జ ఝ ఞ ట ఠ డ ఢ ణ త థ ద ధ న ప ఫ బ భ మ య ర ల వ శ ష స హ ళ క్ష ఃక ఃప

22. உயிரெழுத்துப் பதினாறுள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஐ, ஒ, ஔ என்னும் பத்தும்; மெய்யெழுத்து முப்பத்தேழுள் க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ள். என்னும் பதினைந்தும் ஆகிய இருபத்தைந்தும் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொது எழுத்துகளாம்.

23. உயிரெழுத்துகளுள் அப்பத்தொழிந்த ஆறும் (ఋ ౠ, ఌ ౡ అం అః) மெய்யெழுத்துகளுள் அப்பதினைந்து ஒழிந்த இருபத்திரண்டும் (ఖ గ ఘ ఛ జ ఝ ఠ డ ఢ ద థ ధ ఫ బ భ శ ష స హ క్ష ఃక ఃప) ஆகிய இருபத்தெட்டும் ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்துகளாம்.

24. ஆரியத்திற்கேயுரிய இருபத்திரண்டு மெய்யெழுத்துகளில் தமிழில் வழங்கிவரும் எழுத்துகள் ஐந்து; அவையாவன:—ஸ, ஷ, க்ஷ, ஜ, ஹ. (ష స క్ష జ హ)

கவனிப்பு:—(a) சமஸ்கிருத எழுத்துகளின் உச்சரிப்பைத் தெலுங்கு எழுத்துகளால் இங்கே காட்டியிருக்கின்றோம்.

(b) சமஸ்கிருதபாஷைக்குரிய பல உச்சரிப்புகளைத் தமிழ் எழுத்துகளால் எவ்வாறு உச்சரிக்கமுடியாதோ, அவ்வாறே தமிழ் மொழிக்குரிய சில உச்சரிப்புகளையும் சமஸ்கிருத எழுத்துகளால் உச்சரிக்க முடியாதென்று அறிக.

* DIFFERENT SOUNDS OF THE HARD LETTERS.

வல்லினத்தின் பலவித உச்சரிப்பு.

க்

ககரம் மொழிமுதலில் (ɣ) என்னும எழுததை யொதலிக்கும். (உ-ம்.) கடி. (ɣ = k.)

ககரம் ககர, டகர, றகர மெயகளுககுபபின வருமாயின (ɣ) என்னும் எழுத்தைப்பார்ககிலுஞ் சற்று வலிநது ஒலிககும. (உ-ம.) **பக்கம், வேட்கம், அதற்கு.**

ககரம் மொழி இடையிலும கடையிலும (ɣ) எனனும எழுததைபபாாக கிலுஞ் சற்று மெலிந்து ஒலிககும (உ-ம.) **பகல், விறகு.**

ககரம் ஙகர, ணகர, நகர மெய்க்குப்பின் வருமாயின (χ) என்னும எழுத்தை யொத் தொலிக்கும. (உ-ம.) **தங்கம்,** தாங்கி, ஆண்கள். χ = g soft.

ச்

சகரம் சகர, டகர, றகர, மெய்களுககுபபின வருமாயின (ꞩ) எனனும எழுத்தை யொத்தொலிககும. (உ-ம.) **தச்சன், கட்சாடி, பொற்சாடி,** ꞩ = ch soft.

சகரம் மொழி முதலிலும, இடையிலும, கடையிலும (ꞩ̄) எனனும எழுத்தை யொதலொலிககும. (உ-ம,) **சதை, பசுமை, ஆசை.** ꞩ = S.

சகரம் ஞகர மெய்க்குபபின வருமாயின (ꞩ) எனனும எழுசதை யொத தொலிககும. (உ-ம.) **மஞ்சள்.** ꞩ = j.

ட்

டகரம் மோழிக்கு முதலில் வராது.

டகரம் டகர மெய்ககுபபின் வருமாயின (ɔ) என்னும எழுததை யொத தொலிககும. (உ-ம.) **பட்டம்.** ɔ = tt hard.

டகரம் மொழியிடையிலும கடையிலும (ꝺ) எனனும எழுதவை யொத தொலிககும. (உ-ம்.) **படம், காடு.** ꝺ = d.

டகரம் ணகர மெய்க்குப்பின் வருமாயின் (ꝺ) என்னும் எழுத்தைப் பார்ககிலுஞ் சற்று வலிநதொலிக்கும. (உ-ம) **பண்டம்.**

N.B.—An English version of this Section will be found in Appendix B

த்

தகரம் மொழிமுதலில் (ங்) என்னும் எழுத்தை யொத்தொலிக்கும். (உ-ம்) தலை ங் = th hard.

தகரம் தகர மெய்க்குப்பின் வருமாயின் (ங்) என்னும் எழுத்தைப்பார்க் கிலுஞ் சற்று வலிந்து ஒலிக்கும். (உ-ம) பத்து.

தகரம் மொழியிடையிலும் கடையிலும் (ங) என்னும் எழுத்தைப் பார்க் கிலுஞ் சற்று மெலிந்து ஒலிக்கும். (உ-ம்) அதனால்

தகரம் நகர மெய்க்குப்பின் வருமாயின் (ƨ) என்னும் எழுத்தை யொத் தொலிக்கும். (உ-ம்) மந்தன். ƨ = th soft.

ப்

பகரம் மொழிமுதலில் (ப) என்னும் எழுத்தை யொத்தொலிக்கும் (உ-ம்) படி. ப = p.

பகரம் டகர, பகர, றகர, மெய்களுக்குப்பின் வருமாயின் (ப) என்னும் எழுத்தைப்பார்க்கிலுஞ் சற்று வலிந்து ஒலிக்கும். (உ-ம்) நட்பு, அப்பம், பொற்பு.

பகரம் மொழியிடையிலுங் கடையிலும் (ப) என்னும் எழுத்தைப் பார்க் கிலுஞ் சற்று மெலிந்து ஒலிக்கும். (உ-ம்) கோபம், கபி.

பகரம் ணகர, மகர, னகர மெய்களுக்குப்பின் வருமாயின் (ப) என்னும் எழுத்தை யொத்தொலிக்கும். (உ-ம்) காண்பியும், உண்பி; அம்பலம், தம்பு, இன்பம், அன்பு. ப = b.

ற்

றகரம் மொழிக்குமுதலில் வராது.

றகரம் மொழியிடையிலும் கடையிலும் (ஐ) என்னும் எழுத்தை யொத் தொலிக்கும். (உ-ம்) அறிவேன், அறை. (ஐ = rr hard)

றகரம் றகரமெய்க்குப்பின் வரும்போது *tt* என்னும் எழுத்துகளை யொத் தொலிக்கும். (*tt* as in witty.) (உ-ம்) நேற்று.

றகரம் னகர மெய்க்குப்பின் வரும்போது (*dr*) என்னும் எழுத்துகளை யொத்தொலிக்கும். (*dr* as in *Andrew*) உ-ம். இன்று.

N. B.—வல்லின றகரமெய்யும், வல்லின றகர உயிர்மெய்யும் ஒன்றாகச் சேர்ந்து மொழிகளில் வரும்போது, ஒரேஎழுத்தைப்போல் உச்சரிக்கப் பிள் ளைகளைப் பழக்கிவரவேண்டும். உதாரணம்:—ற்ற=*ta*; ற்ற=*ta*; மற்றவையும் இவ்வாறே.

N. B. Telugu letters are here made use of to represent the various sounds of the hard letters.

கவனிப்பு:—தொன்று தொட்டு சமஸ்கிருத பாஷையிலிருந்தும், தற்காலத்தில் பல அன்னியநாட்டுப் பாஷைகளினின்றும் அனேகமொழிகள் தமிழிற்கலந்து வழங்கப்பட்டுவருகின்றன. ஆகையால், மேலே காட்டப்பட்டிருக்கின்ற வல்லினத்தின் பலவித உச்சரிப்புகள் தமிழ் உச்சரிப்புக்கே யுரியனவென்றறிக.

மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள்:—

a—உயிரெழுத்து பன்னிரண்டு:—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

b—உயிரோடு கூடிவரும் மெய்யெழுத்து பத்து:—க், ச், த், ப்; ங், ஞ், ந், ம்; ய், வ்.

c—உயிரோடுகூடி மொழிக்கு முதலில்வராத மெய்யெழுத்து எட்டு:—ட், ற்; ண், ன்; ர், ல், ழ், ள்.

மொழிக்குக் கடையில் வரும் எழுத்துகள்:—

a—உயிரெழுத்துப் பதினொன்று:—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

b—மெய்யெழுத்து பதினொன்று:—ஞ், ண், ந், ம், ன்; ய், ர், ல், வ், ழ், ள்.

c—மொழிக்குக் கடையில் வராத எழுத்துகள்:—எ; க், ச், ட், த், ப், ற்; ங்.

Vowel-Consonants. உயிர்மெய்யெழுத்து—216.

அவை வருமாறு:—

க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

எழுத்திலக்கணங் கூறும் விதம்.

க

வினா:—இந்த அடையாள[redacted]

விடை:—வல்லினக் ககரக் குறில் உயிர்மெய்யெழுத்து.

வினா:—இதற்கு இலக்கணங் கூறுக

விடை:—வல்லினக் ககர (க்) மெய்யின்மேல், அகர (அ) குறில் உயிரேற (க்+அ) க என்றாயிற்று.

ணை

வினா:—இந்த அடையாளம் என்ன எழுத்து?

விடை:—மெல்லின டண்ணகர நெடில் உயிர்மெய்யெழுத்து.

வினா:—இதற்கு இலக்கணங் கூறுக

விடை:—மெல்லின டண்ணகர (ண்) மெய்யின்மேல் ஐகார (ஐ) நெடில் உயிரேற (ண்+ஐ) ணை என்றாயிற்று.

யௌ

வினா:—இந்த அடையாளம் என்ன எழுத்து?

விடை:—இடையின யகர நெடில் உயிர்மெய்யெழுத்து.

வினா:—இதற்கு இலக்கணங் கூறுக

விடை:—இடையின யகர (ய்) மெய்யின்மேல் ஔகார (ஔ) நெடில் உயிரேற (ய்+ஔ) யௌ (யவ்) என்றாயிற்று.

கவனிப்பு:—மேற்கண்டவாறே மற்றெல்லா எழுத்துகளுக்கும் இலக்கணங் கூறப் பிள்ளைகளைப் பழக்கிவரவேண்டும்.

முற்றிற்று.

APPENDIX A

THE ANALYSIS OF TAMIL SENTENC

(A TRANSLATION OF PAGES 1—11.)

A Sentence is the thought of a man completely expressed in words either in speech or in writing.

2. If a single word expresses a complete idea, it is a Sentence; as, (he) comes.

3. When several words joined together express a complete idea, they form a Sentence; as, He worships God.

N. B.—(*a*) In a Sentence, *Nouns* and *Verbs* are essential.
(*b*) Without a *Verb*, no sentence can be formed.

4. Sentences are of five kinds; *viz.*, Complete (sentence that has a finite verb), Dependent, Phrasial, Adverbial and Adjectival.

N. B.—A Sentence consisting of several clauses is called a Complex Sentence; the independent clause in it, is said to be the *Principal Sentence.*

5. A Complete Sentence is made up of a Subject and a Predicate with or without an Object. &c.

Example.

(*a*) *Rangaswamy* brought his book and gave it to Singaram.
(*b*) *Duraraj* came to school.

6. A Sentence made up of several words (Subject, Predicate &c.) and standing in the relation of a Noun either as a Subject or an Object to the Predicate of the Principal Sentence, is called a Dependent Sentence.

Example.

(*a*) It is not known, how he lost the money. (The Dependent Sentence "*how he lost the money*" stands in the relation of a subject to the Predicate "is not known.")

(*b*) He wishes that I should go home. (The Dependent Sentence "that I should go home" stands in the relation of an Object to the Predicate "wishes.")

7. A Phrase is a combination of several words with a Verbal Noun or an Infinitive at the end. It forms part of a Sentence standing as a Subject or an Object of its Predicate.

Example:

(a) Walking in the morning in one of the groves of Bangalore, will give health to the body. ("*Walking..... Bangalore*" stands as the Subject of the Verb "*will give.*")

(b) Iyapillai likes coming to school every day, both morning and evening, and learning his lessons. ("*coming......lessons*" stands as the Object of the verb "*likes.*")

(c) It is the desire of Duraisawmy to write every day in the school. ("*of.........school*" stands as the Subject to the Predicate "*is the desire.*")

(d) God wishes to save the penitent sinner. ("*To .....sinner*" stands as the Object of the Predicate "*wishes.*")

N.B.—(a) An Infinitive can be changed into a Verbal Noun and *vice versa* without affecting the meaning; *e. g.*, "To go to school is the desire of Duraisawmy" can be changed into "Going to school is the desire of Duraisawmy" (The Infinitive "*to go*" is changed into the Verbal Noun "*going*" and the meaning is not altered.)

(b) An Infinitive or an Infinitive Phrase in a sentence, where the Predicate is an Intransitive Verb, is only the Extension of the Predicate; as, Iyapillai comes every day to school to write. ("*To write*" is only an Extension of the Predicate "*comes.*")

8. An Adverbial Sentence is a combination of several words with a "Present Perfect Participle" or a "Verb in the Subjunctive Mood" at the end. It forms part of the Principal Sentence standing as the Extension of its Predicate.

Example.

(a) *Durgia* having started yesterday from Kaniambody and come to Bangalore saw Veeraragavaloo. (The Adverbial Sentence "*having..... Bangalore*" is only an Extension of the Predicate "*saw.*")

(b) If Nallaraj comes to school every day he will write well. (The Adverbial sentence "*if............daily*" is only an Extension of the Predicate "*will write.*")

9. An Adjectival Sentence is a combination of several words with a Participial Adjective at the end. It forms part of the Principal Sentence standing as an attribute to its Subject or Object.

Example.

The men who are most learned blessed the children who knew to read and write well. (The Adjectival Sentence "*who are most learned*" qualifies the subject "*men,*" and the Adjectival Sentence "*who knew to read and write well*" qualifies the Object "*children.*")

10. The Parts of a Sentence;—Subject, Predicate, Object, Attributive Adjuncts of the Subject or the Object and the Extension of the Predicate.

11. The Participial Adjective, the Adjective, the Adjectival Sentence and Nouns in the 6th case form the Attributes to the Subject or the Object.

N.B.—(*a*) If the Attributive word is divisible (derivative), it is a Participial Adjective. (*b*) If not, it is an Adjective.

12. The Participal Verbs, the Adverbs, the Adverbial Sentences, and Nouns in the 3rd, 4th, 5th and 7th Cases form the Extension of the Predicate.

N.B.—(*a*) Divisible (derivative) words, modifying a Verb, are called Participial Verbs; (*b*) If not, they are Adverbs.

Method of Analysing Sentences.

13. Find out first, the Predicate; second, the Subject; third, the Object; fourth, the Attributes of the Subject; fifth, the Attributes of the Object; and sixth, the Extension of the Predicate.

N.B.—(*a*) Predicates are of two kinds, *viz.*, (i) Verbal Predicate and (ii) Predicate formed by the Copula (is, are &c.) and an Adjective, a Noun, or an Adjective and a Noun together.

(*b*) The latter are of three kinds, *viz.*, Finite Verb, Noun Predicate and Interrogative Predicate.

(*c*) Verbal Predicates are of three kinds, *viz.*, Finite Verb, Participial Verb and Participial Adjective.

(*d*) "பயனிலை" is a compound word made up of பயன்+நிலை, meaning "*the end of an idea.*"

(*e*) The Subject and the Object of a Predicate must always be a Noun or words equivalent to a Noun.

(*f*) The Subject is always in the first case.

(*g*) "எழுவாய்" is a compound word made up of எழு+வாய், meaning "*the source of an idea.*"

(*h*) The Object of a Verb must always be in the 2nd Case. Object means that to which something is done by the subject.

14. To find the Nominative (Subject), put the Interrogative Pronouns of the first case "யார்" or "எவர்" &c., before the Predicate, and the answer is the Subject.

N.B.—The Subject comes either before or after the Predicate.

15. To find the Object, put the Interrogative Pronouns of the 2nd case "எவனை" or "எவளை," &c., before the Predicate, and the answer is the Object.

6. To find the Attributes of the Subject or the Object, ask it a question, with "what kind," "how many," or with the Interrogative Pronouns of the 6th case, and the answer is the Attributes of the Subject or the Object.

17. To find the Extension of the Predicate, ask it a question, with "how," "where," "when," "how much", "how many," "why," or with the Interrogative Pronouns of the 3rd, 4th, 5th, or 7th Case, and the answer is the Extension of the Predicate.

N.B.—To find the Adjuncts to the Participal Verbs, Participial Adjectives and Verbal Nouns, ask them the same questions as you do to find the Extension of the Predicate.

Method of Parsing Nouns.

1. For a Noun in the first Case, the method of parsing is:—State its *thinai*, gender, person, and kind, and mention that it is the subject of a certain predicate.

2. For a noun in the eighth or Vocative Case, the method of parsing is:—State its *thinai*, gender, person, kind and case, and mention that it goes along with a certain Verb.

3. For a noun in any case, not being the first or the eighth, the method of parsing is:—State first its case and the idea thereof, then its *thinai*, gender, person and kind, and finally mention that it goes along with a certain word.

N.B.—In the case of a noun in the Second Case, mention also that it is the Object of a certain Verb.

Method of Parsing Verbs.

4. Verbs are of two kinds; those of definite time and those of indefinite time.

5. For a verb of definite time, the method of parsing is :—State whether intransitive or transitive; whether present, past or future; whether affirmative or negative; whether active or passive; whether causative or not; whether a finite verb, a participial verb, an adjectival verb or a verbal noun, and mention what it goes along with.

N.B.—If a finite verb, first state the *thinai*, gender and person of its subject, then parse it as a verb and finally mention that it is the predicate of a certain subject.

6. For a verb of indefinite time, the method of parsing is :—State whether affirmative or negative; whether general, special or Interrogative; whether a finite Verb, a Participial Verb, an adjectival Verb, or a Verbal Noun; and mention what it goes along with.

N.B.—(*a*) If a finite verb, state in addition that it is the predicate of a certain subject.

(*b*) If the predicate of indefinite time is a noun, parse it as a noun, and finally state that it is the predicate of a certain subject.

7. For a verbal noun, the method of parsing is;—first, as a noun, state its case and the idea thereof; then parse it as a verb; and finally end as you would a noun.

Method of Parsing Particles.

8. A particle cannot be parsed by itself, for it is inseparably connected with either a noun or a verb. Therefore first parse the word with which it is connected; then state the kind and the idea of the particle so connected, and finally mention that the entire compound word goes along with a certain word.

Method of Parsing Adjuncts.

9. An adjunct is either an adjective or an adverb. Therefore, state only the idea and the kind of the adjunct, and mention that it qualifies either a noun or a verb.

APPENDIX B.

FOR THE GUIDANCE OF EUROPEANS.

(1.) There are 247 letters in the Tamil Alphabet; of which 2 are Vowels, 18 are Consonants, 216 are compounded of Vowel and Consonant sounds and one is Aytham.

(2) There are only five primary Vowel sounds. These are the five short Vowels அ, இ, உ, எ, ஒ. When these are lengthened, they make the five long Vowels ஆ, ஈ, ஊ, ஏ and ஓ. Two more are the diphthongs ஐ and ஔ, compounded of அ + இ and அ + உ respectively. Thus the total number of Tamil Vowels is 12.

(3) There are 18 Consonants: க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்; of which 6 are hard (க், ச், ட், த், ப், ற்), 6 are soft (ங், ஞ், ண், ந், ம், ன்,), and 6 are middling sounds (ய், ர், ல், வ், ழ், ள்).

(4) There are 216 Vowel-Consonants which result from the combination of the 12 Vowel sounds—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, with the 18 Consonants—க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்: Ex. க் + அ = க, க் + ஆ = கா, க் + இ = கி, க் + ஈ = கீ, க் + உ = கு, க் + ஊ = கூ, க் + எ = கெ, க் + ஏ = கே, க் + ஐ = கை, க் + ஒ = கொ, க் + ஓ = கோ, க் + ஔ = கௌ.

N. B.—(*a*) By way of comparison, taking the word 'Camera' it may be [illegible] up into three syllables; as, Ca + me + ra = Camera. Now *c* as a consonant has its equivalent in the Tamil க் and the syllable *ca* is equal to the compound க் + ஆ written thus: கா; m = ம், me = ம் + எ written மெ; and r = ர், ra = ர் + ஆ written ரா. So the word 'Camera' is written in Tamil as கா + மெ + ரா = காமெரா.

(*b*) The five symbols ஸ, ஷ, க்ஷ, ஜ, ஹ represent sounds no akin to Tamil, and are borrowed from Sanscrit. These consonant with their Vowel combinations are of use to represent the few Sanscrit words which have passed into the Tamil language.

(*c*) There are sounds in Tamil which cannot be represented by Sanscrit letters, as there are sounds in Sanscrit that cannot be represented by Tamil letters, both being independent languages. And it is for this reason that while Sanscrit is spoken of as the language of the North (வடமொழி), Tamil is said to be, by contrast, the language of the South (தென்மொழி).

(5.) Aytham, written thus ஃ (three dots), comes between short Vowels or Vowel-consonants and the Vowel-consonants of the six hard Consonants—க், ச், ட், த், ப், ற். It is neither a Vowel nor a Consonant; yet it sounds in some places like a Vowel and in others like a Consonant.

(6.) Interrogative letters—எ, யா; ஆ, ஓ; ஏ.

In English, Interrogation is marked by a word or a set of words and by their position in a sentence; whereas in Tamil, it is marked by *letters* and by their position in a *word*. எ and யா are interrogatory prefixes, ஆ and ஓ are affixes and ஏ stands for interrogation either as a prefix or as an affix; Ex. எவன்? யாவன்?—Who is he? அவனா?, அவனோ?—Is it he? ஏன்?—Why? அவனே? Is it (really) he?

(7) Demonstrative Letters—அ, இ, உ.

The letters அ, இ, உ are used in Tamil as prefixes to a word to give a Demonstrative signification, as is marked in English by some such words as *this*, *these*; *that*, *those* &c.; Ex. When speaking of three persons, அவன் is *that man*, இவன் is *this man*, and உவன் is *the third man*.

(8) The duration of time in the twinkling of an eye or the snapping of the fingers is taken as a unit of measurement for pronunciation. This unit is called a மாத்திரை (measure). Short sounds whether of Vowel or of Vowel-Consonants have but one மாத்திரை (measure); long sounds whether of Vowels or Vowel-consonant shave two மாத்திரை (measure); and the Consonants and Aytham have but half a மாத்திரை (measure).

(9.) Of the 6 hard letters (க், ச், ட், த், ப், ற்,) the first five have different sounds as they stand differently in a word. The

Sanscrit language has different letters to represent these different sounds, but Tamil has only one.

DIFFERENT SOUNDS OF THE HARD LETTERS:

க்

, at the beginning of a word, sounds like [illegible]; Ex. கசப்பு.

, in the middle or at the end of a word, sounds like soft *h* as in Lo*ch* (Scotch); Ex. பகல், விறகு.

when preceded by க், ட், or ற், doubles its sound and has the sound of hard *k* as in thi*ck*; Ex. கொக்கு, வெட்கம், அதற்கு.

, when preceded by its kindred letter ங், has the sound of *g* as in *g*um; Ex. தங்கம். (ங் is of very little use otherwise than to precede க and its compounds).

ச்

ச், whether at the beginning, middle or end of a word, sounds like *s* as in *s*ay; Ex. சிலம், பசுமை, அசை.

ச், when preceded by ச், ட், or ற், sounds like *ch* as in but*cher*; Ex. பச்சை, கட்சாடி, பொற்சாடி.

ச், when preceded by its kindred letter ஞ், sounds like *j* as in *j*am; Ex. மஞ்சள்.

ட் cannot begin a word.

ட், when in the middle or at the end of a word, sounds like *d* as in *d*ay; Ex. படம், காடு.

ட், when preceded by ட், gives a sound of double *t* as in pu*tt*y; Ex. பட்டு.

ட், when preceded by its kindred letter ண், sounds like *d* as in king*d*om; Ex. பண்டம்.

த்

த், when in the middle or at the end of a word, has the softest *th* sound as in *th*in; Ex. அதன், காது.

த், when at the beginning of a word, sounds slightly harder; Ex. தாண்.

த், when preceded by த், sounds harder than in the two previous cases; Ex. பத்து.

த் when preceded by its kindred letter ந், sounds like *th* [illegible] in *th*em; Ex. சந்தை.

ப்

ப், when at the beginning of a word, sounds like *p* as in *p*arlour; Ex. பாலம்.

ப், when in the middle or at the end of a word, sounds somewhat softer than *p* in *p*arlour; Ex. கோபம், கோபி.

ப், when preceded by ட், ப், or ற், sounds hard *p* like the double *p* in a*pp*le; Ex. நட்பு, அப்பம், கற்பனை.

ப், when preceded by its kindred ம், or by ண் or ன், sounds like *b* as in *b*ay; Ex. அம்பலம், தம்பு, காண்பியும், உண்பி, இன்பம், அன்பு.

ற்

ற் cannot begin a word.

ற், in the middle or at the end of a word, has the sound of double *r* as in ca*rr*y; Ex. அறிவேன், அறை.

ற், when preceded by ற், sounds like double *t* as in wi*tt*y; Ex. நேற்று.

ற், when preceded by its kindred letter ன், sounds like *dr* as in An*dr*ew; Ex. இன்று.

N.B.—(*a*) The above rules are applicable only to Tamil sounds.

(10) A beginner in a foreign language has to learn (1) to read, (2) to write, (3) to learn the meanings of, and (4) to speak in, that language.

Rules that relate to reading : (In Tamil)

I. Letters :

First, Get a thorough acquaintance with the pronunciation and the symbols (letters) of the Vowel sounds, then of the Consonant sounds, and then of the compound sounds (of Vowels and Consonants).

Secondly, Learn to show and write a given letter.

II. Spelling.

First, Spell out a word pronouncing separately the different letters of a word according to the மாத்திரை of each ; Ex. ப+டி+ப்+பா+ர்+க+ள்=படிப்பார்கள். அ+டி+ப்+ப+தே+ன்=அடிப்பதேன்.

Secondly, Since in pronunciation a Vowel or a Vowel and a Consonant, or a Vowel-Consonant, or a Vowel-Consonant and a Consonant form but one syllable, learn to pronounce in syllables ; thus, அ, அம் ; ஆ, ஆம் ; பொ, பொன் ; போ, போய்.

Thirdly, In Reading, two short syllables or a short followed by a long one are pronounced together ; Ex. படிப்+பார்+கள்=படிப்பார்கள், அடிப்+பதேன்=அடிப்பதேன்.

---

(11) Letters that can begin a word :—

(*a*) The 12 Vowels—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

(*b*) All the Vowel sounds combining with the ten Consonants—க், ச், த், ப்; ங், ஞ், ந், ம்; ய், வ்.

(12) Letters that cannot begin a word :—

(*a*) The Consonants as Consonants (*i.e.*, dotted).

(*b*) The Vowel compounds of the 8 Consonants—ட், ற் ; ண், ன்; ர், ல், ழ், ள்.

(13) Letters that can come at the end of a word :—

(*a*) 11 Vowels compounded with Consonants—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

(b) 11 Consonants as Consonants (i.e., dotted)—ஞ், ண், ந், ம், ன்; ய், ர், ல், வ், ழ், ள்.

(14) Letters that cannot come at the end of a word :—

(a) One Vowel compounded with Consonants ;—எ.

(b) 7 Consonants as Consonants (i.e., dotted) க், ச், ட், த், ப், ற் ; ங்.

N.B.—(a) In a sentence when a word ends with க், ச், த், ப், these Consonants do not really belong to that word, but they are due to the euphonious doubling of the Consonant (combined with a Vowel) that begins the succeeding word. They are however (in writing and printing) added to the preceding and not to the succeeding word, because of the rule that no Consonant (dotted) can begin a Tamil word ; Ex. தமிழ்ப் பாஷையைத் துரைசாமிக்குக் கற்பிக்கச் சொன்னேன். In pronunciation this doubling should be expressed merely by stressing the first letter of the succeeding word ; and not by pronouncing the Consonant as part of the preceding word—தமிழ்ப் + பாஷையைத் + துரைசாமிக்குக் + கற்பிக்கச் + சொன்னேன்—as is unfortunately done by some Munshies teaching Europeans, and by many teachers of the young, in dictation exercises. This is due to an inability to realise that the doubling of the Consonant is merely for reasons of euphony.

(b) When a final ம் is followed by a word beginning with a Vowel compound of க், ச், த் or ந், it is changed for euphony into ங், ஞ், ந், or ந் respectively Ex. மனம் + களித்தது = மனங்களித்தது, மரம் + சாய்ந்தது = மரஞ்சாய்ந்தது, கனம் + தங்கிய = கனந்தங்கிய, செம் + நெல் = செந்நெல்..

APPENDIX C.

In the combination of word with word, the hard letters (க், ச், த், ப்) are sometimes doubled and sometimes not. For guidance in Composition lists of both cases are hereunder appended. There are four kinds of combinations of words in Tamil, and among them the hard letters present the greatest difficulty; an ignorance of the correct usage is, at the same time, considered disgraceful.

"இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க, ச, த, ப மிகும்" என்ற இலக்கண விதியை யனுசரித்து வல்லின மிகு மிடங்களையும் மிகாவிடங்களையும் ஈண்டு எடுத்துக் காட்டுகின்றோம்.

கவனிப்பு: பாலகர்களுக்குக் கற்பிக்கிற உபாத்திமார்களில் பலர் டிக்டேஷன் (சொல்வதெழுதல்) கொடுக்கும்போது, வல்லின எழுத்துகளினாலுண்டாகும் பிரயோஜனத்தை யறியாமல், வார்த்தைகளைத் தப்பாய் உச்சரிக்கிறார்கள். ஸ்கூல் இன்ஸ்பெக்டர்கள் தங்கள் சேகரங்களிலிருக்கும் உபாத்திமார்களைத் திருத்தினால், தமிழ்ப்பாஷையின் மேன்மைவிளங்கும்; பாலகர்களும் விருத்தியடைவார்கள்.

I. வல்லின மிகுமிடங்கள்.

1. எகரவினாமுன்னுஞ் சுட்டு முன்னும் வலிமிகும். (உ-ம்) எ+காலம் =எக்காலம்? அ+காலம்=அக்காலம், அ+சபை=அச்சபை, அ+தோட்டம் =அத்தோட்டம், அ + பையன்=அப்பையன். (மற்றையச் சுட்டெழுத்துகளோடும் இவ்வாறே ஒட்டிக்காண்க)

2. "அந்த" "இந்த" "உந்த" என்கிற சுட்டுத்திரிபின்முன்னும் "எந்த" என்கிற வினாத்திரிபின்முன்னும் வலிமிகும். (உ-ம்) அந்தக் குதிரை, அந்தச் சபை, அந்தத் தூண், அந்தப் பையன், எந்தப் பெட்டி? (மற்றைய சுட்டுத்திரிபுகளோடும் இவ்வாறே கூட்டிக்காண்க.)

3. "படி" என்னும் இடைச்சொல் சுட்டையும், எகரவினாவையும் அடுத்து வரும்போது வலிமிகுதலும் மிகாமையும் உண்டாம். (உ-ம்) அப்படிச் செய்தான், அப்படி செய்தான்; எப்படிச் சொன்னான், எப்படி சொன்னான்.

4. "வகை" என்கிற பெயர்ச்சொல் சுட்டெழுத்துகளோடும், எகர வினாவெழுத்தோடுஞ்சேர்ந்து வரும்போது வலிமிகும். (உ-ம்) அவ்வகைப் புகல்வாய், இவ்வகைச் செய்தாய், எவ்வகைக் கண்டாய்.

5. "மற்ற" என்கிற இடைச்சொல்லுக்குமுன் வலிமிகும். (உ-ம்) மற்றக் காரியம், மற்றச் சபை, மற்றப் பகைவர், மற்றத் துணைவர்,

6. "மற்று" என்கிற இடைச்சொல் ஐகாரச்சாரியை பெற்று "மற்றை" அல்லது "மற்றைய" எனத் திரிந்து வரும்போது வலிமிகும். (உ-ம்) மற்றைக் காரியம், மற்றையச் செல்வம்.

7. "போல" முதலிய உவமை இடைச்சொற்களுக்குமுன் வலிமிகும். (உ-ம்) அது போலக் கூறினான்.

8. "அரை" (½) என்கிற எண்ணிற்குமுன் வலிமிகும். (உ-ம்) அரைக் காசு, அரைப்பணம்.

9. உகரவீற்று விகார எண்ணுப் பெயர்களில், "ஒரு" என்னுஞ் சொல்லுக்குமுன் மாத்திரம் தேற்றத்தில் அரிதில் வலிமிகும் (உ-ம்.) ஒருப்போதும், ஒருக் காலும்.

10. மகரங்கெட நின்ற மொழிக்குமுன் வலிமிகும். (உ-ம்.) கொஞ்சம் +காலம்=கொஞ்சக் காலம், எல்லாம்+குணமும்=எல்லாக் குணமும், பணம்+கவலை=பணக் கவலை, கமலம்+கண்=கமலக் கண்.

11. "அன்று" "இன்று" "உன்று" "என்று" என்னுஞ் சொற்கள் ஐகாரச்சாரியை பெற்று "அன்றை" "இன்றை" "உன்றை" "என்றை" என விகாரப்பட்டு நிற்கையிலும், "அன்றைய" "இன்றைய" "உன்றைய" "என்றைய" என நிற்கையிலும் இவற்றிற்கு முன் வலிமிகும். (உ-ம்.) அன்றைக்கு, அன்றையத்தினம். மற்றவையும் இவ்வாறே.

12. "அற்றை" "ஒற்றை" "நேற்றை" "பண்டை" முதலிய விகாரப்பட்ட சொற்களுக்கு முன் வலிமிகும். (உ-ம்.) அற்றைக் கூலி, ஒற்றைப் பணம், நேற்றைப் போது, பண்டைக் காலம். அன்று=அற்றை, ஒன்று=ஒற்றை, நேற்று=நேற்றை, பண்டு=பண்டை.

13. மிகுதியாகிய ஒரு குணத்தை யுணர்த்தும் சொற்களாகிய 'சால' 'தவ' 'மிக' 'மிக்க' இவற்றிற்குமுன் வலிமிகும். (உ-ம்.) சாலப் பேசினான், தவச் சேய்நாடு, மிகச் சொன்னான், மிக்கத் திருடினான்.

14. 'மிக' என்னும் பொருளைத்தரும் 'மெத்த' என்னும் சொல்லுக்குமுன் வலிமிகும் (உ-ம்.) மெத்தக் கெட்டியாய், மெத்தத்தீமை.

15. உயிரெழுத்துகளில் ஆகாரத்தையும் இகரத்தையும் இறுதியிலுடைய சொற்கள் இரட்டித்து வருமிடத்தில் வலிமிகும். (உ-ம்) பளாப் பளா, தனித்தனி.

16. "பல" "சில" என்னும் அஃறிணைப் பன்மைச் சொற்கள் தம்முன் தாம் வரின் ஒருகால் வலி மிகும். (உ-ம்.) பலப் பல, சிலச் சில.

17. வன்றொடர்முன் இருவழியிலும் வலி மிகும். உ-ம். கொக்குக் கால்—வேற்றுமை. அறுத்துத் தந்தான்—அல்வழி.

குறிப்பு.

(a) வேற்றுமைப்புணர்ச்சியாவது: ஐ, ஆல், கு, இன், அது, இல், என்னும் ஆறு வேற்றுமை யுருபுகளும் மொழிக்கு நடுவில் மறைந்தும் வெளிப்பட்டும் நிற்கப் பதங்கள் பொருந்தும் புணர்ச்சியாம்.

(b) அல்வழிப் புணர்ச்சியாவது: வேற்றுமையுருபுகள் இடையில் வராமல் நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப்புணருவது. இது பதினான்கு வகைப்படும்.

18. டகர றகர ஈறுகளையுடைய நெடிற்றொடர் உயிர்த்தொடர் குற்றியலுகரங்களுக்குமுன்னும், மென்றொடர் குற்றியலுகரத்திற்குமுன்னும் வேற்றுமையில் வலி மிகும். (உ-ம்.) ஆடு + கால் = ஆட்டுக் கால், ஆறு + துறை = ஆற்றுத் துறை—நெடிற்றொடர்; முருடு + தொனி = முருட்டுத் தொனி கயிறு + சுருணை = கயிற்றுச் சுருணை—உயிர்த்தொடர்; சங்கு + கூட்டம் = சங்குக் கூட்டம்—மென்றொடர்.

19. மென்றொடர் குற்றியலுகர மொழிமுன் பண்புத்தொகையில் வலி மிகும். (உ-ம்.) கன்றுக் குட்டி, பண்புச் சொல், சம்புப் புல்.

20. குறிலணைந்த முற்றியலுகரங்களுக்குமுன் இருவழியிலும் வலி மிகும். (உ-ம்.) மருச் சிறிது, மதுத் தீது—அல்வழி. மருக் கொழுந்து, மதுத் தீமை—வேற்றுமை, (மரு—ஓர் பரிமளப்பூண்டு.)

21. வகர உகரத்தை யிறுதியாகவுடைய முற்றியலுகரத்திற்கு முன் வலி வரும். (உ-ம்.) புறவுத் தலை, சுறவுத் தோல், இரவுக் காலம். புறவு = புறா; சுறவு = சுறா.

22. தனிநெடில் மொழிமுன்னும் குறில்நெடிலிணைந்த மொழிமுன்னும் இருவழியும் வலி மிகும். (உ-ம்.) பூப் பூத்தது, சுறாப் பாய்ந்தது—அல்வழி. பூப் பறித்தான், சுறாப் பிடித்தான்—வேற்றுமை.

23. ஆகாரவீற்றுப்பெயர்முன் இருவழியும் வலிமிகும். (உ-ம்.) தாராக் கடுமை—வேற்றுமை. தாராச் சிறிது—அல்வழி. மூங்கா, உசா, வயா முதலியவற்றோடும் இங்ஙனம் ஒட்டுக. தாரா = ஓர் புள், மூங்கா = கீரிப்பிள்ளை உசா = வேவுகாரர், வயா = கர்ப்பம்.

24. பண்புத்தொகை உயர்திணையிலும் அஃறிணையிலும் வலி மிகும். (உ-ம்.) நம்பிக் கொற்றன்—உயர்திணை. சாரைப் பாம்பு, கார்ப் பருவம், பொய்ப் பேச்சு, பாழ்க் கொல்லை—அஃறிணை.

25. இரண்டாம் வேற்றுமை விரியின் முன்னும், நான்காம் வேற்றுமை விரியின்முன்னும் வலி மிகும். (உ-ம்.) அவனைக் கண்டான்—இரண்டாம்வேற்றுமை. அவனுக்குக் கொடுத்தான்—நான்காம்வேற்றுமை.

26. "விட" என்கிறசொல் "பார்க்கிலும்" என்கிறபொருள் தந்து, ஐந்தாம்வேற்றுமைச் சொல்லுருபாக நிற்கும்போது வலிமிகும். (உ-ம்.) அவனைவிடக்கெட்டிக்காரன், அதை விடப் பொல்லாதது.

27. உயிரையும் மெய்யையும் இறுதியாகவுடைய அஃறிணைப்பெயர்முன் ஆறாம்வேற்றுமைத் தொகையில் வலி மிகும். (உ-ம்.) பறவைக் கூடு, வாழைக் குலை, கிளிச் சிறகு, நரிப் பல், நாய்த் தலை, தேர்க்கால், யாழ்ப் பெருமை. (யாழ் = வீணை.)

28. ஏழாம்வேற்றுமை உயிரீற்றுச் சொல்லுருபுகளுக்கு முன் வலி மிகும். உ-ம். வேலின்கடைப் பூண், நல்லாரிடைப் புக்கு.

29. மென்றொடர் குற்றியலுகரங்களில் ஏழாம்வேற்றுமை இடப்பொருளை யுணர்த்தும் அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு; ஈண்டு; யாங்கு; யாண்டு என்னுஞ் சொற்களுக்குமுன் வலிமிகும். (உ-ம்) அங்குக் கண்டேன், இங்குத் தேடினேன், உங்குக் களித்தேன், எங்குச் சிறந்தாய்; ஆங்குக் கண்டான், ஈங்குத் தேடினான், ஊங்குக் களித்தான், ஈண்டுக் காணும், யாங்குப் புடைத்தாய், யாண்டுப் புகழ்ந்தாய்.

30. இரண்டாம், மூன்றாம், ஏழாம்வேற்றுமை யுருபும் பயனும் உடன்றொக்கத் தொகைகளில் வலிமிகும். (உ-ம்.) குடிமிப் பையன், தயிர்க்குடம்—இரண்டாம்வேற்றுமை; மரப் பெட்டி, செம்புப் பானை—மூன்றாம்வேற்றுமை. கைக்குடை, கைப்பொருள்—ஏழாம்வேற்றுமை.

31. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்திற்குமுன் வலி மிகும். (உ-ம்.) நடவாக் குதிரை, படியாப் பையன்—தெரிநிலை. இல்லாப் பொருள், அல்லாச் செய்கை—குறிப்பு.

32. 'பொல்லா' என்கிற ஈறுகெட்ட உடன்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சத்திற்குமுன் வலிமிகும். (உ-ம்.) பொல்லாப் பலகை.

33. 'பழைய' என்கிற உடன்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சத்திற்கு முன் வலிமிகும். (உ-ம்) பழையப் பொருள், பழையச் சொல்.

34. 'அன்றி' 'இன்றி' என்னும் எதிர்மறைக்குறிப்பு வினையெச்சம்; மெல்ல' 'பைய' 'வலிய' என்னும் உடன்பாட்டுக்குறிப்பு வினையெச்சம் இவைகளுக்குமுன் வலிமிகும். (உ-ம்.) அன்றிப் போனான், இன்றிக் கண்டான்; மெல்லப் பேசினான், பையச் சென்றான், வலியச் சொன்னான்.

35. இகர யகரவீற்றுச் செய்தென்னும் வினையெச்சத்தின் முன்னும், அகரவீற்றுச் செயவென்னும் வினையெச்சத்தின் முன்னும் வலிமிகும். (உ-ம்) ஆடிக் கொண்டான், போய்க் கண்டான்—இறந்தகால வினையெச்சம். பார்க்கப்போனான், அப்படியாகச் சொன்னான், வருவதாகப் போனான், அவனை விடப் போனான்—முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சம்.

36. "செய்து" என்னும் வினையெச்சப் பொருளில்வரும் ஆகார வீற்றுத் தெரிநிலை வினையெச்சத்தின்முன் வலிமிகும்: (உ-ம்) உண்ணாக்கொண்

டான், கேளாச் சொன்னன், தேடாத் திரிந்தான். (For உண்டு, கேட்டு, தேடி.)

37. "செய்யாது" என்னுந் தெரிநிலை யெதிர்மறை வினையெச்சம் துவ்விறு குறைந்து "செய்யா" என நிற்குங்கால் வலிமிகும். (உ-ம்) உண்ணுக் கொண்டான். (உண்ணுக்கொண்டான் என்பதற்கு உண்ணைது கொண்டான் என்பது பொருள்.)

38. "என" "எனு" என்கிற சொற்களுக்குமுன் வலிமிகும். (உ-ம) நீதேடெனச் சொன்னுன், தருவேனெனுப் போனுன்.

II. வல்லின மிகா விடங்கள்.

39. உயிரீற்றுச் சுட்டுப்பெயர்முன்னும் வினுப்பெயர்முன்னும் வல்லினம் இருவழியிலும் மிகாது. (உ-ம்) அது குறிது, அவை சிறிய ; எது குறிது ?, எவை சிறிய?, எது பெட்டி ?, யாதுபெரிது?—அல்வழி. அது கொடுத்தான், அவை கொடுத்தான் ; எது கொடுத்தான் ?, எவை கொடுத்தான்?—வேற்றுமை.

40. வினுவையடுத்த பெயர்முன் வலிமிகாது (உ-ம்) அவனு கொண்டான் ? அவனே கொடுத்தான் ?

41. விகாரப்பட்ட "என்ன" என்னும் வினுவின்முன் வலிமிகாது. (உ-ம்.) என்னசெய்தி ? என்ன கொடுத்தான் ? ("எவன்" என்பது "என்" "என்னை" "என்ன" எனவும் மருவி வழங்கும். (எவன்=எது, எவை.)

42. எண்ணுப் பெயர்களில் "எட்டு" "பத்து" ஒழிய ஏனைய எண் களுக்குமுன் வலிமிகாது. (உ-ம்.) இரண்டு குதிரை, மூன்று பசு, நான்கு தும்பி, ஐந்து பலகை, ஆறு சாடி, எழு செண்டு, ஒன்பது புடவை.

43. உகரவீற்று விகார எண்ணுப்பெயர்முன் வலிமிகாது. (உ-ம்) ஒருசாண், இருகை, அறுசுவை, எழுகடல் (ஒன்று, இரண்டு, ஆறு, எழு, என்னும் எண்ணுப்பெயர்கள் ஒரு, இரு, அறு, எழு, என விகாரப்பட்டன.)

44. "தனை" "அளவு" என்னும் பண்புச்சொல்முன் வலிமிகாது. (உ-ம்) அத்தனை பேச்சு, அவ்வளவு பேச்சு.

45. "சிறு" என்னும் பண்படியின்முன் வலிமிகாது. (உ-ம்.) சிறு குதிரை, சிறுசங்கு, சிறுதுரும்பு, சிறுபையன்.

46. "ஆ" "மா" இவ்விரண்டு எழுத்துகளும் ஓரெழுத்து ஒர் மொழி யாக நிற்கும்போது அல்வழியில் வலிமிகாது. (உ-ம்) ஆகுறிது, மா[illegible] (ஆ=பெண்பசு, பெண் எருமை. மா=ஆண்குதிரை, ஆண்யானை.)

47. காட்டுப்பசு என்னும் பொருள்தரும் "ஆமா" என்கிற மொழிக் குமுன் அல்வழியில் வலிமிகாது. (உ-ம்.) ஆமா குறிது, ஆமா பெரிது.

48. உயிரையும் மெய்யையும் இறுதியாகவுடைய உயர்திணைப்பெயர், பொதுப்பெயர் இவ்விரண்டின் முன்னும் வலிமிகாது. (உ-ம்.) தம்பிகை, தந்தை கை, அவர்பெட்டி—உயர்திணைப்பெயர். நீ குறியை, நீர் குறியீர்—பொதுப்பெயர்.

49. அஃறிணைப்பெயர் அன்மொழியாகியும் ஆகுபெயராகியும் உயர்திணையை யுணர்த்தின் வலிமிகாது. (உ-ம்.) பொற்றொடிகை, அரசுகை.

50. உயிரீற்று வடமொழியின்முன் க, ச, த, ப, க்களை முதலிலுடைய வடமொழி வந்தால் வலிமிகாது. (உ-ம்) ஆதிபகவன், மணிகண்டன், கங்கை புத்திரன், தரும சாலை, கலா சாலை.

51. எழுவாய்த்தொடர், விளிப்பெயர் இவ்விரண்டின் முன்னும் வலிமிகாது. (உ-ம்) துரைசாமி படிக்கிறான், வள்ளியம்மை பாடுகிறாள்—எழுவாய்த்தொடர், சாத்தாகொடு—விளிப்பெயர்.

52. இரண்டாம்வேற்றுமைத் தொகைமுன் வலிமிகாது. (உ-ம்.) புளிதின்றான், வழிதேடினான்.

53. மூன்றும், ஐந்தாம், ஆறும் வேற்றுமை உயிரீற்று உருபுகளுக்கு முன் வலிமிகாது. (உ-ம்) அவனொடு பேசினான், அவனோடு கூடினான், அவனைக்கொண்டு பேசினான்—மூன்றும்வேற்றுமை. ஆதிலிருந்து கொடுத்தான், வீட்டினின்று பார்த்தான்—ஐந்தாம் வேற்றுமை. அவனது பெட்டி, அவனுடைய கடை—ஆறும் வேற்றுமை.

54. எழாம் வேற்றுமை உயிரீற்றுச் சொல்லுருபுகளில் "பாடு" என்கிற உருபிற்குமுன் மாத்திரம் வலிமிகாது. (உ-ம்) அவன்பாடு புகழில்லை.

55. டகர றகர ஈறுகளையுடைய நெடிற்றொடர் உயிர்த்தொடர் குற்றியலுகரங்களுக்குமுன்னும், மென்றொடர் குற்றியலுகரத்திற்குமுன்னும் அல்வழியில் வலிமிகாது. (உ-ம்) ஆடுதின்றது. ஆறுபெருகிற்று—நெடிற்றொடர்; சரடுசிறிது, வயிறுபெரிது—உயிர்த்தொடர்; வந்துபோனான்—மென்றொடர்.

56. டகர, றகர ஈறுகளைப் பெற்றிராத நெடிற்றொடர், உயிர்த்தொடர் குற்றியலுகரங்களுக்கு முன்னும்; இடைத்தொடர், ஆய்தத்தொடர் குற்றியலுகரங்களுக்கு முன்னும் இருவழியிலும் வலிமிகாது. (உ-ம்) நாகு கால், வரகு புடைத்தான், தெள்குத்லை, எஃகு பெருமை—வேற்றுமை.

காது மகட்டுகும, வபகு காய்த்தது, செய்துகொடுத்தான், எங்கு சிறந்தது.—அல்வழி.

57. யகர, ரகர, ழகர, மெய்களுக்குமுன் அல்வழியில் வலிமிகாது. (உ-ம்.) நாய் பெரிது, தேர் சிறிது, யாழ் குறிது. (யாழ்=வீணை.)

58. பலவகையாகிய வினைமுற்றின் முன் வலிமிகாது. (உ-ம்)உண்டனைகொற்றா, உண்டாய்கொற்றா, உண்டீர்கொற்றரே—முன்னிலை வினைமுற்று. உண்டது குதிரை, உண்டன குதிரைகள்; உண்ணுகுதிரைகள்—அஃறிணைப்படர்க்கை வினைமுற்று. வந்தார் கொற்றவர்—உயர்திணைப் பலர்பால் படர்க்கை வினைமுற்று. உண்ணு கொற்றா, உண்ணீர் கொற்றரே—ஏவல் வினைமுற்று. வாழ்ககொற்றா—வியங்கோள் வினைமுற்று.

59. பலவகையாகிய பெயரெச்சத்தின்முன் வலிமிகாது. (உ-ம்) வந்தகுதிரை—இறந்தகாலப்பெயரெச்சம்; வருகிறகுதிரை—நிகழ்காலப் பெயரெச்சம். பெரியகுதிரை—குறிப்புப் பெயரெச்சம். படியாதபையன்—தெரிநிலை எதிர்மறைப் பெயரெச்சம். இல்லாதபொருள்—குறிப்பு எதிர்மறைப் பெயரெச்சம்.

60. "பல" "சில" என்னுஞ் சொற்களின்முன் வலிமிகாது (உ-ம்) பலபேச்சு, சிலபொருள்.

61. வினைத்தொகைமுன் வலிமிகாது. (உ-ம்) குளிர்காற்று, விடுகணை,

62. உம்மைத்தொகைமுன் வலிமிகாது. (உ-ம்) சேரசோழபாண்டியர், ஆனை குதிரை.

63. "செய்யிய" என்னும் எதிர்கால வினையெச்சத்தின் முன் வலிமிகாது. (உ-ம்) உண்ணிய கொண்டான், உண்ணிய சென்றான். (உண்ணிய=உண்ண.)

64. "அன்றி" "இன்றி" என்னும் எதிர்மறைக்குறிப்பு வினையெச்சச்சொல்லினது ஈற்று இகரம் செய்யுட்கண் உகரமாய் வருமாயின் வலிமிகாது. (உ-ம்.) வாளன்றிப்பிடியான்" என்பது வாளன்றுபிடியான் என வந்தது. "உப்பின்றிப் புற்கையுண்கமா" என்பது உப்பின்று புற்கையுண்கமா என வந்தது.

65. இடைச்சொல் ஏகார ஓகாரங்களுக்குமுன் வலிமிகாது. உ-ம். முத்துசாமியே படித்தான், கோபாலனோ கேட்டான்.

66. "படி" என்கிற இடைச்சொல் வினையையடுத்து வரும்போது வலிமிகாது. (உ-ம்.) வரும்படி சொன்னான், காட்டும்படி துணிந்தான்.

67. "அம்ம" "மியா" என்னும் இடைச்சொற்களுக்குமுன் வலிமிகாது. (உ-ம்.) அம்ம கேள், கேண்மியா கொற்றா.

N.B. இலக்கணிகள் விகற்பமாக வருமென்ற விதிகளைக் கையாடாது விடுத்தோம்.

APPENDIX D.

In dictation exercises a confusion often arises in the minds of pupils between ர & ற; ல, ழ & ள and ன & ண. Not only beginners but also many University candidates feel this difficulty. This may be traced to the carelessness in pronunciation of their teachers in the early stages. A confusion of one letter for another leads to differences in meaning which is as follows:—

I. மொழிகளில் 'ர' 'ற' என்னும் எழுத்துகள் மாறி வருவதினால் உண்டாகும் பொருட்பேதங்கள்.

அரம்—ஓர் கருவி.
அறம்—தருமம்.
அரவு—பாம்பு.
அறவு—அறுபட்ட இடம்
அருகு—சமீபம், பக்கம்.
அறுகு—ஆண்புலி, சிங்கம், புல்.
அருத்தல்—உண்பித்தல்.
அறுத்தல்—அறச்செய்தல்.
அருப்பு—தயிர்
அறுப்பு—மங்கிலியமிழத்தல்.
அரும்பு—பூவரும்பு.
அறும்பு—கொடுமை.
அரை—இடை, பாதி.
அறை—அடி, சொல்.
அரி—வெட்டு, கடல், தீ, பொன்.
அறி—தெரிந்துகொள்.
அரிவை—இருபத்தைந்து வயதுப்பெண்.
அறிவை—அறிவாய்.
அரு—அணு, கடவுள், அரிய.
அறு—அறுவென்னேவல்,
ஆரல்—ஓர் மீன்
ஆறல்—ஆறுதல்.
ஆரை—மதில்.
ஆறை—ஆற்றூர்.
இரக்கம—கிருபை.
இறக்கம்—இறங்குந்தன்மை.
இரங்கல்—அழுதல்.
இறங்கல்—இறங்கப்படுவது.

இரத்தல்—வேண்டுதல்.
இறத்தல்—கடத்தல்.
இரப்பு—பிச்சை.
இறப்பு—சாவு.
இரவு—இராத்திரி.
இறவு—இறால், வீட்டிறப்பு.
இருப்பு—இருக்கை.
இறுப்பு—குடியிறை.
இரும்பு—சத்தலோகத்தொன்று.
இறும்பு—தாமரைப்பூ.
இருத்தல்—தங்கல்.
இறுத்தல்—வடித்தல்.
இரை—உணவு.
இறை—அரசன், குடியிறை.
இரைப்பு—இரைதல்.
இறைப்பு—இறைக்குந்தன்மை.
இரைதல்—ஒலித்தல்.
இறைதல்—சிந்தல், சிதறுதல்.
ஈரல்—பித்திருக்கும் ஸ்தானம்.
ஈறல்—துக்கம், நெருக்கம்.
உரக்கம்—வசத்திலிருப்பு.
உறக்கம்—நித்திரை.
உரத்தல்—பலத்தல்.
உறத்தல்—பிதுக்கல்.
உரண்டை—காக்கை.
உறண்டை—வறட்சி.
உரல்—நெல்முதலிய குத்துமுர
உறல்—வருதல், கிட்டல்.

உரவர்—அறிவுடையோர்
உறவர்—உறவோர்
உரவு—அறிவு
உறவு—சுற்றம், சினேகம்
உரு—உடல், ஜெபத்தின் உரு
உறு—உறுவென்னேவல்
உரி—மரப்பட்டை, உரியென்னேவல்
உறி—தூக்கு
உரிஞ்சுதல்—தேய்த்தல்
உறிஞ்சுதல்—உள்ளேவாங்கல்
உரிதல்—முளைத்தல்
உறிதல்—உறிஞ்சுதல்
உருத்தல்—கோபம்
உறுத்தல்—வினைப்பித்தல்
உருப்பு—பூரணம்
உறுப்பு—அங்கம், அடையாளம்
உருபு—உருவம்
உறுபு—மிகுதி
உரை—சொற்பயன்
உறை—இருப்பிடம்
உரைதல்—தேய்தல்
உறைதல்—பால் முதலியன இறுகுதல்
உருவல்—உருவுதல்
உறுவல்—துன்பம்
ஊரல்—ஈரம், பசுமை
ஊறல்—ஊற்று
ஊரு—அச்சம்
ஊறு—தழும்பு
ஊருதல்—ஏறுதல்
ஊறுதல்—நனைதல்
எரிதல்—பிரகாசித்தல்
எறிதல்—அடித்தல்
எரித்தல்—எரியசெய்தல்
எறித்தல்—ஒளிவீசல்
எரிப்பு—பொறாமை
எறிப்பு—ஒளிசெய்தல்
ஏரல்—கிளிஞ்சில்
ஏறல்—ஏறுதல்
ஒருத்தல் — யானை முதலியவற்றின் [ஆண்
ஒறுத்தல்—வெறுத்தல்
கரி—யானை
கறி—இறைச்சி, மிளகு
கருக்காய்—இளங்காய்
கறுக்காய்—ஓர் மரம்
கருப்பு—அரிது, குறுவிலை
கறுப்பு—கருநிறம்
கரை—கரையென்னேவல்
கறை—மாசு
கருவம்—அகங்காரம்
கறுவம்—சினம்
காரல்—காருதல்
காறல்—ஓர் சுவை
காரு—செய்வோன்
காறு—கொழு
காருதல்—காந்தல்
காறுதல்—நெய்முதலியகாறுதல்
காரை—ஓர் செடி
காறை—ஓர் ஆபரணம்
கிராய்—வயிரநிலம்
கிறாய்—பச்சைநிறக்களிமண்
கிரி—மலை
கிறி—பொய், வழி
குரங்கு—மந்தி
குறங்கு—தொடை
குரம்—விலங்கின் குளம்பு
குறம்—ஓர் ஜாதி
குரவர்—அரசர், உவாத்தி
குறவர்—வேடர்
குரவன்—தந்தை, குரு
குறவன்—ஓர் ஜாதியான்
குரவை—கடல்
குறவை—ஓர் மீன்
குருமை—பெருமை
குறுமை—சிறுமை
குரை—ஒலி, அசைச்சொல்
குறை—குற்றம்
கூரல்—ஓர்மீன்
கூறல்—கூறுதல்
கூரை—வீட்டின்மேற்பு,
கூறை—சீலை, மணவாட்டி யுடுக்கும் [புதுப்புடவை
கோரணி—கோளாறு

கோறணி—குண்டணி
கோர்க்கை—மன்றுட்டம்
கோறிக்கை—நினைவு
சருவம்—வெண்கலம் பித்தளை முதலிய லோகங்களினால் செய்யும் பாத்திரம்
சறுவம்—சமஸ்தம்
சாரல்—மலைப்பக்கம்
சாறல்—குளிர்காற்று
சாரு—கின்னை
சாறு—ஆணம், கள்
சிரத்தல்—அழித்தல்
சிறத்தல்—சிறப்பாதல்
சிரை—சிரையென்னேவல்
சிறை—அடிமை
சுருதி—வேதம்
சுறுதி—சுறுசுறுப்பு
சுருக்கு—கட்டு, கண்ணி
சுறுக்கு—கதி, கூர்மை
சூரை—ஓர் செடி
சூறை—சுழல்காற்று
செரித்தல்—சமித்தல்
செறித்தல்—அழித்தல்
செரு—சண்டை
செறு—சிறுவயல்
செருத்தல்—எருமை பசு இவற்றின் மடி
செறுத்தல்—கொல்லல்
செருநர்—படைவீரர்
செறுநர்—பகைவர்
செருப்பு—காறெடுதோல்
செறுப்பு—கொலை
சொரிதல்—உதிர்தல்
சொறிதல்—பிறண்டல்
தரி—தரிப்பு
தறி—வெட்டு, நெய்வார்தறி
தரித்தல்—அணிதல்
தறித்தல்—வெட்டல்
திரம்—உறுதி
திறம்—திறமை
திரை—புனற்றிரை
திறை—அரசிறை
துரப்பு—துரத்துதல்
துறப்பு—துறவுகோல்
துரவு—கிணறு
துறவு—இல்லறநீங்கிநிற்றல்
துரை—அதிகாரி
துறை—நீர்த்துறை
தூரல்—வருத்தம்
தூறல்—மழைத்துளி
தூருதல்—வெளியடைதல்
தூறுதல்—மழைதுமித்தல்
தேரை—தவளையினோர்பேதம்
தேறை—ஓர்மீன்
நருக்கு—நருக்குதல்
நறுக்கு—துண்டித்தல்
நருக்குதல்—நொருக்குதல்
நறுக்குதல்—துண்டித்தல்
நரை—சாமரை
நறை—குற்றம்
நிரத்தல்—நிறைதல்
நிறத்தல்—நிறங்கொள்ளுதல்
நிருத்தம்—பதம்பிரித்தல்
நிறுத்தம்—சாயாமல் நிமிர்ந்து நிற்றல்
நிரை—ஒழுங்கு
நிறை—நிறுத்தலளவு
நிரைதல்—ஒழுங்கு
நிறைதல்—பூரணப்படுதல்
நீராடுதல்—ஸ்நானம்பண்ணல்
நீறுடுதல்—அழித்தல்
நெரி—நெரியென்னேவல்
நெறி—நீதி, வழி
பரத்தல்—பரம்புதல்
பறத்தல்—விரைவாயோடல்
பரப்பு—அகலம்
பறப்பு—அவசரம்
பரம்பு—கழனிதிருத்தும் பலகை
பறம்பு—மலை
பரவை—கடல்
பறவை—புள்
பரி—குதிரை
பறி—பறித்தல், பொன்.
பரை—பார்வதி, கூராயுதம்

பறை...சொல்
பாரை...ஓர் மீன்
பாறை...கற்பாறை முதலியன
பிரதாரம்...கடத்தல்
பிறதாரம்...பிறர்மனை
பிரப்பு...பேருண்டி
பிறப்பு...உற்பத்தி
பிரிதல்...அகலல்
பிறிதல்...நீங்குதல்
பீரு...புருவம், புலி
பீறு...கிழிவு
புரம்...நகரம்
புறம்...இடம், புறத்தி
பெருத்தல்...அதிகப்படல்
பெறுத்தல்...பெறுவித்தல்
பேரு...சமுத்திரம்
பேறு...இலாபம்
மரத்தல்...பிரமித்தல்
மறத்தல்...ஞாபகத்தவறு
மரித்தல்...சாதல்
மறித்தல்...தடுத்தல்
மரம்...விருட்சம்
மறம்...கொலை, கோபம்
மரிப்பு...சா
மறிப்பு...தடுப்பு
மருப்பு...மரக்கொம்பு
மறுப்பு...மறுக்குதல்
மருவல்...அணைதல்
மறுவல்...கஸ்தூரி மிருகம்
மரை...ஓர் மிருகம்
மறை...இரகசியம்
மாரி...மாரிகாலம், மழை
மாறி...மாறுடி, வேறுபட்டு
முரண்டு...மாறுபாடு
முறண்டு...முரண்டு
முரித்தல்...ஒடித்தல்
முறித்தல்...முரிதல்
முருக்கு...முருக்கென்னேவல்
முறுக்கு...ஓர் பணிகாரம்
முருக்குதல்...அழித்தல்
முறுக்குதல்...சினத்தல்
வரப்பு...எல்லை
வறப்பு...குறைவு
வரவு...வருகை
வறவு...கஞ்சி
வருமொழி...பின் வரும் வார்த்தை
வறுமொழி...பயனிலாப்பதம்
விரகு...உணர்வு
விறகு...ஓம விறகு
விரல்...அங்குலி
விறல்...வெற்றி
விரைத்தல்...விதைத்தல்
விறைத்தல்...மரத்து நிற்றல்
வெரு...அச்சம்
வெறு...வெறுமை

II. மொழிகளில் ல, ழ, ள, என்னும் எழுத்துகள் மாறிவருவதினால் உண்டாகும் பொருட்பேதங்கள்.

அலை...கடற்றிரை
அழை...அழையென்னேவல்
அளை...தயிர், மோர்
அலகு...பறவை மூக்கு
அழகு...சிறப்பு [வையின் பெண்
அளகு...கோழி, கூகை யல்லாதபற
அலி...பேடி
அழி...கெடு
அளி...கொடு
அல்...இருள்
அள்...அள்ளென்னேவல்
அவல்...தின்பண்டம்
அவள்...பெண்
ஆல்...ஆலமரம்
ஆள்...மனிதன்
ஆலம்...விஷம்
ஆழம்...பள்ளம்
ஆலி...அமுதம்
ஆழி...கடல்
ஆளி...ஆள்வோன், யாழி யாளி

இலை...தழை
இழை...நூற்கிற நூல்
இளை...மெலி, இலக்குமி
இழிவு...ஈனம் குற்றம்
இளிவு—இழிவு
உழி...இடம், பக்கம்
உளி ..தறிக்குங் கருவியினொன்று
உலை . கொல்லனுலை முதலாயின
உழை...பக்கம், மான்
உளை...ஆண்மயிர், சேறு
உல்லம்...ஓர் மீன்
உள்ளம்...மனம்
உழ...பண்படுத்த
உள...உண்டு
எலும்பு...முள்
எழும்பு . உயரு
எல்...பிரகாசம்
எள்...ஓர் தானியம்
ஒலி...சத்தம்
ஒழி...மறைந்துகொள்
ஒளி...பிரகாசம்
கலம்...ஓரளவு
களம்...தானியம் அடிக்குமிடம்
கலி...ஓர்யுகம்
கழி ..நீக்கு
களி . களிப்பு
கலை...கல்வி, ஆண்மகன்
கழை...கரும்பு, மூங்கில்
களை...அயர்வு, அழகு
கல்...மலை
கள்...மது
கல்வி ..ஆமை, ஊர்க்குருவி
கள்ளி...ஓர்மரம், திருடி
காலை...பொழுது
காளை...எருது
காலி...பசுக்கூட்டம்
காளி...பார்வதி
கிலி...பயம்
கிழி...கிழியென்னேவல்
கிளி...கிள்ளை
கீல்...ஓர் வஸ்து
கீழ்...கீழே
குலம்...கோத்திரம்
குளம் .தடாகம்
குழம்பு...பதார்த்தம்
குளம்பு...விலங்கின் குளம்பு
குலை...கொத்து
குழை...குண்டலம்
கூலி...சம்பளம்
கூளி...பசாசு, பெருங்கழுகு
கேழ் . உவமை, ஒளி, நிறம்
கேள்...கேளென்னேவல், உறவு
கொலு ..சேவை
கொழு...காறு
கொல்லி...ஓர்மலை
கொள்ளி...நெருப்புறு விறகு
கொல்...கொல்லென்னேவல்
கொள்...ஓர் தானியம்
கொல்லை...தோட்டம்
கொள்ளை...களவு
கோல்...ஊன்றுகோல்
கோள். .அவதூறு
கோலி...இலந்தைமரம்
கோழி...கோழி
கோளி...அத்திமரம்
சவலை...மெலிவு
சவளை...வங்கமணல்
சூல்...கருப்பம்
சூழ்...சுற்று
சூள்...ஆணை
சூலி...கருப்பிணி
சூழி...உச்சி
சூளி...ஆண்மயிர்
சூலை...ஓர்நோய்
சூளை...குயவன் சூளை
தலம்...இடம்
தளம்...சேனை
தலை . சிரசு
தழை...இலை
தளை...கால் விலங்கு
லம்...கூந்தற்பனை, தட்டம்
ளம்...காலவளவு

தாலி...மங்கலநாண்
தாழி...குடம், சாடி
தாளி...பனைமரம்
தால்...தாலாட்டு
தாழ்...தாழு, பணி
தாள்...கதவுறுதாள், பாதம்
துலை...நிறை, தராசு
துளை...துவாரம்
தொலை...தூரம்
தொளை...துவாரம்
தோல்...சருமம்
தோள்...புயம்
தோலி...ஓர்மீன்
தோழி...பாங்கி
தோளி...நீலி
நல்ல...நேர்த்தியான
நள்ள...சினேகிக்க
நலி...நோய்
நளி...குளிர்ச்சி
நுழை...நுழையென்னேவல்
நுளை...ஈனம்
பலம்...ஓர் நிறை
பழம்...கனி
பலி...பூசை, விண்ணோருணவு
பழி...குற்றம்
பல்லி...கெவுளி
பள்ளி...சிற்றூர்
பசலை...வேறுபட்டநிறம்
பசளை...வயலைக்கொடி
பால்...அமுதம்
பாழ்...அழிவு
பாலை...ஓர்மரம்
பாளை...கமுகு, தெங்கு, முதலியவற்றின பாளை
பாலம்...வாராவதி
பாளம்...துண்டு
புல்லி...புறவிதழ், நெருங்கி
புள்ளி...மறு
புலி...வேங்கை
புளி...புளிப்பு
புல்...புல்லு, அற்பம்
புள்...பறவை

புழுகு...புனுகு
புளுகு...பொய் (விட்டுப்புகும்வழி)
பூழை...துவாரம், கோபுரவாயிற்கதவி
பூளை...இலவம்பஞ்சு
பொலி...தூற்றுநெல்
பொழி...ஊற்று
பொளி...சுத்தியாலடி
போலி...இழிவான
போளி...அப்பவர்க்கம்
மலை...பருவதம்
மழை...குளிர்ச்சி, நீர்
மாலை...அந்திப்பொழுது
மாழை...அழகு, மாமரம்
முலை...கொங்கை
முழை...துடுப்பு
முளை...துளிர்விடு, ஆப்பு
மூலி...வேர்
மூழி...அகப்பை, மத்து
மூளி...அங்கவீனமுள்ள
மூலை...கோணம்
மூழை...அகப்பை, துடுப்பு
மூளை...எலும்பினுள்ளிருப்பது
வலி...நோவு
வழி...பாதை, வழியென்னேவல்
வளி...காற்று
வலை...மீன்பிடிக்குங்கருவி
வழை...சுரபுன்னைமரம்
வளை...கங்கணம், சங்கு
வலம்...வலி, வெற்றி
வளம்...அழகு
வாலை...பன்னிருவயதிற்பெண்
வாழை...வாழைமரம்
வாளை...ஓர் மீன்
வால்...மிருகங்களின்வால்
வாழ்...பிழைத்திரு
வாள்...கட்கம்
வாலி...இந்திரன்மகனாகிய வானரன்
வாழி...வாழ்வாயாக
வாளி...காதணி
விலா...பழு
விழா...விழவு

விளா...விளாமரம்
விழி...கண்
விளி...விளியென்னேவல்
விலை...கிரயம்
விளை...ஓர் மீன்
வெல்லம்...கரும்பின்கட்டி
வெள்ளம்...நீர்ப்பெருக்கு
வேல்...கைவேல்
வேள்...ஆண்மகன்
வேலை...தொழில்
வேளை...காலம்

III. மொழிகளில் ண, னக்கள் மாறி வருவதினால் உண்டாகும் பொருட்பேதங்கள்.

அண்ணம்—மேல்வாய்
அன்னம்—ஓர்பட்சி,சாப்பாடு
ஆணி—முளை
ஆனி—ஓர்மாதம்
ஆணை—சத்தியம்
ஆனை—யானை
உண்—தின்னு
உன்—உனது
ஊண்—சாப்பாடு
ஊன்—மாமிசம்
எண்—கணிதம்
என்—எனது
எண்ண—நினைக்க
என்ன—வினா
ஒண்ணார்—கூடாதவர்
ஒன்னார்—பகைவர்
கணம்—கூட்டம்
கனம்—மேன்மை
சானி—பெண்
சாணி—மாட்டுச்சாணி
சுண்ணம்—சுண்ணாம்பு
சுன்னம்—வட்டம்
திணை—வகுப்பு
தினை—ஓர்வகைதானியம்
நாண்—கயிறு
நான்—தன்மையொருமை
பணி—வேலை,குனி
பனி—பனிநீர்
பணை—பறை
பனை—ஓர்வகைமரம்
பாணம்—அம்பு
பானம்—ஜலவஸ்து
புணர்—பொருந்து
புனர்—மறுபடியும்
புணை—தெப்பம்
புனை—அலங்கரி
பேண்—காப்பாற்று
பேன்—பூச்சி
மணம்—வாசனை
மனம்—இருதயம்
மணை—ஓராசனம்
மனை—வீடு
மாண்—மாட்சிமைபடு
மான்—ஓர்வகைமிருகம்
வாணம்—வெடிமருந்து விளையாட்டு.
வானம்—ஆகாயம்.

APPENDIX E.

THE ORIGIN OF TAMIL.

தமிழ் மொழியின் வரலாறு.

இமயமலைக்கு வடக்கேயுள்ள மத்திய ஆசியாகண்டத்தில் வசித்திருந்த தமிழ்ப் பேசுஞ் சனங்கள், இந்தியாவின் வடமேற்குக் கணவாய்களின் வழியாக வந்து, இந்து நதி சமவெளியிலுங் கங்கைநதி சமவெளியிலுங் குடியேறினார்கள். சில நூற்றாண்டுகளுக்குப் பின்பு துரானியரென்று அழைக்கப்பட்ட மஞ்சள் நிறமுள்ள ஒரு ஜாதியார் வடகிழக்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவுள் புகுந்து, தமிழர்களைத் துரத்திவிட்டனர். அதுமுதல் தமிழர்கள் விந்திய மலையிலிருந்து கன்னியாகுமரி வரையில் வசித்து வந்தனர். இந்து நதி சமவெளியின் வடமேற்குப் பாகத்தில் ஒரு ஜாதியாரும், விந்திய மலையின் கிழக்கு முனையிலுள்ள சூடிய நாகபுரியில் மற்றொரு ஜாதியாருந் தமிழின் பாகதங்களை (சிதைந்த மொழிகளை) இன்னும் பேசி வருகின்றனர்.

ஆதியில் தமிழர்கள் யாவருந் தமிழென்ற ஒரே பாஷையைப் பேசிவந்தனர். அவர்கள் வெவ்வேறு இடங்களில் அமைந்த பின்னர், அவர்களுடைய பாஷை சிறிது சிறிதாக மாறுதலடைந்தது. தமிழ்ப்பாஷையினின்று தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் என்னும் வழிமொழிகள் கிளைத்தன. தமிழர்கள் வருகிறதற்குமுந்தி இந்தியாவிலிருந்த அதன் பூர்வகுடிகள் நீலகிரி முதலிய மலைச் சிகரங்களில் தற்காலத்தில் வசித்து வருகின்றனர்.

இந்தியாவிற்கு வடமேற்கிலுள்ள துர்க்கிஸ்தான் பெர்சியா முதலிய பல தேசங்களிலிருந்து சமஸ்கிருத பாஷை பேசும் ஆரியர் என்னப்பட்ட ஓர் ஜாதியார் இற்றைக்குச் சற்றேறக்குறைய 2500 - வருஷங்களுக்கு முன் வடமேற்குக் கணவாய் வழியாக இந்தியாவுக்குள் பிரவேசித்துத் துரானியர்களைத் துரத்தி விந்திய கிரிக்கும் இமயகிரிக்கும் மத்தியிலுள்ள நாடுகளைக்கைப் பற்றிக்கொண்டனர்.

ஆரியர் இந்தியாவில் புகுமுன்னரே, தமிழர் அராபிக்கடல் வழியாக இஜிப்ட் பலஸ்தீன முதலிய பல தேசங்களோடு வர்த்தகஞ்செய்து வந்தனர். மேலும் இந்துதேச முழுவதிலுஞ் சுமேத்திரா ஜாவா முதலிய பல தீவுகளிலுந் தமிழ்ப்பாஷையே பேசப்பட்டு வந்தது. அப்பொழுது இந்தியாவுக்குக் குமரி நாடென்று பெயர். தற்காலத்தில் இந்தியாவிலுள்ள பாஷைகளில் தமிழ்ப் பாஷையே ஆதிபாஷை யென்று சகல கல்விவந்தரும் ஒத்துக்கொள்ளுகின்றனர்,

THE COMBINATION OF SANSCRIT WORDS USED IN TAMIL.

பாரதம், இராமாயணம், பாகவத முதலிய பல வேதப் புஸ்தகங்கள் சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டபோது, அப்பாஷைக்குரிய பதங்களில் அநேகந் தமிழில் வழங்கப்பட வேண்டியதாயிருந்தது. தமிழில் அவைகளை உச்சரிக்கக்கூடிய எழுத்துகள் இல்லாததினால், சில சமஸ்கிருத எழுத்துகள் தமிழில் உபயோகிக்கப்பட்டு வருகின்றனவென்றறிக. ஆகையால், அவைகளுக்குரிய பிரதானமான எழுத்துப்புணர்ச்சி யிலக்கணத்தையீண்டு எடுத்துக் காட்டுகின்றோம்.

1. வடமொழித்தொகைப் பதங்கள் தமிழில் ஆங்காங்கு வருமிடத்துப் பெரும்பாலும் அவ்வடநூற் புணர்ச்சியே பெறும். அப்புணர்ச்சி தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி, தத்திதாந்தம் அல்லது ஆதிவிருத்தி சந்தி என நான்குவகைப்படும்.

2. அ, ஆக்களில் ஒன்றன்முன் அவ்விரண்டிலொன்று வந்தால் ஆவும்; இ, ஈக்களில் ஒன்றன்முன் அவ்விரண்டில் ஒன்று வந்தால் ஈயும் உ, ஊக்களில் ஒன்றன்முன் அவ்விரண்டிலொன்று வந்தால் ஊவும்; முறையே அந்நிலைமொழியீறும் வருமொழி முதலுங்கெடத் தோன்றுதல் தீர்க்க சந்தியாம்.

உதாரணம்:

(*a*) (அ, ஆ முன் அ, ஆ வரில் இரண்டும் ஆகாரமாம்.)

பத + அம்புயம் = பதாம்புயம், பரம + ஆனந்தம் = பரமானந்தம், கங்கா + அமிர்தம் = கங்காமிர்தம், சதா + ஆனந்தம் = சதானந்தம்.

(*b*) (இ, ஈ முன் இ, ஈ வரில் இரண்டும் ஈகாரமாம்.)

கிரி + இந்திர = கிரீந்திர, கிரி + ஈசன் = கிரீசன், மகீ + இந்திரன் = மகீந்திரன், மகீ + ஈசன் = மகீசன்.

(*c*) (உ, ஊ முன் உ, ஊ வரில் இரண்டும் ஊகாரமாம்.)

குரு + உதயம் = குரூதயம், தரு + ஊனம் = தரூனம்; சுயம்பூ + உபதேசம் = சுயம்பூபதேசம், சுயம்பூ + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம்.

3. (அ, ஆக்களில் ஒன்றன்முன் இ, ஈக்களில் ஒன்று வந்தால் ஏயும்; அவ்விரண்டில் ஒன்றன்முன் உ, ஊக்களில் ஒன்றுவந்தால் ஓவும்; முறையே அந்நிலை மொழியீறும் வருமொழி முதலுங்கெடத் தோன்றுதல் குணசந்தியாம்.

உதாரணம்:

(*a*) (அ, ஆ முன் இ, ஈ வரில் இரண்டும் ஏகாரமாம்.)

நர + இந்திரன் = நரேந்திரன், சுர + ஈசன் = சுரேசன், தரா + இந்திரன் = தரேந்திரன், உமா + ஈசன் = உமேசன்,

(b) (அ, ஆ முன் உ, ஊ வரில் இரண்டும் ஓகாரமாம்.)

பாத + உதகம் = பாதோதகம்; ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன்; தயா + உற்பத்தி = தயோற்பத்தி, தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்.

4. அ, ஆக்களில் ஒன்றன்முன் ஏ, ஐக்களில் ஒன்று வந்தால் ஐயும் அவ்விரண்டில் ஒன்றன்முன் ஓ, ஔக்களில் ஒன்று வந்தால் ஔவும் முறையே அந்நிலைமொழியீறும் வருமொழி முதலுங்கெடத் தோன்றுதல் விருத்தி சந்தியாம்.

உதாரணம்:

(a) (அ, ஆ முன் ஏ, ஐ வரில் இரண்டும் ஐகாரமாம்.)

சிவ + ஏகம் = சிவைகம், ஞான + ஐக்கியம் = ஞானைக்கியம், தரா + ஏகவீரன் = தரைகவீரன், மகா + ஐசுவரியம் = மகைசுவரியம்.

(b) (அ, ஆ முன் ஓ, ஔ வரில் இரண்டும் ஔகாரமாம்.)

கோமள + ஓடதி = கோமளௌடதி, திவ்விய + ஔடதம் = திவ்வியௌடதம், மகா + ஓடதி = மகௌடதி. மகா + ஔடதம் = மகௌடதம்.

5. ஒருமொழியுள்ளே மொழிக்கு முன்னே நின்ற இ, ஈ, ஏக்கள் ஐ ஆகவும்; உ, ஊ, ஓக்கள் ஔ ஆகவும்; அகரம் ஆகாரமாகவும்; சமஸ்கிருத பாஷையில் ஏழாம் உயிராகிய "இரு" "ஆர் ஆகவுந் திரிந்து வருதல் தத்திதாந்தம் அல்லது ஆதிவிருத்தி சந்தியாம்."

உதாரணம்:

சிவனைத் தொழுவோன்—சைவன், வீரத்தின தன்மை—வைரம், கேவலத்தின் தன்மை—கைவல்லியம், புத்தனைத் தொழுவோன்—பௌத்தன், சூரன் தன்மை—சௌரியம், கோசலையிற் பிறந்தாள்—கௌசலை, தசரதன் புத்திரன்—தாசரதி, கிர்த்திகையின் புத்திரன்—கார்த்திகேயன்.

குறிப்பு:—கார்த்திகேயன் என்னுமிடத்து இறுதியிலிருக்கின்ற ஏயன் என்னும் விகுதி மகனென்னும் பொருளையுணர்த்தி நிற்றல் காண்க.

6. வடமொழித் தொகைநிலைத்தொடருள் நிலைமொழியேனும் வருமொழியேனும் அவ்விரண்டுமேனுந் தமிழை நோக்கி விகாரமுற்ற விடத்தும் நிலைமொழியேனும் வருமொழியேனுந் தமிழ் மொழியாகிய விடத்துந் தமிழ் நூற் புணர்ச்சி விதியைப் பெற்றுவரும்.

உதாரணம்:—கங்கைச்சடை, மாயைக்குணம் எனவும்; அளிக்கூட்டம், மூலைத்தடம் எனவும் வரும்.

7. உயிரீற்று வடமொழியின் முன் க, ச, த, பக்களை முதலிலுடைய வடமொழி வந்தால் இயல்பாம்.

உதாரணம்:—ஆதிபகவன், மணிகண்டன், கங்கை புத்திரன்.

மேற்கண்ட 2, 3, 4 இம்மூன்று சூத்திரங்களிலுள்ள உதாரணப்பதங்களுக்கு அருத்தம்.

தீர்க்க சந்தி.

1. பதாம்புயம் (பத-பாதம், அம்புயம்-கமலம்) = தாமரைபோன்ற பாதம்.
2. பரமானந்தம் (பரம-மேலான. ஆனந்தம்-சந்தோஷம்) = மேலான சந்தோஷம்.
3. கங்காமிர்தம் (கங்கா-கங்கைநதி, அமிர்தம்-நீர்) = கங்கையின் நீர்.
4. சதானந்தம் (சதா-நித்ய, ஆனந்தம்-சந்தோஷம்) = நித்ய சந்தோஷம்.
5. கிரீந்திர (கிரி-மலை, இந்திர-சிரேஷ்டமான) = சிரேஷ்டமான மலை.
6. கிரீசன் (கிரி-மலை, ஈசன்-அதிபதி) = மலையரசன்.
7. மகீந்திரன் (மகி-பூமி, இந்திரன்-இந்திரனை யொத்தவன்) = பூமிக்கு இந்திரனை யொத்தவன்.
8. மகீசன் (மகி-பூமி, ஈசன்-அதிபதி) = பூமிக்கு அதிபதி.
9. குருதயம் (குரு-பிரகஸ்பதி, உதயம்-தோற்றம்) = பிரகஸ்பதி கிரகத்தின் தோற்றம்.
10. தரூனம் (தரு-மரம், ஊனம்-கேடு) = மரக்கேடு.
11. சுயம்பூபதேசம் (சுயம்பு-பிரமா, உபதேசம்-போதனை) = பிரமபோதனை.
12. சுயம்பூர்ச்சிதம் (சுயம்பு-பிரமா, ஊர்ச்சிதம்-நிலைபெற்றது) = பிரமாவினால் நிலைபெற்றது.

குண சந்தி.

1. நரேந்திரன் (நர-மனுஷன், இந்திரன்-தலைவன்) = மனுஷரில் தலைவன் (அரசன்)
2. சுரேசன் (சுர-தேவ, ஈசன்-அதிபதி) = தேவர்களின் அதிபதி (தேவேந்திரன்)
3. தரேந்திரன் (தரா-பூமி, இந்திரன்-இந்திரனைப்போன்றவன்) = பூமிக்கு இந்திரனைப் போன்றவன்.
4. உமேசன் (உமா-பார்வதி, ஈசன்-அதிபதி) = பார்வதி தலைவன் (சிவன்)
5. பாதோதகம் (பாத-காலடி, உதகம்-நீர்) = காலடியின் நீர்.
6. ஞானோர்ச்சிதன் (ஞான-அறிவு, ஊர்ச்சிதன்-நிலைபெற்றவன்) = அறிவினால் நிலைபெற்றவன்.

7. தயோற்பத்தி (தயா-இரக்கம், உற்பத்தி-பிறப்பு)=இரக்கத்தின் பி
8. தயோர்ச்சிதன் (தயா-இரக்கம், ஊர்ச்சிதன்-நிலைபெற்றவன்)=தயவினால் நிலைபெற்றவன்.

விருத்தி சந்தி.

1. சிவைகம் (சிவ-சுபம், ஏகம்-ஒன்று)=சுபங்களில் ஒன்று.
2. ஞானைக்கியம்(ஞான-அறிவு, ஐக்கியம்-கலத்தல்)=அறிவோடு கலத்தல்
3. தரைகவீரன்(தரா-பூமி, ஏகம்-ஒன்று, வீரன்-வீரன்)=பூமியில் ஒன்றான வீரன்.
4. மகைசுவரியம் (மகா-அதிக, ஐசுவரியம்-செல்வம்)=அதிகச் செல்வம்.
5. கோமளௌடதி (கோமள-செழிப்பான, ஓடதி-பூண்டு) = செழிப்பான (மருந்து) பூண்டு.
6. திவ்வியௌடதம் (திவ்விய-மேலான, ஔடதம்-மருந்து)= மேலான மருந்து.
7. மகௌடதி (மகா-மேலான, ஓடதி-பூண்டு)=மேலான மருந்து பூண்டு.
8. மகௌடதம் (மகா-மேலான, ஔடதம்-மருந்து)=மேலான மருந்து

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL
MADRAS-1
சென்னை-1